

அனர்த்த முகாமைத்துவ நிலையம்

வருடாந்த அறிக்கை - 2016

அனர்த்த முகாமைத்துவ நிலையம்.



முகவரி

வித்யா மாவத்தை
கொழும்பு 07

வெப் தளம்

www.dmc.gov.lk

மின்னஞ்சல்

info@dmc.gov.lk

அவசர நடவடிக்கை அழைப்பு

0112136222 / 2670002

வருடாந்த அறிக்கை – 2016

1		அறிமுகம்	1
	1.1	அனர்த்த முகாமைத்துவத்திற்கான தேசியப் பேரவை	1
	1.2	அனர்த்த முகாமைத்துவ விடயப் பரப்புக்குள் வருகின்ற அனர்த்தங்கள்	2
2		அனர்த்த முகாமைத்துவ நிலையம் பற்றிய ஒரு சிறிய அறிமுகம்	3
	2.1	நோக்கு, பணி மற்றும் நோக்கம்	3
	2.2	அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் செயற்பாடுகள்	3
	2.3	அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நிறுவனரீதியான கட்டமைப்பு	4
	2.4	அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் பதவியணி ஆட்சேர்ப்புச் செய்யப்படுதல	5
	2.4.1	பதவியணி ஆட்சேர்ப்புச் செய்யப்படுதல	5
	2.4.2	மாவட்ட அனர்த்த முகாமைத்துவ இணைப்பாக்க அலகுகள	6
	2.5	2016 ஆம் ஆண்டு ஏற்பட்ட அனர்த்த நிலைமைகள் பற்றிய பணிப்பாளர் நாயகத்தின் கூற்று	7
	2.5.1	அனர்த்தங்களுக்கான தாக்கம் பற்றிய பகுப்பாய்வு - 2016	7
	i	ஒட்டுமொத்த தாக்கம் - 2016	7
	ii	வீடுகளுக்கான சேதங்கள - 2016	7
	iii	முழுமையான சேதங்கள் பகுதியளவான சேதங்கள் - 2016	8
	iv	மரணங்கள் /காணாமற்போதல்கள் மற்றும் காயங்கள	9
	v	அனர்த்தங்களுக்கான தாக்கம் மாவட்டங்களின் பிரகாரம் - 2016	9
	vi	அனர்த்தங்களுக்கான தாக்கத்தின் சுருக்கம்- 2016	11
3		தேசிய மட்ட பிரதான செயற்பாடுகள	11
	3.1	அனர்த்த முகாமைத்துவ சட்டத்தினைத் திருத்துதல்	11
	3.2	தேசிய அவசர நடவடிக்கைத் திட்டம் (தே.அ.ந.தி.)	11
	3.3	நிறுவனம்சார் அனர்த்த முன் தயார்நிலைத் திட்டம் (IDMP)	11
	3.4	இடைக்கால முகாமைத்துவக் குழு	12
	3.5	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு	12
	3.6	தேசிய பாதுகாப்புத் தினம் - 2016	13
	3.7	தேசிய அனர்த்த முகாமைத்துவ இணைப்பாக்கக் குழு	13
	3.8	அவசர நிலைமை பதிற்செயற்பாட்டுக் குழு (அ.ப.கு)	14
	3.9	அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கான உத்தியோகபூர்வ இணையத்தளம்	14
	3.10	Desinventra தரவுக் கலஞ்சியம்	14
4		அனர்த்தங்களைக் குறைத்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு	15
	4.1	மாவட்ட மட்டத்தில் அனர்த்தங்களைக் குறைத்தல	15
	4.2	தம்புள்ள வெள்ளப் பெருக்கு அனர்த்தத்தினைக் குறைப்பதற்கான கருத்திட்டம	19

	4.3	அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கான இணையத்தளம்	20
	4.4	Desinventra தரவுக் கலஞ்சியம	20
	4.5	இசைவாக்கம் அடையச்செய்தல	20
5		முன் தயார்நிலை திட்டப் பிரிவு	21
	5.1	அறிமுகம்	21
	5.2	மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் அனர்த்த முன் தயார் நிலை மற்றும் அவசர சந்தர்ப்ப பதிற்செயற்பாட்டு திட்டங்களைத் தயாரித்தல்	23
	5.3	கிராம சேவகர் பிரிவு மட்டங்களில் சமுதாய முன் தயார் நிலை மற்றும் அவசர நிலைமை பதிற்செயற்பாட்டு திட்டங்களைத் தயாரித்தல	25
	5.4	தேசிய/ மாவட்ட/ பிரதேச மட்ட ஒத்திகை நிகழ்ச்சிகள	25
	5.5	கிராம சேவகர் பிரிவு மட்டத்தில் ஒத்திகை நிகழ்ச்சிகள	26
	5.6	பாரிய நீர்த்தேக்கங்களை, அணைகளை அண்டிய பேரழிவுகள் தொடர்பான முன்தயார்நிலை நடவடிக்கைகள்	27
	5.7	நாட்டில் நீரில் மூழ்குவதன் காரணமாக ஏற்படுகின்ற மரணங்களின் எண்ணிக்கையைக் குறைத்தல்	27
	5.8	பருவப்பெயர்ச்சி முன் தயார்நிலைத் திட்டங்கள	28
	5.9	வைத்தியசாலைகள் அவசர முன் தயார் நிலைத் திட்டங்களைத் தயாரித்தல	28
	5.10	பாடசாலைகளுக்கான அனர்த்த பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்கள	29
	5.11	2016 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஏனைய முன் தயார் நிலைச் செயற்பாடுகள்	29
	5.11.1	பதுளை மாவட்ட அனர்த்த ஆபத்துகள் பற்றிய வரைபடங்கள் மற்றும் ஐந்து வருட உபாய மார்க்கத்திட்டம் தயாரிக்கப்படுதல்	29
	5.11.2	நிபோன் பரிமாற்று நிகழ்ச்சித்திட்டம்- 2016	29
6		விழிப்பூட்டல் பிரிவு	30
	6.1	தேசிய மட்ட நிகழ்ச்சித்திட்டங்கள	31
	6.2	மாவட்ட மட்ட நிகழ்ச்சித்திட்டங்கள	32
7		அவசர கருமமாற்றல் பிரிவு	35
	7.1	அனர்த்தத்திற்குப் பின்னரான முகாமைத்துவ நடவடிக்கைகளை இணைப்பாக்கம் செய்தல்	36
	7.2	முன்னறிவித்தல்கள்	40
8		2016 டிசெம்பர் 31ஆந் திகதியில் நிறைவடையும் வருடத்துக்கான நிதித் தேர்ச்சி	44
9		2016 டிசெம்பர் 31ஆந் திகதியில் நிறைவடையும் வருடத்துக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை	64
10		2016 டிசெம்பர் 31ஆந் திகதியில் நிறைவடையும் வருடத்துக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில் அறிக்கை	81

வருடாந்த அறிக்கை

1. அறிமுகம்

இலங்கையில் காணப்படுகின்ற அனர்த்த முகாமைத்துவத்திற்கான பிரதான நிறுவனமானது அனர்த்த முகாமைத்துவ நிலையமாகும். சம்பந்தப்பட்ட சகல தரப்பினர்களினதும் ஒத்துழைப்போடு அனர்த்தங்களைக் குறைப்பதற்காக தேசிய மற்றும் பிரதேச மட்ட நிகழ்ச்சித்திட்டங்களை இணைப்பாக்கம் செய்தல் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்துதல் ஆகிய பொறுப்புகள் இந்நிறுவனத்திற்கே ஒப்படைக்கப்பட்டுள்ளன.


பேரழிவு முகாமைத்துவத்திற்கான தேசிய சபையின் தொழிற்பாட்டு நிறுவனமாக 2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த நிறுவனம் தாபிக்கப்பட்டுள்ளது. தேசியக் கொள்கையை வகுத்தல் மற்றும் மூலோபாய வழிகாட்டல்களைப் பெற்றுக்கொடுத்தல் பற்றிய பணியானது தேசிய சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதோடு அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் அதற்கான வழிகாட்டல்கள் வழங்கப்படுகின்றன. பதிற்செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட பொறிமுறையிலிருந்து விலகி முற்போக்குவாத பிரவேசமொன்றைப் பெற்றுக்கொள்வதன் பொருட்டு கொள்கை ரீதியான நகர்வொன்றில் ஈடுபட்டு இலங்கையில் பேரழிவு முகாமைத்துவத்தை முழுமையாக உள்வாங்குகின்ற பேரழிவு ஆபத்துக்களைக் குறைக்கும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கான பணிச்சட்டகமாக 2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டம் மாறியது.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஒரு பிரதான பணி யாதெனில் அனர்த்தங்களைக் குறைத்தல், முன் தயார்நிலைத் திட்டங்களைத் தயாரித்தல், பொதுமக்களை விழிப்பூட்டுதல், அபாயநேர்வு நிலையிலுள்ள மக்களுக்கு முன்னெச்சரிக்கைகளை விடுத்தல், அவசர சந்தர்ப்பங்களிலான தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் ஏனைய பிரதான நிறுவனங்களுடன் இணைந்து நிவாரணங்களையும் பேரழிவுக்குப் பின்னரான நடவடிக்கைகளையும் இணைப்பாக்கம் செய்தல் ஆகும். பிரதேச மட்டத்தில் பேரழிவு ஆபத்து நிலைமைகளை குறைப்பதற்கான நடவடிக்கைகளை சகல மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்துவதற்காக மாவட்ட பேரழிவு முகாமைத்துவ இணைப்பாக்க அலகுகள் அமைக்கப்பட்டுள்ளன.

1.1 அனர்த்த முகாமைத்துவத்திற்கான தேசியப் பேரவை

2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவ சட்டத்தில காட்டப்பட்டுள்ளவாறு அனர்த்த முகாமைத்துவத்திற்கான தேசியப் பேரவையானது 2005 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது. இது அனர்த்த முகாமைத்துவதற்கான பிரதான நிலையமாக அமைந்துள்ளதோடு அதிமேதகு ஜனாதிபதியின் தலைமைத்துவமும் கௌரவ அமைச்சரின் உப தலைமைத்துவமும் கொண்டுள்ள மேல்மட்ட அமைச்சுக்களுக்கிடையிலான பிரதிநிதித்துவம் கொண்ட ஒரு நிறுவனமாகும். அனர்த்த முகாமைத்துவ தேசியப் பேரவையின் ஏனைய அங்கத்தவர்களாக விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தெரிவு செய்யப்பட்ட விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சர்களும், மாகாண சபைகளின் முதலமைச்சர்களும் (முதலமைச்சர் பங்கேற்க முடியாத பட்சத்தில் குறிப்பிட்ட மாகாண சபையின் ஆளுநர்) மற்றும் எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஐந்து உறுப்பினர்களும் உள்ளடங்கிய ஒரு குழு காணப்படுகின்றது. (குறிப்பு 1.1)

அனர்த்த முகாமைத்துவத்திற்கான தேசியப் பேரவையின் அமைப்பு



குறிப்பு. 1.1: தேசியப் பேரவையின் அமைப்பு

1.2 அனர்த்த முகாமைத்துவ விடயப் பரப்புக்குள் வருகின்ற அனர்த்தங்கள்

2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் அனர்த்த முகாமைத்துவத்தின் கீழ் வருகின்ற அனர்த்தங்கள் பின்வருமாறு அமைந்துள்ளன,

- மண்சரிவு
- சூறாவளி
- வெள்ளப்பெருக்கு
- வறட்சி
- கைத்தொழில அனர்த்தம்
- சுனாமி
- நில அதிர்வு
- விமான அனர்த்தம்
- கடல் அர்த்தம்
- தீ
- தொற்றுநோய்
- வெடிப்புச் சம்பவங்கள்
- வான் தாக்குதல்
- சிவில் அல்லது உள்ளக கிளர்ச்சி
- இரசாயன பொருட்களினால் ஏற்படும் ஆபத்துக்கள்
- கதிர் சம்பந்தப்பட்ட அவசரமான சந்தர்ப்பங்கள்
- உள்ளக மற்றும் கடல் கசிவுகளை உள்ளிட்ட எண்ணை கசிவுகள்
- அணு பேரழிவுகள்
- நகரங்களில் மற்றும் காடுகளில் ஏற்படும் தீ
- கடல் அரிப்பு மற்றும்
- டொனாடோ, இடி மின்னல் உடனான சூறாவளி

2. அனர்த்த முகாமைத்துவ நிலையம் பற்றிய ஒரு சிறிய அறிமுகம்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள தேசிய பொறுப்பாக அமைவது யாதெனில், பணிப்பாளர் நாயகத்தின் தலைமைத்துவத்தின் கீழ் காணப்படுகின்ற 5 பிரிவுகளைக் கொண்டமைந்த நாட்டின் அனர்த்த முகாமைத்துவ பொறிமுறையினை நடைமுறைப்படுத்துவதாகும். இதன்படி அதன் பிரதான பிரிவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

1. அனர்த்தங்களைக் குறைத்தல், ஆய்வு மற்றும் அபிவிருத்திப் பிரிவு
2. முன் தயார் நிலை மற்றும் திட்டமிடல் பிரிவு
3. பயிற்சி மற்றும் விழிப்பூட்டல் பிரிவு
4. அவசர நடிவடிக்கைகள் முன்னெச்சரிக்கை விடுத்தல் பிரிவு
5. மனித வளம் மற்றும் நிதிப் பிரிவு

இத்தேசிய பொறுப்பினை நாடு தழுவிய ரீதியில் நடைமுறைப்படுத்துவதற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் கீழ் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ இணைப்பாக்க அலகுகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் தாபிக்கப்பட்டு அனர்த்த முகாமைத்துவ பொறிமுறையானது வினைத்திறனுடனும் ஆக்க விளைவுடனும் நாட்டில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

2.1 நோக்கு, இலட்சியப் பணி மற்றும் குறிக்கோள்

I. நோக்கு

இலங்கையில் பாதுகாப்பானதோர் சமுதாயத்தை உருவாக்குவதன் மூலம் நிலைபேறான அபிவிருத்தியை அடைந்துகொள்ளுதல்.

II. இலட்சியப் பணி

இயற்கை, தொழில்நுட்பம் மற்றும் மனிதன் என்போரால் மேற்கொள்ளப்படுகின்ற பேரழிவுகளின் ஆபத்துக்களை முறையாக முகாமை செய்வதன் மூலம் சமுதாயங்களுக்கு மத்தியில் பொதுவாக ஒட்டுமொத்த தேசத்தினதும் பாதுகாப்பு கலாசாரமொன்றை உருவாக்குதல்.

III. குறிக்கோள்

அமைச்சுக்கள், திணைக்களங்கள், நியதிச் சட்ட சபைகள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள், மாவட்டங்கள், பிரதேச மற்றும் கிராம சேவையாளர் பிரிவுகள் ஆகிய நாடு தழுவிய ரீதியான நிருவாகக் கட்டமைப்பின் மூலம் பின்வரும் பணிகளை இணைப்பாக்கம் செய்தல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல்.

2.2 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் செயற்பாடுகள்


அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகள் பின்வருமாறு அமைகின்றன.

- தேசிய கொள்கையின் அடிப்படையில் தேசிய பேரழிவு முகாமைத்துவத் திட்டமொன்றையும் தேசிய அவசர சந்தர்ப்பங்களுக்கான தொழிற்பாட்டுத் திட்டமொன்றையும் உருவாக்குதல்.
- பேரிடர்களை வரைபடமாக்குதல் மற்றும் ஆபத்து நிலைமைகளை மதிப்பிடுதல்.
- பயிற்சி மற்றும் விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை இணைப்பாக்கம் செய்தலும் நடாத்துதலும்.

- முன் தாயார்நிலைத் திட்டங்களைத் தயாரிப்பதற்காக அரச நிறுவனங்களுக்கு உதவியளித்தல் உள்ளிட்ட பேரழிவுகளுக்கு பதிற்செயற்பாடு காட்டுவதற்கு முன் தயார்நிலை செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துதல்.
- முன்னெச்சரிக்கை விடுத்தலும் அவற்றைப் பிரச்சாரம் செய்வதும்.
- அவசர நிலைமை நடவடிக்கைகளை முகாமை செய்தல் மற்றும் சோதனைகள் மற்றும் மீட்பு நடவடிக்கைகள் என்பவற்றை இணைப்பாக்கம் செய்தல்.
- நிவாரணங்களை விநியோகித்தல் உள்ளிட்ட பேரழிவுக்குப் பின்னரான நடவடிக்கைகளை இணைப்பாக்கம் செய்தல்.
- அனர்த்தங்களைக் குறைத்தல்.
- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள்.
- அனர்த்த ஆபத்து நிலைமைகளைக் குறைத்தல் மற்றும் அபிவிருத்தி செயன்முறையில் இணைத்தல்
- காலநிலை மாற்றங்களுக்கு இசைவாக்கம் அடையும் நிகழ்ச்சித்திட்டங்களை இணைப்பாக்கம் செய்தல்.
- உரிய நேரத்தில் தமது பொறுப்புக்கள் நிறைவேற்றப்படுவதனை பொறுப்புப் பார்த்துக்கொள்வதற்காக பேரழிவு ஆபத்துத் தன்மைகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்பாக அமைச்சுக்கள், திணைக்களங்கள், முப்படையினர், பொலீஸ் உத்தியோகத்தர்கள், தனியார் துறை நிறுவனங்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள், சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் பிற உரிய நிறுவனங்கள் என்பவற்றோடு இணைந்து செயற்படுதல்.
- அனர்த்தங்களைக் குறைத்தல், அவற்றுக்கு பதிற்செயற்பாடு காட்டுதல் மற்றும் பேரழிவுகளுக்குப் பின்னர் வழமை நிலைக்குத் திரும்புவதற்காக வெளிநாட்டு உதவிக் கருத்திட்டங்களை இணைப்பாக்கம் செய்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.

2.3 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நிறுவனக் கட்டமைப்பு

குறிப்பில் காட்டப்பட்டுள்ளவாறு அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பல்வேறுபட்ட நிகழ்ச்சித்திட்டங்களைக் கருத்திற்கொண்டு இந்நிறுவனக் கட்டமைப்பு தயாரிக்கப்பட்டுள்ளது. (2.1)



குறிப்பு 2.1: அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நிறுவனக் கட்டமைப்பு

2.4 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் பதவியணி ஆட்சேர்ப்புச் செய்யப்படுதல்.

2.4.1 பதவியணி ஆட்சேர்ப்புச் செய்யப்படுதல்.

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட புதிய ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறையின் பிரகாரம் பதவியணியினர் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதுடன் வருட இறுதியில் தலைமையகத்திலும் மாவட்ட மட்டத்திலும் காணப்பட்ட வெற்றிடங்களுள் 8.7% நிரப்பப்பட்டது. சில பதவிகளுக்கு உரியதாக நிறுவனத்தில் ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை தகைமைகள் சம்பந்தமாக காணப்படுகின்ற சிக்கல் நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டு பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாது போயுள்ளது. மேற்படி சிக்கல்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளன. கீழே 2.1 அட்டவணையில் 2016 ஆம் ஆண்டு நிரப்பப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கையும், 2.2 அட்டவணையின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட மொத்த ஊழியர் எண்ணிக்கையும், நிரப்பப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கையும் 2016.12.31 ஆம் திகதியில் காணப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கையும் தரப்பட்டுள்ளன.

பதவி	எண்ணிக்கை
கணக்கு உத்தியோகத்தர்	01
முகாமைத்துவ உதவியாளர்	03
சாரதி	02
அலுவலக உதவியாளர்	04

அட்டவணை 2.1: 2016 ஆம் ஆண்டு நிரப்பப்பட்ட வெற்றிடங்கள்

ஊழியர் வகை	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை	தற்போதுள்ள ஊழியர் எண்ணிக்கை	வெற்றிடங்களின் எண்ணிக்கை
பணிப்பாளர் நாயகம்	1	1	0
மேலதிக பணிப்பாளர் நாயகம்	1	1	0
பணிப்பாளர்	6	3	3
உள்ளகக் கணக்காய்வாளர்	1	1	0
பிரதிப் பணிப்பாளர்	18	0	18
உதவிப் பணிப்பாளர்	15	13	2
உதவிப் பணிப்பாளர் (மாவட்டம்)	25	18	7
கணக்கு உத்தியோகத்தர்	1	1	0
நிர்வாக உத்தியோகத்தர்	1	1	0
தனிப்பட்ட உதவியாளர்	1	0	1
புலனாய்வு உத்தியோகத்தர்	1	0	1
புவித் தகவல்கள் தரவு முறைமைப் பகுப்பாளர்	1	0	1
தரவுத் தொகுதி பகுப்பாய்வாளர்	1	0	1
நூலகர்	1	0	1
அபிவிருத்தி உதவியாளர்	1	1	0
மொழிபெயர்ப்பாளர்	2	0	2
தகவல் தொழில்நுட்ப உதவியாளர்	6	0	6
புகைப்படக் கலைஞர்	1	0	1
தொடர்பாடல் தொழில்நுட்ப அலுவலர்	3	0	3
வானொலி இயக்குனர்	1	0	1


முகாமைத்துவ உதவியாளர்/ அனர்த்த முகாமைத்துவ உதவியாளர்	182	145	37
சாரதி	39	35	4
அலுவலக உதவியாளர்	35	10	25
மொத்தம்	**344**	**230**	**114**

அட்டவணை **2.2:** 2016-12-31 திகதியில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் காணப்பட்ட ஊழியர் எண்ணிக்கை

2.4.2 மாவட்ட அனர்த்த முகாமைத்துவ இணைப்பாக்க அலகுகள்

மாவட்ட அனர்த்த முகாமைத்துவ இணைப்பாக்க அலகுகள் 25 மாவட்டங்களிலும் தாபிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ இணைப்பாக்க அலகிலும் உதவிப்பணிப்பாளர் ஒருவர் பணியாற்றுவதோடு (மாவட்டம்) அது மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவியாளர் ஒருவரைக்கொண்டு அமைந்துள்ளது. ஏதேனும் ஒரு மாவட்டம் அனர்த்தத்திற்கு உள்ளாகக்கூடிய இயலுமையை அடிப்படையாகக் கொண்டு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவியாளர் எண்ணிக்கையானது மாவட்டத்திற்கு மாவட்டம் மாற்றம்பெறும். 25 உதவிப் பணிப்பாளர்களையும் (மாவட்டம்) 100 மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவியாளர்களையும் கொண்டு இந்த மாவட்ட அனர்த்த முகாமைத்துவ இணைப்பாக்க அலகுகள் அமைந்துள்ளன.

கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மற்றும் புத்தளம் ஆகிய மாவட்ட அனர்த்த முகாமைத்துவ இணைப்பாக்க அலகுகளுக்கு 132 இராணுவ மற்றும் வான் படை வீரர்கள் இணைக்கப்பட்டுள்ளனர். களுத்துறை மாவட்டம் தவிர்ந்த ஏனைய அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ இணைப்பாக்க அலகுகள் மாவட்டச் செயலகங்களில் தாபிக்கப்பட்டுள்ளன. மாவட்ட அனர்த்த முகாமைத்துவ இணைப்பாக்கப் பொறிமுறையானது கீழே 2.2 படத்தில் காட்டப்பட்டுள்ளது.



குறிப்பு . 2.2: மாவட்ட அனர்த்த முகாமைத்துவ இணைப்பாக்கப் பொறிமுறை

2.5 2016 ஆம் ஆண்டு ஏற்பட்ட அனர்த்த நிலைமைகள் பற்றிய பணிப்பாளர் நாயகத்தின் கூற்று

2.5.1 அனர்த்தங்களுக்கான தாக்கம் பற்றிய பகுப்பாய்வு - 2016

i. ஒட்டுமொத்த தாக்கம் - **2016**


வெள்ளப்பெருக்கு, மண்சரிவு, பலமான காற்று மற்றும் மின்னல் தாக்கம் என்பவற்றின் காரணமாக பாதிக்கப்பட்ட மொத்த மக்களின் எண்ணிக்கையானது சுமார் 1,525,196 ஆகும். கடந்த 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிகரிப்பு காணப்படுகின்றது. மரணித்தவர்களின் எண்ணக்கை மற்றும் காயமுற்றோரின் எண்ணிக்கை முறையாக 140 மற்றும் 70 ஆகும். மேலும் 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் சேதமடைந்த மற்றும் அழிவுற்ற வீடுகளின் எண்ணிக்கையானது சிறிதளவில் அதிகரித்துள்ளது.


அனர்த்தம்	வருடம்		
	2014	2015	2016
மரணங்கள் / காணாமற்போதல்கள்	154	123	262
காயங்கள்	80	69	70
அனர்த்தங்களுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை	2,702,545	535,744	1,525,196
வீடுகள் (முழுமையான சேதங்கள்)	5,312	685	791
வீடுகள் (பகுதியளவான சேதங்கள்)	19,495	6,438	6,934

அட்டவணை 2.3: அனர்த்தங்களால் ஏற்பட்ட பாதிப்புக்கள்

வீடுகளுக்கான சேதங்கள்

அனர்த்தத்தின்தாக்கம்







ii. வீடுகளுக்கான சேதங்கள்

சேதமடைந்த மற்றும் அழிவுற்ற அதிகளவான வீடுகளின் எண்ணிக்கையானது 2016 ஆம் ஆண்டு மே மாதம் பதிவாகி உள்ளது. அந்த எண்ணிக்கையானது 5776 ஆகும். மண்சரிவு மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக அதிகளவான சேதம் பதிவாகி உள்ளது. சேதமடைந்த அதிகளவான வீடுகள் கேகாலை மாவட்டத்தில் பதிவாகி உள்ளது. அதாவது மண்சரிவு காரணமாக 1900 வீடுகள் சேதமடைந்துள்ளன.


கொழும்பு, களுத்துறை, கம்பஹ ஆகிய மாவட்டங்களிலும் அதிகளவான சேதங்கள் பதிவாகியுள்ளன.

அழிவுற்ற வீடுகள்/பகுதியளவாக சேதமுற்ற வீடுகள்





iii. முழுமையான சேதங்கள் பகுதியளவான சேதங்கள்




சுமார் 791 வீடுகள் அழிவுற்றுள்ளதோடு 6934 க்கும் அதிகமான வீடுகள் சேதமடைந்துள்ளன. அதிகளவிலான சேதம் வெள்ளப்பெருக்கின் காரணமாகவே ஏற்பட்டுள்ளது. மண்சரிவு காரணமாக ஏற்பட்டுள்ள வீடுகளுக்கான சேதமானது 2016 ஆம் ஆண்டு கணிசமான அதிகரிப்பினை காட்டுகின்றது.

அனர்த்தம்	2015		2016	
	முழுமையான சேதங்கள்	பகுதியளவான சேதங்கள்	முழுமையான சேதங்கள்	பகுதியளவான சேதங்கள்
மண்சரிவு/கரைக்கட்டுகள் சரிதல்	44	207	274	2367
வெள்ளம்	431	5112	385	2549
மின்னல் தாக்கம்	1	31	6	25
கடுங் காற்று/ சூறாவளி	99	925	59	1838

அட்டவணை 2.4: அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட வீடுகள்


iv. மரணங்கள் /காணாமற்போதல்கள் மற்றும் காயங்கள்




மே மாதத்தில் அதிகளவான மரணங்களும் காணாமற்போதல்களும் பதிவாகியுள்ளன. அதற்கான காரணம் மண்சரிவு மற்றும் வெள்ளப்பெருக்கு அனர்த்தங்கள் ஆகும். மண்சரிவு காரணமாக அதிகளவான மரணங்கள் மற்றும் காணாமற்போதல்கள் கேகாலை மாவட்டத்தில் பதிவாகி உள்ளதுடன் கம்பஹா, கொழும்பு, புத்தளம், குருநாகல் ஆகிய மாவட்டங்களிலிருந்து வெள்ள அனர்த்தம் காரணமாக அதிகளவான காணாமற்போதல்கள் பதிவாகி உள்ளது.

அதிகளவான காயங்கள் மே மாதத்தில் பதிவாகி உள்ளதோடு அவற்றுக்கான காரணங்கள் மண் சரிவுகள் மற்றும் வெள்ளப்பெருக்கு

v. அனர்த்தங்களுக்கான தாக்கம் மாவட்டங்களின் பிரகாரம் - 2016



2016 ஆம் ஆண்டு காணாமல் போனவர்களினதும் மரணித்தவர்களினதும் எண்ணிக்கையானது 140 என்பதோடு அதில் சுமார் 70% வீதம் மண்சரிவு காரணமாக ஏற்பட்டுள்ளது. இரண்டாவது அதிகளவான மரணங்கள் வெள்ளப்பெருக்கின் காரணமாக ஏற்பட்டுள்ளது. மின்னல் தாக்கம் சூறாவளி காரணமாக ஏற்பட்டுள்ள மரணங்களின் எண்ணிக்கையானது 13% என்பதோடு இது ஒப்பீட்டளவில் காணப்படுகின்ற ஒரு குறைவடைதல் ஆகும்



2016 மே மாதம் ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களில் அதிகளவான எண்ணிக்கை கொழும்பு மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களில் இருந்து பதிவாகின்றது. அதேவேளை பொலொனறுவை மற்றும் களுத்துறை மாவட்டங்களுக்கும் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

பிரதானமாக 2016ஆம் ஆண்டு வெள்ளம் மற்றும் வறட்சி காரணமாக பல மாவட்டங்களுக்கு தாக்கம் ஏற்பட்டுள்ளதோடு காட்டுத் தீ, மண்சரிவு, கடுங் காற்று நிலைமைகளும் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்

அனர்த்தம்	2015	2016	வித்தியாசம்
மண்சரிவு/கரைக்கட்டுகள் சரிதல்	9	193	184
வெள்ளம்	16	26	10
மின்னல் தாக்கம்	23	9	-14
கடுங் காற்று/ சூறாவளி	0	4	4
நீரில் மூழ்குதல்	42	18	-24
மொத்தம்	**90**	**250**	**160**


அட்டவணை 2.5: 2015 மற்றும் 2016 அனர்த்தங்களின் வித்தியாசம்

a. பாதிக்கப்பட்ட மக்கள் தொகை - **2016**

அனர்த்தம்	2015	2016	வித்தியாசம்
மண்சரிவு/கரைக்கட்டுகள் சரிதல்	1,469	42,311	40,842
வறட்சி	258,096	1,025,839	767,743
நீரில் மூழ்குதல்	42	14	-28
வெள்ளம்	270,840	448,833	177,993
மின்னல் தாக்கம்	188	15	-34
கடுங் காற்று/ சூறாவளி	3,987	7,076	3,089
மொத்தம்	**534,22**	**1,524,27**	**989,605**

அட்டவணை 2.6: பாதிக்கபபட்ட மக்கள் தொகை 2016

பாதிக்கப்பட்ட மக்களுள் சுமார் 67% வீதமானோர் வறட்சியின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளதோடு சுமார் 29% வீதமானோர் வெள்ளத்தின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளனர். வறட்சியின் காரணமாக அதிகளவிலான பாதிப்பு பொலொனறுவை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களில் பதிவாகி உள்ளதுடன் வெள்ளத்தின் காரணமாக அதிகளவிலான பாதிப்பு கொழும்பு மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களில் பதிவாகின்றது.



ஏனைய பேரழிவுகளின் காரணமாக மக்களுக்கு ஏற்பட்டுள்ள சேதமானது ஒப்பீட்டளவில் புறக்கணிக்க முடிகின்றது. வெள்ளப்பெருக்கு, மண்சரிவு, வறட்சி மற்றும் கடுங்காற்று என்பவற்றின் காரணமாக மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்பானது 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் பெருமளவில் அதிகரித்துள்ளது. இருப்பினும், மின்னல் தாக்கம் மற்றும் நீரில் மூழ்குதல் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கையானது குறைவடைந்துள்ளது.

vi. அனர்த்தங்களுக்கான தாக்கத்தின் சுருக்கம்- **2016**

- 2016ஆம் ஆண்டில் அதிகளவாக பாதிக்கப்பட்ட மக்கள் இருக்கும் மாவட்டங்களாக கொழும்பு, கம்பஹா மற்றும் பொலனறுவை ஆகிய மாவட்டங்களை இனங்காண முடியும்.
- மக்கள் மீது கணிசமான தாக்கம் ஏற்பட்ட ஏனைய மாவட்டங்களாக கேகாலை, களுத்துறை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களை அறிமுகப்படுத்த முடியும்.
- ஒட்டுமொத்தமாக 2016ஆம் ஆண்டில் வெள்ளப்பெருக்கின் காரணமாக 22 மாவட்டங்களுக்கு தாக்கம் ஏற்பட்டுள்ளதோடு வறட்சியின் காரணமாக 23 மாவட்டங்களுக்கு தாக்கம் ஏற்பட்டுள்ளது.

3. தேசிய மட்ட பிரதான செயற்பாடுகள்

3.1 அனர்த்த முகாமைத்துவ சட்டத்தினைத் திருத்துதல்

2005ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க சட்டத்தைத் திருத்துவதற்கான பணியானது அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் முடிவுறுத்தப்பட்டுள்ளதோடு திருத்தப்பட்ட சட்ட மூலமானது சட்டமா அதிபரின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது.

3.2 தேசிய அவசர நடவடிக்கைத் திட்டம் (தே.அ.ந.தி.)

தேசிய அவசர நடவடிக்கைத் திட்டம் ஒன்றை தயாரிப்பதற்கான தேவைப்பாடானது 2005ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க அனர்த்த தே.அ.ந.தி. மூலம் நாட்டில் பேரழிவுகள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் தெளிவுபடுத்தப்படுவதோடு இலங்கையில் இடம்பெறுகின்ற வானிலை, நீர், உயிரியல், தொழில்நுட்பம் மற்றும் மனிதனால் ஏற்படுத்தப்படுகின்ற பேரழிவுகளுக்கான பதிற்செயற்பாட்டு பொறிமுறைகள் அதன் மூலம் உள்வாங்கப்படுகின்றன. தே.அ.ந.திட்டத்தினைப் பரிசீலிக்கும் வசதிக்காக தேசிய அவசர நடவடிக்கைத் திட்டமானது தொகுதி 1 மற்றும் தொகுதி 2 என இரண்டு தொகுதிகளை கொண்டதாக மூன்று மொழிகளில் தயாரிக்கப்பட்டன. ஏதேனும் ஒரு நிறுவனத்தின் உள்ளார்ந்த ஆற்றல் மற்றும் உறுதியான பொறுப்பு என்பவற்றை விஞ்சிச் செல்லும் வகையிலான அவசர சந்தர்ப்பம் ஒன்றில் நிறுவனங்களுக்கும் ஆட்களுக்கும் பொறுப்பினை ஒப்படைப்பதற்காக வசதிகளை வழங்குதல், முன்னெச்சரிக்கை பொறிமுறையினை உயிர்ப்பூட்டுதல் மற்றும் அவசர தேவைப்பாட்டு நடவடிக்கைகளை இணைப்பாக்கம் செய்தல் என்பன தேசிய அவசர நடவடிக்கை திட்டத்திற்கான தொகுதி 1 இன் மூலமும், நிறுவன பொறுப்பு மற்றும் செயற் பொறுப்பு என்பன தேசிய அவசர நடவடிக்கை திட்டம் தொகுதி 2 இன் மூலமும் விவரிக்கப்பட்டுள்ளன.

மூன்று மொழிகளிலும் தயாரிக்கப்பட்ட தேசிய அவசர நடவடிக்கை திட்டத்திற்காக எதிர்காலத்தில் அனர்த்த முகாமைத்துவ தேசியப் பேரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளும் வரை தேசிய அவசர நடவடிக்கைத் திட்டத்திற்கான தொகுதி 1இன் அவசர நடவடிக்கை கூடத்தின் மூலமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளின் பொருட்டு இடைக்கால முகாமைத்துவ குழுவின் இணக்கப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

3.3 நிறுவனம்சார் அனர்த்த முன் தயார்நிலைத் திட்டம் (IDMP)

2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கமுடைய அனர்த்த முகாமைத்துவச் சட்டத்தின் பிரகாரம் நிறுவனம்சார் முன் தயார்நிலைத் திட்டத்தினைத் தயாரிப்பதற்கான வழிகாட்டல்கள் வகுக்கப்பட்டுள்ளன. குறிப்பிட்ட வழிகாட்டல்களை நிறுவனங்களின் பொருட்டு நடைமுறைப்படுத்தப்பட்டதன் பின்னர் எழுகின்ற

சிக்கல்களையும் பலவீனங்களையும் இனங்காண்பதற்கும் அதன் பிரகாரம் வழிகாட்டல்களை திருத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளன.

3.4 இடைக்கால முகாமைத்துவக் குழு

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் முகாமைத்துவ நடவடிக்கைகள் தொடர்பாக தீர்மானங்களை மேற்கொள்ளும் பொருட்டு அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளரது தலைமையின் கீழ் 2016 ஆம் ஆண்டில் 10 கூட்டத்தொடர்கள் நடத்தப்பட்டுள்ளன. அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் இடைக்கால முகாமைத்துவக் குழுவின் கட்டமைப்பானது பின்வருமாறு அமைகின்றது.

1). செயலாளர், அனர்த்த முகாமைத்துவ அமைச்சு - தலைவர்
2). நிதித் திட்டமிடல் அமைச்சு - பிரதிநிதி - அங்கத்தவர்
3). பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு – பிரதிநிதி - அங்கத்தவர்
4). உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு – பிரதிநிதி - அங்கத்தவர்
5). பணிப்பாளர் நாயகம், தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகம் - அங்கத்தவர்
6). பிரதான கணக்காளர், அனர்த்த முகாமைத்துவ அமைச்சு - அங்கத்தவர்
7). பணிப்பாளர் நாயகம், அனர்த்த முகாமைத்துவ நிலையம் - செயலாளர்

3.5 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2016 ஆம் ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியில் காணப்பட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அமைப்பு கீழே காட்டப்பட்டுள்ளது.

திரு.ஏ.வீ. ஜனாதர (தலைவர்) - திறைசேரியின் வரவு செலவுத்திட்ட திணைக்களம், பொதுத் திறைசேரி

திரு. ஜி.எல்.எஸ்.சேனாதீர (அங்கத்தவர்)- பணிப்பாளர் நாயகம், அனர்த்த முகாமைத்துவ நிலையம்.

திரு.எச்.யூ.ஆர்.பொன்சேகா(அங்கத்தவர்) - பிரதான கணக்காளர், அனர்த்த முகாமைத்துவ அமைச்சு

திருமதி.கே.ஏ.சுபத்திரா வல்பொல (அங்கத்தவர்) சிரேஸ்ட உதவிச் செயலாளர்- உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு

திருமதி.ஏ.பி.ஆர்.அமரக்கோன்(கண்காணிப்பாளர்)- கணக்காய்வு அத்தியட்சகர், கணக்காய்வுத் தலைமை அதிபதி திணைக்களம்

திரு.கே.ஏ. நிஷாந்த(அங்கத்தவர்) - பிரதிப் பணிப்பாளர்- நீதி(ரா.இ), அ.மு.நி.

திரு.ஜே.எச்.பீ.ஜெயலத்(அங்கத்தவர்)- உள்ளகக் கணக்காய்வாளர்,அ.மு.நி.

கணக்காய்வு தலைமை அதிபதி திணைக்களத்திலிருந்தும் நிலையத்தின் உள்ளக கணக்காய்வு பிரிவிலிருந்தும் முன்வைக்கப்படுகின்ற கணக்காய்வுக் கேள்விகளின் மூலம் எழுப்பப்பட்டுள்ள அவதானிப்புகள் தொடர்பாகவும் நிலையத்தின் உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தொடர்பாகவும் இங்கே கலந்துரையாடப்படுகின்றன. அதேவேளை கணக்காய்வு கேள்விகளிலிருந்தும் அறிக்கைகளிலிருந்தும் எழுப்பப்படுகின்ற அவதானிப்புகளுக்காக நிலையத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற சரிப்படுத்தல்களின் அளவுசார் மற்றும் தரம்சார் தன்மை தொடர்பாகவும் இங்கே மேலதிகமாகவும் ஆராயப்படுகின்றன. அதனகத்துப் பின்னர் இவ்விடயங்கள் தொடர்பாக நிலையத்தின் பணிப்பாளர் நாயகத்தினது தலைமையில் நிலையத்தில் நடத்தப்படுகின்ற பணியாளர் தொகுதிக்குரிய கூட்டங்களிலும் இவ்

விடயங்களுக்குரிய முன்னேற்றம் தொடர்பாக மீண்டும் கலந்துரையாடப்படுகின்றன. 2016 ஆம் ஆண்டுக்குரியதாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் 4 நடத்தப்பட்டு நிலையத்தின் உள்ளக கட்டுப்பாட்டு முறைமையை முறையாகவும் சீராகவும் பேணிச் செல்வதற்கு தேவையான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன.

3.6 தேசிய பாதுகாப்புத் தினம் - 2016

2016 ஆம் ஆண்டு தேசிய பாதுகாப்புத் தினம் சார்பாக 25 மாவட்டங்களிலும் மக்களை விழிப்பூட்டுவதற்காக விழிப்பூட்டல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் 2016 அக்டோபர் மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரை நடைமுறைப்படுத்தப்பட்டதோடு 25 மாவட்டங்களிலும் காணப்படுகின்ற அதிக அளவிலான அனர்த்தங்களுக்கு முகங்கொடுக்கும் மக்களுக்கு முன்னுரிமை அளித்து அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக நிபுணத்துவ அறிவினைக்கொண்ட தொழில்நுட்ப நிறுவனங்களின் பங்கேற்போடு மேற்படி விழிப்பூட்டல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இதற்கு மேலதிகமாக 25 மாவட்டங்களிலும் அனர்த்தங்களினால் மரணித்த மக்களை நினைவுகூர்வதற்காக மக்களினதும் அரச ஊழியர்களினதும் பங்கேற்போடு சர்வமத நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

3.7 தேசிய அனர்த்த முகாமைத்துவ இணைப்பாக்கக் குழு

அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் என்பன இணைந்து தேசிய அனர்த்த முகாமைத்துவ இணைப்பாக்கக் குழுவினை (NDMCC) நிறுவியுள்ளன. இக்குழுவின் தலைமைத்துவமானது அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளரினால் வகிக்கப்படுவதோடு அமைச்சின் பிரதிநிதிகள், திணைக்களங்கள், அரச நிறுவனங்கள், முப்படையினர், போலீசார் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற அமைப்புகள் மற்றும் உள்நாட்டு அரச சார்பற்ற அமைப்புகள் மற்றும் தனியார் துறையின் பிரதிநிதிகள் என்போரின் தலைமையில் இக்கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. தேசிய அனர்த்த முகாமைத்துவ இணைப்பாக்க அலகின் (NDMCC) குறிக்கோளாக அமைவது யாதெனில், அனர்த்தங்களின் தாக்கத்தினை குறைப்பதும் அனர்த்தங்களுக்கு ஈடுகொடுக்கக்கூடிய சமூகமொன்றின் பொருட்டு தேசிய முயற்சியினை மேற்கொள்வதுமாகும் . அதேவேளை,

- தகவல்களை பகிர்ந்து கொள்வதற்காகவும் பரிமாறிக் கொள்வதற்காகவுமாக அனர்த்த முகாமைத்துவம் பற்றிய செயற்பாட்டு நிறுவனம் ஒன்றை உருவாக்குதல்.
- அனர்த்த ஆபத்துகளைக் குறைப்பதற்கான முறைகள் மற்றும் உபாயமார்க்கங்கள் என்பன தொடர்பாக கற்ற பாடங்கள் தொடர்பிலான வசதிகளை வழங்குதல்.
- அனர்த்த ஆபத்துக்களுக்கான முகாமைத்துவ நடவடிக்கைகளை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கு சகல அனர்த்த முகாமை செயற்பாட்டாளர்களுக்கு மத்தியிலும் இணைப்பாக்கத்தினைப் பேணிவருதல்.

2007 ஆம் ஆண்டில் 06 நிறுவனங்களை பிரதிநிதித்துவம்செய்து 14 அங்கத்தவர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இக்குழுவானது தற்போது 80 நிறுவனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளைக் கொண்டமைந்துள்ளது.

3.8 அவசர நிலைமை பதிற்செயற்பாட்டுக் குழு (அ.ப.கு)

அத்தியாவசிய சேவைகளின் சிரேஸ்ட அங்கத்தவர்கள் மற்றும் அவசர சந்தர்ப்பங்களில் பதிற்செயற்பாடு காட்டுகின்ற தரப்புக்கள், குழுக்கள் அனர்த்தத்தின்போது சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் இணைந்துகொள்ளக்கூடிய மற்றும் வளங்கள் ஈடுபடுத்தக்கூடிய அவசர பதிற்செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நேரடியாகத் தொடர்பு கொண்டுள்ள நிறுவனங்களைக் கொண்டு அவசர நிலைமை பதிற்செயற்பாட்டுக் குழுக்கள் அமைந்துள்ளன. 2016 ஆம் ஆண்டு தேசிய மட்டத்தில் ஏற்பட்ட பாரியளவிலான இரண்டு அனர்த்தங்களின்போது உரிய உதவியினை அவசர நிலைமை பதிற் செயற்பாட்டுக் குழுவின் மூலம் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் பிரகாரம் 2016 ஆம் ஆண்டு கேகாலை மாவட்டத்தில் இடம்பெற்ற பாரிய மண் சரிவின்போது உரிய உதவியினைப் பெற்றுக்கொடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதோடு பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களை வழங்கும் நடவடிக்கைகள் பல நாட்களாக மேற்கொள்ளவும்ப்பட்டன.

3.9 அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கான உத்தியோகபூர்வ இணையத்தளம்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கான உத்தியோகபூர்வ இணையத்தளத்தை www.dmc.gov.lk இற்றைப்படுத்துவதும் பராமரிப்பதும் அனர்த்தங்களைக் குறைத்தல் மற்றும் ஆய்வுப் பிரிவின் செயற்பொறுப்பு என்பதோடு 2016 ஆம் ஆண்டு நிறுவனத்தில் இடம்பெற்ற பிரதான சமபவங்கள் அனைத்தும் இணையத்தளத்தில் சேர்க்கப்பட்டுள்ளதோடு சகல அனர்த்தங்களும் பற்றிய நிலைமைகள் பற்றிய அறிக்கைகள் நாளாந்தம் இணையத்தளத்திற்கு கொண்டும்செல்லப்படுகின்றன.

3.10 Desinventra தரவுக் கலஞ்சியம்

அனர்த்தங்கள் சம்பந்தப்பட்ட கடந்தகால தகவல்கள் அனைத்தும் உள்ளடங்கிய தரவு வங்கி www.disinventra.lk என்றவாறு இணையத்தளத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ளதோடு ஒவ்வொரு சம்பவத்திற்குமுரியதாக மாவட்ட, பிரதேச செயலாளர் பிரிவுகள் மற்றும் அனர்த்தங்களின் கீழ் காலப்பகுதிக்கேற்ப மரணங்கள், பாதிக்கப்பபட்ட மக்கள் மற்றும் சேதமாகிய சொத்துக்கள் பற்றிய தகவல்கள் இத்தரவுத் தொகுதியில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அனர்த்த முகமைத்துவ நிலையத்தின் மூலமாக அவசர நடவடிக்கைப் பிரிவினால் நாளாந்தம் வெளியிடப்படுகின்ற நிலைமைகள் பற்றிய அறிக்கைகளிலிருந்து பெற்றுக்கொள்ளபடும் தகவல்கள் இத்தரவுத் தொகுதியில் உள்ளடக்கப்பட்டுள்ளன. 1974 – 2016 வரை அனர்த்தங்கள் சம்பந்தப்பட்ட

அடிப்படைத் தகவல்கள் இத்தரவு வங்கியில் உள்ளடக்கப்பட்டுள்ளன. 2012 - 2016 வரையிலான நிகழ்வுகளும் தரவுகளும் பின்வரும் அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

வருடம்	அனர்த்த நிகழ்வுகள் (வகைகள்)	தரவுகளின் அளவு
2012	16	512
2013	16	456
2014	13	456
2015	*19*	727
2016	12	686

அட்டவணை 3.1: அனர்த்த தரவுகளின் தொகை

04. அனர்த்தங்களைக் குறைத்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு

2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட பயங்கரமான சுனாமி பேரழிவுக்குப் பின்னர் எதிர்வினை நிலைமையிலிருந்து மீண்டு முன் அனர்த்த முகாமைத்துவத்திற்கு முன்னுரிமையளித்து தாபிக்கப்பட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அனர்த்தங்களைக் குறைத்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவின் அடிப்படை செயற்பொறுப்பு அனர்த்த ஆபத்து மதிப்பீடு, அனர்த்த ஆபத்துக்களைக் குறைப்பதற்கான கருத்திட்டங்களை இனங்கண்டு நடைமுறைப்படுத்துதல், அனர்த்த ஆபத்துக்களைக் குறைப்பதற்கான முறையியலை அபிவிருத்தியின் பிரதான பிரவாகத்திற்குள் உள்ளீர்ப்பதன் மூலம் பாதுகாப்பானதோர் இலங்கை மற்றும் நிலைபேறான அபிவிருத்தி என்ற இலக்கினை அடைந்து கொள்வதற்காக செயற்படுவதாகும்.

4.1 மாவட்ட மட்டத்தில் அனர்த்தங்களைக் குறைத்தல்

2015 ஆம் ஆண்டு ஏற்பட்ட அனர்த்தங்களினால் அளவு ரீதியல் ஏற்பட்ட சேதங்கள் பற்றிய விபரங்களைப் பகுப்பாய்வு செய்யும்போது உட்கட்டமைப்பு வசதிகள் அதிகளவான பாதிப்புக்கு உள்ளாகின்றதெனவும் உயிர்ச் சேதங்கள் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றதெனவும் தெரிவதோடு அனர்த்தங்களின் மூலம் உட்கட்டமைப்பு வசதிகளுக்கு ஏற்படுகின்ற சேதமானது நாளுக்கு நாள் அதிகரிக்கின்றதெனவும் வெளிப்படுகின்றது. (படம் 1, அட்டவணை 1)

Desinventra தரவுகள்

அனர்த்தங்கள்(நிகழ்வுகள்)	நிகழ்வுகளின் எண்ணிக்கை **(2015)**	மரணங்கள்	வீட்டுச் சேதங்கள்
வெள்ளம்	285	15	5543
வறட்சி	45	0	பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை- 258,096
கடுங்காற்று	98	0	999
மண்சரிவு	35	7	161

அட்டவணை 4.1: Desinventra தரவுகள்

மேற்படி விடயங்களைக் கருத்திற்கொண்டு சமர்ப்பிக்கப்பட்ட கருத்திட்ட அறிக்கைகளை கருத்திற்கொண்டதன் பின்னர் அனர்த்தங்களைக் குறைப்பதற்காக 500 மி.ரூபா 2016 ஆம் ஆண்டுக்காக பொதுத் திறைசேறியினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

வருடம்	ஒதுக்கப்பட்ட தொகை (ரூ.மி)
2011	114
2012	122
2013	274
2014	500
2015	500
2016	500

அட்டவணை 4.2: ஒதுக்கப்பட்ட தொகை

2016 ஆம் ஆண்டு ஏற்பட்ட ஒவ்வொரு அனர்த்தத்தினையும் கருத்திற்கொள்ளும்போது அந்த அனர்த்தங்களால் ஏற்பட்ட சேதங்களைக் கருத்திற்கொண்டு இப்பிரிவுக்க ஒதுக்கப்பட்ட தொகையானது

பின்வரும் அட்டவணை மற்றும் படம் என்பவற்றின் மூலம் காட்டப்பட்டுள்ளவாறு அனர்த்தங்களைக் குறைப்பதற்கான கருத்திட்டங்களுக்காக ஒதுக்கிக்கொள்ளப்பட்டது.

அனர்த்தம்	மாவட்டம்	ஒதுக்கீட்டின் அளவு (ரூ.மி)				
		2012	2013	2014	2015	2016
வெள்ளம்	களுத்துறை	-	3	7	10	24
	காலி	1	10	8	6.5	9.5
	மாத்தறை	-	1	-	0.685	-
	அம்பாந்தோட்டை	2	96	121	14.6	-
	புத்தளம்	-	2	17	17.6	35.174
	இரத்தினபுரி	30	3	1	2.6	52.811
	குருநாகல்	-	13	9	-	127.561
	நுவரெலியா	-	3	4	1.9	12.978
	மாத்தளை	-	10	1	10.1	42
	கிளிநொச்சி	6	1	23	-	7.8
	முல்லைத்தீவு	-	7	-	-	23.5
	கேகாலை	-	13	1	8.8	16.3
	அநுராதபுரம்	4	-	1	8	16.7
	கொழும்பு	-	-	11	-	-
	கம்பஹ	-	-	8	60.2	-
	திருகோணமலை	-	-	17	5	2.2
	பொலொனறுவை	-	-	14	34.3	33.4
	பதுளை	-	-	10	-	8.1
	மட்டக்களப்பு	-	-	4	4.4	5.6
	மன்னார்	11	-	26	-	-
	கண்டி	7	-	23	50	-
	மொனராகலை	-	-	10	-	3
	வவுனியா	-	-	6	6	17.7
	யாழ்ப்பாணம்	14	-	-	-	19.9
	அம்பாரை	-	-	-	6.6	-
மொத்தம்		**75**	**162**	**322**	**247**	**458**
வறட்சி	அம்பாந்தோட்டை	2	25	41	20.8	-
	புத்தளம	-	3	3	-	-
	கண்டி	-	4	-	-	-
	மொனராகலை	-	2	9	4.4	8.5
	வவுனியா	19	7	10	4	3.5
	குருநாகல்	-	-	4	78	-
	திருகோணமலை	-	-	1	2	-
	பொலொனறுவை	-	-	7	-	-
	அம்பாரை	-	-	5	-	-
	முல்லைத்தீவு	-	6	-	6.2	-
	கிளிநொச்சி	3	-	-	4.7	-
	அநுராதபுரம்	-	-	-	4.2	-
	பதுளை	-	-	-	0.9	-
	யாழ்ப்பாணம்	-	-	-	30	-
மொத்தம்		23	**47**	**80**	**155**	**12**

விலங்குளினாலான தாக்குதல்கள	மாத்தறை	-	-	6	-	-
	அம்பாந்தோட்டை	-	-	-	0.6	-
மொத்தம்		0	**0**	**6**	**0.6**	**0**
உறுதியற்ற சாய்வுகளை உறுதியாக்குதல்	கண்டி	0.8	1	-	-	7
	பதுளை	1	1	6	-	3.9
	நுவரெலியா	93	6	0.2	-	-
	மாத்தளை	-	37	-	-	-
	கேகாலை	-	-	6	3.8	-
	இரத்தினபுரி	-	-	2	3.4	17.688
	காலி	-	-	-	1.5	-
	அம்பாந்தோட்டை	-	-	-	3	-
மொத்தம்		94.8	**45**	**14.2**	**11.7**	**28.5**

2016 டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியில் இக்கருத்திட்டங்களுக்கான மொத்த பௌதீக முன்னேற்றம் 100% என்பதோடு கொள்வனவு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு செலுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது செலவாகிய மொத்தத் தொகை 421,584 மி.ரூபாவாகும். எனவே, இதன் ஒட்டுமொத்த நிதிசார் முன்னேற்றமானது 84% ஆகும். கருத்திட்டங்களைப் பூர்த்தி செய்து செலுத்தல் பட்டியல்கள் மற்றும் வேலை பூர்த்தி அறிக்கைகள் தற்போது கிடைக்கப்பெற்று வருகின்றன.

கல்மெட்டியா மஹவெவ வான்எல கால்வாய் நிர்மாணிக்கப்படுதல் -திருகோணமலை



வட மிரிஸ்ஸன் கொட்டுவ நாவ கொட்டு தொடக்கம் குளம வாவி வரைநீர் வழிந்தோடும் வடிகான் தொகுதி புனரமைக்கப்படுதல் - புத்தளம்



கலஹிட்டிய ஓகந்த ஊடாக உடதெனிய வீதியின் மஹஎல பாலம் தயாரிக்கப்படுதல் -இரத்தினபுரி-வெள்ளப் பெருக்கு



Before



After

அனர்த்தங்களைக் குறைப்பதற்கான குறுகியகால கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் பொருட்டு சுமார் 50 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளதோடு அந்த ஒதுக்கீடுகள் ஆபத்தாக அமைந்துள்ள உறுதியற்ற கற்களை அகற்றுதல், வீடுகளுக்கு அல்லது உட்கட்டமைப்பு வசதிகளுக்கு சேதங்கள் ஏற்படும் வகையில் வீதிகளுக்கு தடங்கல்கள் ஏற்படுத்தக்கூடியதாக புரண்டுள்ள கற்களை அகற்றுதல், வீதிகளுக்கு தடைகள் ஏற்படும் வகையில் விழுந்துள்ள மரங்களை அல்லது மண்ணை வெட்டி அகற்றுதல் மற்றும் போக்குவரத்திற்கு இடையூறுகளை விளைவிக்கும் சிறிய பாலங்களை மறுசீரமைத்தல், திடீர் அனர்த்த சந்தர்ப்பங்களில் அந்த அனர்த்தங்களின் மூலம் ஏற்படக்கூடிய சேதங்களை அகற்றுவதற்காக இயந்திரங்களை வாடகைக்கு பெற்றுக்கொள்ளல் அல்லது எரிபொருள் செலவுகளை மேற்கொள்ளுதல், வாவிகள் குளங்கள் கட்டுகள் சேதத்திற்கு உள்ளாகக்கூடிய சந்தர்ப்பங்களில் அவற்றை பலப்படுத்துவதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், அனர்த்தங்களுக்கு உள்ளாகிய மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு ஏற்றிச் செல்லுதல், அனர்த்தத்தின் மூலம் ஏற்படக்கூடிய தாக்கங்களை குறைப்பதற்கு தேவையான உபகரணங்கள் (மண்வெட்டிகள், கத்திகள் போன்றவை) கொள்வனவு செய்யப்படுதல், கிணறுகளை சுத்தம் செய்வதற்கு தண்ணீர் பம்புகளை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளுதல், திடீர் அனர்த்தங்களை அடிப்படையாகக் கொண்டு சேதமுற்ற உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் போன்ற திடீர் அனர்த்தங்களை குறைப்பதற்கான நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தப்படுகின்றன. தற்போது சுமார் 50 மில்லியன் ரூபாவிலான நிதி ஒதுக்கீடு நிலையத்திற்குக் கிடைத்துள்ளதோடு 15.5 மில்லியன் ரூபா கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் மூலம் காட்டப்பட்டுள்ளவாறு திடீர் அனர்த்தங்களை குறைப்பதற்காக மாவட்ட மட்டத்தில் தற்போது முதலீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக சுமார் 5 மில்லியன் ரூபா படகுகளை கொள்வனவு செய்வதற்காக செலவு செய்யப்பட்டுள்ளது.

மாவட்டம்	வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகள் (ரூபா)
கம்பஹ	54,310.00
குருநாகல்	551,300.00
கொழும்பு	60,000.00
கேகாலை	1,222,672.30
இரத்தினபுரி	2,020,876.50
புத்தளம்	603,000.00
கண்டி	1,806,648.10
களுத்துறை	100,875.00
காலி	327,500.00
மாத்தறை	50,000.00
மாத்தளை	529,950.00
முல்லைத்தீவு	100,000.00
நுவரெலியா	941,600.00
கிளிநொச்சி	870,335.70
மன்னார்	500,000.00
அம்பாந்தோட்டை	500,000.00
வவுனியா	264,838.50
மொத்தம்	**10,532,406.10**

அட்டவணை 4.4: வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகள் (ரூபா)



திடீர் அனர்த்தங்களுக்கு பதிற்செயற்பாடு காட்டப்படுதல் - வவுனியா



திடீர் அனர்த்தங்களுக்கு பதிற்செயற்பாடு காட்டப்படுதல் - காலி



திடீர் அனர்த்தங்களுக்கு பதிற்செயற்பாடு காட்டப்படுதல் - மாத்தளை



திடீர் அனர்த்தங்களுக்கு பதிற்செயற்பாடு காட்டப்படுதல் - மாத்தறை

4.2 தம்புள்ள வெள்ளப் பெருக்கு அனர்த்தத்தினைக் குறைப்பதற்கான கருத்திட்டம்

2016 ஆம் ஆண்டில் தம்புள்ள வெள்ளப்பெருக்கு அனர்த்தத்தினைக் குறைப்பதற்கான கருத்திட்டத்தின் பொருட்டு 42 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்படி பணத்தில் 37 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடானது மாத்தளை மாவட்டச் செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ளது. தம்புள்ள வெள்ளப்பெருக்கு அனர்த்தத்தினைக் குறைப்பதற்கான கருத்திட்டத்தின் 8 கட்டங்கள் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. அதன்மூலம் பிரதான இடங்களாகிய தம்புள்ள நகரம், பஸ் தரிப்பு நிலையம், பொருளாதார நிலையம், வைத்தியசாலை போன்ற இடங்களுக்கு தாக்கம் ஏற்படுத்திய வெள்ள நிலைமை முழுமையாக கட்டுப்படுத்தப்பட்டது. இருப்பினும் 2015 டிசம்பர் மாதம் ஏற்பட்ட மழையின் காரணமாக கம்உதாவ, கல்வெட்டியாவை மற்றும் பெல்வெஹெர ஆகிய பிரதேசங்களுக்கு வெள்ள நிலைமை ஏற்பட்டது. எனவே முழுமையாக அனர்த்த நிலமையை கட்டுப்படுத்தும் பொருட்டு நகரத்தின் மேல் மட்டத்தில் அமைந்துள்ள நீர் தேக்க பிரதேசங்களில் இருந்து வருகின்ற நீரினை கொண்டு செல்கின்ற பிரதான கால்வாய் ஆகிய தம்மென்ன கால்வாயில் இனங்காணப்பட்ட சில இடங்களில் கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அனர்த்த சேதங்கள் இடம்பெறாதமை, நிவாரண உதவிகளுக்காக நிதி ஒதுக்கீடுகளை செலவு செய்வதற்கு ஏற்படாதமை, மக்களின் பொருளாதார, சமூக, உளரீதியான நிலைமைகளை பேணுச்செல்ல முடிந்தமை மற்றும் சுற்றுலா கவர்ச்சிக்கு ஏதுவாக அமைகின்றதான சுற்றாடல் உருவாகின்றமை போன்ற விடயங்களின் காரணமாக இக்கருத்திட்டமானது நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியினை மேம்படுத்துவதற்கும் வளங்களை பாதுகாப்பதற்கும் காரணமாக அமைந்துள்ளது.

4.3 அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கான இணையத்தளம்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கான உத்தியோகபூர்வ இணையத்தளத்தை www.dmc.gov.lk இற்றைப்படுத்துவதும் பராமரிப்பதும் அனர்த்தங்களைக் குறைத்தல் மற்றும் ஆய்வுப் பிரிவின் செயற்பொறுப்பு என்பதோடு 2016 ஆம் ஆண்டு நிறுவனத்தில் இடம்பெற்ற பிரதான சமபவங்கள் அனைத்தும் இணையத்தளத்தில் சேர்க்கப்பட்டுள்ளதோடு சகல அனர்த்தங்களும் பற்றிய நிலைமைகள் பற்றிய அறிக்கைகள் நாளாந்தம் இணையத்தளத்திற்கு கொண்டு செல்லப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக www.drr.dmc.gov.lk ஆகிய இணையத்தள இணைப்பின் கீழ் கருத்திட்டங்கள் பற்றிய சகல தகவல்களும் இணையத்தளத்திற்குப் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதோடு இந்த ஆண்டினுள் 12 செயதிகள் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

4.4 Desinventra தரவுக் கலஞ்சியம்

அனர்த்தங்கள் சம்பந்தப்பட்ட கடந்தகால தகவல்கள் அனைத்தும் உள்ளடங்கிய தரவு வங்கி www.disinventra.lk என்றவாறு இணையத்தளத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ளதோடு ஒவ்வொரு சம்பவத்திற்குரியதாக மாவட்ட, பிரதேச செயலாளர் பிரிவுகள் மற்றும் அனர்த்தங்களின் கீழ் காலப்பகுதிக்கேற்ப மரணங்கள், பாதிக்கப்பபட்ட மக்கள் மற்றும் சேதமாகிய சொத்துக்கள் பற்றிய தகவல்கள் இத்தரவுத் தொகுதியில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அனர்த்த முகமைத்துவ நிலையத்தின் மூலமாக அவசர நடவடிக்கைப் பிரிவினால் வெளிடப்படுகின்ற நிலைமைகள் பற்றிய அறிக்கைகளிலிருந்தும் வனப் பாதுகாப்பு, சுகாதாரம் போன்ற பிரிவுகளிலிருந்தும் பெற்றுக்கொள்ளபடும் தகவல்களும் இத்தரவுத் தொகுதியில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1974 – 2016 வரை அனர்த்தங்கள் சம்பந்தப்பட்ட அடிப்படைத் தகவல்கள் இத்தரவு வங்கியில் உள்ளடக்கப்பட்டுள்ளன. 2012, 2013, 2014, 2015, 2016 ஆகிய வருடங்களிலான நிகழ்வுகளும் தரவுகளும் பின்வரும் அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

வருடம்	நிகழ்வுகள் (அனர்த்தங்கள்)	தரவுகளின் அளவு
2012	16	512
2013	16	456
2014	13	456
2015	16	719
2016	12	617

அட்டவணை 4.5: 1974 – 2016 வரை அனர்த்தங்கள் சம்பந்தப்பட்ட அடிப்படைத்

4.5 இசைவாக்கம் அடையச்செய்தல்

அனர்த்த நிலைமைகள் பல்வேறுபட்ட துறைகளுடன் பின்னிப்பிணைந்துள்ளதோடு நிலைபேறான அபிவிருத்தியின் பொருட்டு அனர்த்தங்களைக் குறைப்பதானது மிகவும் முக்கியமான ஒரு விடயமாகும். இது தொடர்பாக கவனம் செலுத்தி வீடுகளை நிர்மாணிக்கும்போது அனர்த்த ஆபத்துக்களைக் குறைப்பதற்காக மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் உத்தியோகத்தர்களை விழிப்பூட்டுதல், உள்ளூராட்சி நிறுவனங்களைச் சேர்ந்த தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை விழிப்பூட்டுதல் பற்றிய நிகழ்ச்சித் திட்டமொன்று ஆசிய அனர்த்த முன் தயார்நிலை நிலையத்துடன் இணைந்து சம்பந்தப்பட்ட தரப்பு நிறுவனங்களின் ஒத்துழைப்போடு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதன்போது சுமார் 300 உள்ளூராட்சி நிறுவனங்களைச் சேர்ந்த 650

உத்தியோகத்தர்களை ஆபத்துக்களுக்கு ஈடுகொடுக்கக்கூடிய வீடமைப்புத் தொடர்பாக அறிவூட்டுவதற்கு இலங்கை உள்ளூராட்சி மற்றும் பயிற்சி நிறுவகத்துடன் இணைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இக்கருத்திட்டத்தின் கீழ் உள்ளூராட்சி நிறுவனங்களுக்காக வழிகாட்டல்களை வழங்குவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவற்றுக்கு மேலதிகமாக ஐக்கிய நாடுகளின் குடியிருப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற பாதுகாப்பான நகரங்களின் பொருட்டு திட்டங்களை வகுக்கின்ற கருத்திட்டத்தின் கீழ் நகர அபிவிருத்தித் திட்டங்களுக்காக வழிகாட்டல் தயாரிக்கப்பட்டுள்ளது.

5. முன் தயார்நிலை திட்டப் பிரிவு


5.1 அறிமுகம்

தேசிய பேரழிவு முகாமைத்துவ திட்டத்தின் தயாரிப்புப் பணிகளை இணைப்பாக்கம் செய்தல், பேரழிவு முகாமைத்துவ திட்டத்தைத் தயாரிப்பதற்காக வழிகாட்டல்களை வழங்குதல் மற்றும் தயாரித்தல், 2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க பேரழிவு முகாமைத்துவ சட்டத்தின் மூலம் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு பேரழிவு முகாமைத்துவத் திட்டத்தினைத் தயாரிப்பதற்காக அரச நிறுவனங்களுக்கு உதவியளித்தல் பற்றிய பொறுப்பினை கொண்டுள்ள முன் தயார்நிலை திட்டப் பிரிவானது அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் காணப்படுகின்ற பிரதான பிரிவுகளுள் ஒன்றாகும். மேலும். பேரழிவுக்கான முன் தயார்நிலை மற்றும் அவசர நிலைமை பதிற் செயற்பாட்டுத் திட்டங்களை தயாரிப்பதற்கும் மீட்பு நடவடிக்கைகள் பற்றிய ஒத்திகை நிகழ்ச்சித்திட்டங்களை இடையறாது நடாத்துவதற்கும் மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்கள், கிராம உத்தியோகத்தர்கள் என்போருக்குத் தேவையான உதவிகளை வழங்குதல் மற்றும் அந்த நடவடிக்கைகளை இணைப்பாக்கம் செய்தல் என்பன இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. பருவகால வானிலை நிலைமைகள் ஏற்படுவதற்கு முன்னர் முன் தயார் நிலை திட்டப் பிரிவினால் எந்தவொரு பேரழிவு நிலைமைக்கும் முகம் கொடுப்பதற்காக நிறுவனம் கொண்டுள்ள தயார் நிலையை உறுதிப்படுத்துவதற்காக மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களின் உதவியோடு முன் தயார்நிலை திட்டச் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள கருத்திட்ட முன்மொழிவுகளுக்குப் பதிற்செயற்பாடாக முன் தயார்நிலைத் திட்டங்களின் பொருட்டு 2014, 2015 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளில் முறையாக 10 மில்லியன் ரூபா, 12.0 மில்லியன் ரூபா மற்றும் 12.5 மில்லியன் ரூபா என்ற வகையில் நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டன. அவ்வாறு வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் மற்றும் செலவுகள் பற்றியதொரு ஒப்பிடுதல் அட்டவணை இலக்கம் 5.1 மற்றும் வரைபட இலக்கம் 5.1 ஆகியவற்றில் காட்டப்பட்டுள்ளது.


வருடம்	பொதுத் திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள்	செலவு
2014	10.00	9.20
2015	12.00	9.94
2016	12.50	11.11

அட்டவணை 5.1: பொதுத் திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள்




5.1 படம் - அனர்த்த முன் தயார் நிலைக்காக கடந்த வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகளும் செலவுகளும

2016 ஆம் ஆண்டு 25 மாவட்டங்களின் பேரழிவுக்கான முன் தயார் நிலை திட்டங்களைத் தயாரிப்பதற்காகவும் அது தொடர்பான மீளாய்வு நடவடிக்கைகளுக்காகவும் 12.5 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. நாட்டின் பொருளாதார நிலைமை மற்றும் பேரழிவுகளின் மூலம் மக்களுக்கு ஏற்படுகின்ற தாக்கம் என்பவற்றை கருத்திற்கொண்டு மாவட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடுகள் விடுவிக்கப்பட்டுள்ளன. மாவட்டங்களுக்கு மத்தியில் நிதி ஒதுக்கீடுகள் பகிர்ந்தளிக்கப்பட்ட விதம்(5 -2 படம்) மற்றும் அதன் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் (5.3 படம்) கீழே தரப்பட்டுள்ளன.



5.2 படம் - மொத்த ஒதுக்கீடுகள் மாவட்டங்களுக்கு மத்தியில் பகிர்ந்தளிக்கப்பட்ட விதம்



5.3 படம்- முன் தயார்நிலை நிகழ்ச்சித்திட்டங்களுக்கான பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம்

மாவட்ட, பிரதேச செயலக பிரிவுகள் மற்றும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மட்டத்தில் பேரழிவு முகாமைத்துவ சாத்திய வளத்தினை பலப்படுத்துவதற்காக பல்வேறுபட்ட முன் தயார் நிலை திட்டங்களின் பொருட்டு 2016 ஆம் ஆண்டில் முன் தயார் நிலை திட்டப் பிரிவினால் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டன. பேரிடர் முகாமைத்துவ திட்டங்களை அச்சிடுதல் மற்றும் தயாரித்தல்/மீளாய்வு செய்தல் என்பவற்றுக்காக தரப்பினர் கூட்டங்கள், செயலமர்வுகள் என்பவற்றுக்காக மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு மட்டங்களில் ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளன. தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி மன்ற அதிகாரப் பிரதேசங்களில் மீள்தன்மை நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதற்காகவும் இப்பிரிவானது உதவி வழங்குகின்றது. சுனாமி, வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு பற்றிய ஒத்திகை நிகழ்ச்சிகளை நடாத்துதல், கருத்துக்களை வரைபடமாக்குதல், ஆபத்து நிலைமைகளின் பகுப்பாய்வு, கிராமிய மட்ட பேரிடர் முகாமைத்துவ குழுக்கள் தாபிக்கப்படுதல் போன்ற சமுதாய மட்டத்திலான பேரிடர் பதிற் செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல், நீர்த்தேக்கங்கள் குளக் கட்டுகள் உடைந்து செல்வதற்கு மூலோபாயமாக நீர்த்தேக்க குளக் கட்டுகளின் கீழ்ப்பகுதியில் வாழ்கின்ற மக்களுக்காக அவசர நிலைமை பதிற் செயற்பாடு காட்டுவதற்காக மக்கள் பங்களிப்புடன் முன் தயார் நிலைத் திட்டங்களை உருவாக்குவதற்காகவும் இப் பிரிவினால் ஒதுக்கீடுகள் பெற்று தரப்படுகின்றன.

5.2 மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் அனர்த்த முன் தயார் நிலை மற்றும் அவசர சந்தர்ப்ப பதிற்செயற்பாட்டு திட்டங்களைத் தயாரித்தல்

பேரழிவு இடம்பெறும் பட்சத்தில் அல்லது பேரழிவு இடம்பெறுகின்றபோது அது தொடர்பாக பதிற்செயற்பாடு காட்டும் பொருட்டு மாவட்ட மட்டத்திலான பொறிமுறையொன்றை உருவாக்குவதற்கு உதவியளிக்கும் செயலணி ஆவணமாக மாவட்ட அனர்த்த முன் தயார் நிலை மற்றும் அவசர நிலைமை பதிற்செயற்பாடு திட்டங்களை அறிமுகப்படுத்த முடியும். ஒரு மாவட்டத்தில் இடம்பெறுகின்ற பேரழிவுகளின் பொருட்டு பதிற்செயற்பாடு காட்டுகின்ற உயர்மட்ட முகாமைத்துவ நிறுவனமாக மாவட்ட பேரிடர் முகாமைத்துவ இணைப்பாக்கக் குழுவினை அறிமுகப்படுத்த முடியும். இக்குழுவின்/ உப குழுக்களின் அங்கத்தவர்கள் மற்றும் அவர்களின் செயற்பொறுப்புகள் மற்றும் பொறுப்புக்கள் மேற்படி திட்டத்தில் பட்டியலிடப்பட்டுள்ளன. நிர்வாகப் பிரதேசம், காணப்படுகின்ற ஆபத்துக்கள், ஆபத்து

நிலைமைகளின் பெறுபேறுகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட ஆபத்து நிலைமைகளுக்கான மதிப்பீடு, பிரதான இடங்கள் பற்றிய தகவல்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய விதம், பிரதேசத்தில் காணப்படுகின்ற பௌதீக மற்றும் மனித வளங்கள், அனர்த்த பதிற்செயற்பாட்டு பொறிமுறையுடன் சம்பந்தப்பட்ட பல்வேறுபட்ட தரப்பு நிறுவனங்களுக்கான பொறுப்புக்கள் பற்றிய தகவல்கள் இத்திட்டங்களில் உள்ளடங்கியுள்ளன.

2016 டிசம்பர் மாதத்தில் மாவட்ட அனர்த்த முன் தயார் நிலை மற்றும் அவசர நிலைமை பதிற் செயற்பாட்டுத் திட்டங்கள் 25உம் தயாரிக்கப்பட்டு அச்சிடப்பட்டுள்ளன. அதேவேளை 2016ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகளின் கீழ் பிரதேச அனர்த்த முன் தயார் நிலை மற்றும் அவசர நிலைமை பதிற்செயற்பாட்டுத் திட்டங்களை தயாரிக்கும் செயன்முறை முன்னெடுத்துச் செல்லப்பட்டது. பிரதேச அனர்த்த முகாமைத்துவத் திட்டங்களைத் தயாரிப்பதனை ஆரம்பிப்பதற்காகவும் அவற்றை அறிமுகப்படுத்துவதற்காகவும் அடிப்படை செயலமர்வுகள் 10 உம், இறுதி செயலமர்வுகள் 35-ம் நடத்தப்பட்டன. பிரதேச அனர்த்த முன் தயார் நிலை மற்றும் அவசர நிலைமை பதிற்செயற்பாட்டு திட்டங்களின் இறுதி வரைபுகளை தரப்பினர் நிறுவனங்களுக்கு வழங்குவதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் காணப்படுகின்ற பிரதேச செயலகப் பிரிவுகளில் செயலமர்வுகள் நடத்தப்பட்டதோடு அவை பற்றிய தகவல்கள் 6.2 அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

தொடர் இலக்கம்	மாவட்டம்	ஆரம்பச் செயலமர்வுகள்		இறுதிச் செயலமர்வுகள்	
		செயலமர்வுகளின் எண்ணிக்கை	பிரதேச செயலகம்	செயலமர்வுகளின் எண்ணிக்கை	பிரதேச செயலகம்
1	களுத்துறை				
2	கம்பஹ			3	மீரிகம,சிலாபம்,வத்தளை
3	காலி				
	மாத்தறை			4	மாத்தறை, தெய்வேந்திரமுனை, அத்துரலிய, வெலிகம
4	கண்டி				
5	மாத்தளை	2	மாத்தளை,தம்புள்ள	2	தம்புள்ள, பல்லேபொல
	புத்தளம்			6	கருவலகஸ்வெவ,வனாத்தவில்லுவ,நாத்தண்டிய,தன்கொட்டுவ, சிலாபம், மாதம்பே
6	இரத்தினபுரி	2	கஹவத்த, இம்புள்பே	2	எலபாத்த, கிரிஎல்ல
7	குருநாகல்			3	கல்கமுவ, குளியாப்பிட்டி மேற்கு, அலவ்வ
8	அநுராதபுரம்	2	பளுகஸ்வெவ, பதவிய	2	கெக்கிராவ, கல்னேவ
	பொலொனறுவை				
9	மன்னார்				
10	திருகோணமலை			3	கந்தளாய், தம்பக்கொமுவ,சல்லி,
11	மட்டக்களப்பு				
12	மொனராகலை			2	புத்தல, தணமல்வில
13	யாழ்ப்பாணம்	2	தெல்லிப்பழை,உடுவில்	4	பருத்தித்துறை கோப்பாய்,தெல்லிப்பழை,உடுவில்
14	வவுனியா			2	வவுனியா – தெற்கு வவுனியா
15	அம்பாந்தோட்டை	2	வலஸ்முல்லை, ஒகேவெல	2	வீரகெட்டிய, வலஸ்முல்லை
	மொத்தம்	**10**		**35**	

அட்டவணை 5.2: அனர்த்த தயார்நிலை செயலமர்வுகள்



பிரதேச அனர்த்த முகாமைத்துவ திட்டங்களைத் தயாரிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டம் -வவுனியா




பிரதேச அனர்த்த முகாமைத்துவ திட்டங்களைத் தயாரிப்பதற்கான இறுதிச் செயலமர்வு – கல்கமுவ பிரதேச செயலாளர் பிரிவு 2016.05.04

5.3 கிராம சேவகர் பிரிவு மட்டங்களில் சமுதாய முன் தயார் நிலை மற்றும் அவசர நிலைமை பதிற்செயற்பாட்டு திட்டங்களைத் தயாரித்தல்

கிராமங்களில் காணப்படுகின்ற பல்வேறுபட்ட தீங்குகளைக் கருத்திற்கொண்டு சமுதாய அனர்த்த முன் தயார் நிலை மற்றும் அவசர நிலைமை பதிற்செயற்பாட்டுத் திட்டங்கள் கிராம சேவகர் பிரிவு மட்டங்களில் தயாரிக்கப்பட்டன. சமுதாயப் பங்கேற்பு மற்றும் சமுதாய மட்டத்திலான அனர்த்தங்களை வரைபடமாக்குதல் என்பன கிராம சேவகர் பிரிவு மட்டத்திற்குரிய திட்டமிடல் செயன்முறையின் பிரதான நடவடிக்கைகளாகும். மேலும், சமுதாய மட்ட தீங்குகள் பற்றிய வரைபடங்களை தயாரித்தல், பாதுகாப்பான வீதிகளையும் பாதுகாப்பான இடங்களையும் இனங்காணுதல், முதலுதவி, உள்ளக ரீதியாக இடம்பெயர்ந்த மக்கள் சார்பாக முகாம்களை நிறுவுதல் மற்றும் முகாம்களை முகாமைத்துவம் செய்தல் தொடர்பாகவும் அவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது. 2016 ஆம் ஆண்டில் அனைத்து மாவட்டங்களிலும் கிராம சேவகர் பிரிவு மட்டங்களில் சமுதாய முன்தயார் நிலை மற்றும் அவசர நிலைமை பதிற்செயற்பாட்டு திட்டங்கள் 206 தயாரிக்கப்பட்டதோடு அதன் பௌதீக முன்னேற்றம் 95% ஆகும்.





கிராமிய அனர்த்த முன் தயார்நிலைத் திட்டங்களைத் தயாரித்தல் - வவுனியா

5.4 தேசிய/மாவட்ட/பிரதேச மட்ட ஒத்திகை நிகழ்ச்சிகள்

இந்நிகழ்ச்சிகள் தேசிய, மாவட்ட மற்றும் பிரதேச ஆகிய மட்டங்களின் மூலம் அனர்த்த முகாமைத்துவத்துடன் நேரடியாக சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களை முதலாகக்கொண்டு அனர்த்தத்திற்கு முன்னரான சந்தர்ப்பம், அனர்த்தச் சந்தர்ப்பம் மற்றும் அனர்த்தத்திற்குப் பின்னரான சந்தர்ப்பம் ஆகிய சந்தர்ப்பங்களில் அவர்களின் செயற்பொறுப்பினை இனங்கண்டு மேற்கொள்ளப்படுகின்ற ஒத்திகை நிகழ்ச்சித்திட்டமாகும். இதன்கீழ் மாவட்ட மட்ட ஒத்திகைகள் 21 உம், பிரதேச மட்ட ஒத்திகைகள் 52 உம் நடத்தப்பட்டன.





தேசிய மட்ட சுனாமி ஒத்திகை நிகழ்ச்சி -- வவுனியா



தேசிய மட்ட சுனாமி ஒத்திகை நிகழ்ச்சி - திருகோணமலை

5.5 கிராம சேவகர் பிரிவு மட்டத்தில் ஒத்திகை நிகழ்ச்சிகள்

2016 ஆம் ஆண்டில் சுனாமி, வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு போன்ற அனர்த்தங்களுக்கு உள்ளாகக்கூடிய அதிகளவு வாய்ப்பினைக்கொண்ட மாவட்டங்களில் அவசர நிலைமைகளின் போது மக்களை பாதுகாப்பான இடங்களை நோக்கிக் கொண்டு செல்லல் பற்றிய கிராம மட்ட ஒத்திகை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டதோடு அதன்போது சுனாமி ஒத்திகை நிகழ்ச்சிகள் 82 உம், மண்சரிவுகள் பற்றிய ஒத்திகை நிகழ்ச்சிகள் 54 உம், வெள்ளப் பெருக்கு பற்றிய ஒத்திகை நிகழ்ச்சிகள் 65-ம் என அமையும் வகையில் 199 நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

	மாவட்டம்	சுனாமி பற்றிய ஒத்திகைகளின் எண்ணிக்கை	வெள்ளம் பற்றிய ஒத்திகைகளின் எண்ணிக்கை	மண்சரிவு பற்றிய ஒத்திகைகளின் எண்ணிக்கை
1	கொழும்பு	4	2	
2	கம்பஹ	4	4	
3	களுத்துறை	5	2	6
4	மாத்தறை	5	4	3
5	காலி	7	3	3
6	அம்பாந்தோட்டை	6	2	3
7	இரத்தினபுரி	2	3	10
8	கேகாலை			1
9	பதுளை			10
10	மொனராகலை		3	2
11	நுவரெலியா			12
12	கண்டி			7
13	மாத்தளை			8
14	புத்தளம்	4	3	
15	குருநாகல்			
16	அநுராதபுரம்		2	
17	பொலொனறுவை		1	
18	அம்பாறை	7	3	
19	மட்டக்களப்பு		10	
20	திருகோணமலை	10	1	
21	வவுனியா		2	

22	மன்னார்	7	1	
23	கிளிநொச்சி	5	2	
24	யாழ்ப்பாணம்	10	2	
25	முல்லைத்தீவு	6	2	
		82	**52**	**65**

5.3 அட்டவணை - மாவட்டங்களில் நடத்தப்பட்ட ஒத்திகை நிகழ்ச்சிகள் பற்றிய சாராம்சம்





சுனாமி ஒத்திகையொன்றின்போது மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி செல்லும் விதம் - மாத்தறை

5.6 பாரிய நீர்த்தேக்கங்களை, அணைகளை அண்டிய பேரழிவுகள் தொடர்பான முன்தயார்நிலை நடவடிக்கைகள்

சூறாவளி அல்லது நில அதிர்வு ஏற்படுகின்ற சந்தர்ப்பம் ஒன்றில் நீர்த்தேக்கங்கள் அணைகள் என்பவற்றை அண்டியதாக அனர்த்தங்கள் ஏற்படுவதற்கு உள்ள வாய்ப்புக்களைக் கருத்திற்கொண்டு தெரிவு செய்யப்பட்ட பிரதான நீர்த்தேக்கங்களினதும் அணைகளினதும் அடிவாரத்தில் வாழ்கின்ற மக்களுக்கான முன் தயார் நிலை ஆற்றலை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. 2016ஆம் ஆண்டின் இன்றைய காலப்பகுதி வரை அணைகள் சம்பந்தப்பட்ட விழிப்பூட்டல்கள் மற்றும் ஒத்திகை நிகழ்ச்சிகள் 37 நடத்தப்பட்டுள்ளன. தேடல் மற்றும் மீட்புப் பணிகள், முதலுதவி முகாம்களுக்கான முகாமைத்துவம் மற்றும் கிராமங்களுக்கான பாதுகாப்பு போன்ற நடவடிக்கைகள், துணை குழுக்களை உருவாக்குதல், முன்னெச்சரிக்கை விடுக்கபடுதல் பற்றிய பிரச்சார பொறிமுறைகளை உருவாக்குதல், சமிங்ஞை பலகைகளைக் காட்சிப்படுத்துதல் மற்றும் இறுதியாக பாதுகாப்பான இடங்களை நோக்கி மக்களை கொண்டு செல்லல் பற்றிய ஒத்திகை நிகழ்ச்சிகளை நடத்துவதன் மூலம் நீர்த்தேக்கங்கள் மற்றும் அணைகள் என்பவற்றின் அடிவாரத்தில் வாழ்கின்ற ஆபத்தான நிலையில் இருக்கின்ற மக்களை விழிப்பூட்டுவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடங்கியிருந்தன.

5.7 நாட்டில் நீரில் மூழ்குவதன் காரணமாக ஏற்படுகின்ற மரணங்களின் எண்ணிக்கையைக் குறைத்தல்

இலங்கையில் நீரில் மூழ்குவதன் காரணமாக ஏற்பட்டதாக அறிக்கை இடப்படுகின்ற மரணங்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் ஒரு போக்கு கடந்த சில வருடங்களில் காணப்பட்டன. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாக அமைவது யாதெனில், ஆபத்துக்கு உள்ளாகியுள்ள பிரதேசங்களில் சமிங்ஞைப் பலகைகளை பொருத்துதல் மற்றும் அதன்மூலம் ஆபத்தான குளங்கள், நதிகள் மற்றும் வாவிகள் என்பவற்றில் நீராட வேண்டாம் என மக்களை விழிப்பூட்டுவதாகும். இரத்தினபுரி, மொனராகலை, மாத்தறை மற்றும் அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் களுகங்கை, கதிர்காமம், பொல்ஹேன மற்றும், நுவரவெவ, திசாவெவ என்பவற்றை அண்டியதாக சமிஞ்ஞைப் பலகைகள் பொருத்தப்பட்டுள்ளன. இதுவரை 63 சமிஞ்ஞைப் பலகைகள் பொருத்தப்பட்டுள்ளன.

அதேவேளை அனுராதபுரம், பொலநறுவை, கதிர்காமம் போன்ற பிரதேசங்களில் விழாக் காலங்களின் போது ஏற்படுகின்ற நீரில் மூழ்குதல்களைக் குறைப்பதற்கான விசேட நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.

5.8 பருவப்பெயர்ச்சி முன் தயார்நிலைத் திட்டங்கள்

வடகிழக்கு, தென்மேற்கு மற்றும் இடைப் பருவகால காற்றுடன் ஏற்படுகின்ற மழையினால் ஏற்படுத்தப்படுகின்ற அனர்த்த நிலைமைகளுக்கு பதிற்செயற்பாடு காட்டுவதற்காக அதன்மூலம் தாக்கம் ஏற்படுத்தப்படுகின்ற மாவட்டங்களிலும் பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் முன் தயார் நிலைத் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன.

தேசிய ரீதியில் 3 முன் தயார்நிலை நிகழ்ச்சிதிட்டங்கள் நடத்தப்பட்டுள்ளதோடு அவற்றுள் 2 நிகழ்ச்சித்திட்டங்கள் அனர்த்த முகாமைத்துவத்தின் பொருட்டு தாபிக்கப்பட்டுள்ளதோடு அவசர நடவடிக்கை குழுக்களைக் கூட்டி அவசர சந்தர்ப்பம் ஒன்றில் பதில் செயற்பாடு காட்டுவதற்காக அவர்கள் விழிப்பூட்டப்பட்டனர். தேசிய ரீதியில் நடத்தப்பட்ட ஏனைய நிகழ்ச்சித்திட்டம் ஊடகங்களை விழிப்பூட்டுவதாகவும். வடகிழக்கு மற்றும் தென்மேற்கு பருவக்காற்று ஆனது தாக்கம் ஏற்படுத்துகின்ற மாவட்டங்களில் அனர்த்த முகாமைத்துவத்துடன் சம்பந்தப்பட்ட தரப்புகள் நிறுவனங்கள் அவசர சந்தர்ப்பங்களில் பதில் செயற்பாடு காட்டுவதற்காக இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் 25 நடத்தப்பட்டன. அதேவேளை பிரதேச செயலாளர் பிரிவு மட்டங்களில் 82 நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.



2016 .06. 01 - களுத்துறை மாவட்டத்தில் ஏற்பட்டபருவப் பெயர்ச்சி அனர்த்த முன்தயார் நிலை நிகழ்ச்சித்திட்டம்



2016 05.18 பருவப் பெயர்ச்சி முன் தயார் நிலை தொடர்பான தேசிய மட்ட நிகழ்ச்சித் திட்டம். அ.மு.நி

5.9 வைத்தியசாலைகள் அவசர முன் தயார் நிலைத் திட்டங்களைத் தயாரித்தல்

வைத்தியசாலைகள் அவசர முன்தயார் நிலைத் திட்டங்களைத் தயாரிப்பதன் பிரதான நோக்கம் யாதெனில், மருத்துவமனை ஊழியர்களின் பாதுகாப்பு, நோயாளர்களின் பாதுகாப்பு, அவசர அனர்த்தங்களின்போது வைத்தியசாலைகளை நோக்கி வருகை தருகின்ற நோயாளர்களுக்கு சிகிச்சை அளித்தல் மற்றும் அதற்கு பதில் செயற்பாடு காட்டுவதற்காக திட்டங்களைத் தயாரிதல் என்பனவாகும். இந்த நிகழ்ச்சித்திட்டமானது வைத்தியசாலையிலும் சூழ்ந்துள்ள பிரதேசங்களிலும் இயற்கை அனர்த்தங்கள் என்ற வகையில் ஏற்படுகின்ற அனர்த்தங்களை இனங்கண்டு தகவல்களை வரைபடங்களில் உள்ளடக்கி அதன் பிரகாரம் அந்த அனர்த்தங்களை குறைப்பதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், விழிப்பூட்டுதல் மற்றும் ஒத்திகை

நிகழ்ச்சிகள் நடத்தப்படுதல் பற்றிய தகவல்கள் உள்ளடங்கிய திட்டம் ஒன்றாகும். இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 18 மாவட்டங்களில் 40 நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.

5.10 பாடசாலைகளுக்கான அனர்த்த பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்

கல்வி அமைச்சும் அனர்த்த முகாமைத்துவ நிலையமும் ஒன்றிணைந்து அனர்த்த ஆபத்துகளைக் கொண்டுள்ள பாடசாலைகளின் மாணவர்களது பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. 2016ஆம் ஆண்டு 25 மாவட்டங்களில் இத்தகைய 130 நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தி முடிக்கப்பட்டன. இந்த நிகழ்ச்சித் திட்டங்களின் மூலம் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் என்பவர்களுடன் இணைந்து குறிப்பிட்ட பாடசாலையின் அனர்த்த ஆபத்துகளைக் காட்டுகின்ற வரைபடங்களைத் தயாரித்தல், அனர்த்தங்கள் தொடர்பாக அவர்களை வழிப்பூட்டுதல் மற்றும் ஒத்திகை நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் இதன் நோக்கமாகும்.

5.11 2016 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஏனைய முன் தயார் நிலைச் செயற்பாடுகள்

5.11.1 பதுளை மாவட்ட அனர்த்த ஆபத்துகள் பற்றிய வரைபடங்கள் மற்றும் ஐந்து வருட உபாய மார்க்கத்திட்டம் தயாரிக்கப்படுதல்

பதுளை மாவட்டமானது அதிக அர்த்தங்களைக் கொண்ட ஒரு மாவட்டம் என்பதோடு குறிப்பாக, மண்சரிவுகள், வெள்ளப்பெருக்கு, காட்டுத தீ மற்றும் காட்டு யானைகளின் தொல்லை அவற்றுள் பிரதானமாக அமைகின்றன. மேற்படி அனர்த்தங்களுக்கு மத்தியில் மண்சரிவு அனர்த்தங்கள் அதிகமாகக் காணப்படுகின்ற மாவட்டமாக பதுளை மாவட்டம் ஆனது தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகத்தினால் இனங்காணப்பட்டுள்ளது. இதற்கு பிரதான காரணம் இயற்கை காரணிகளுக்கு அப்பால் காணப்படுகின்ற மனிதனினால் ஏற்படுத்தப்படுகின்ற முறைசாரற்ற காணிப் பயன்பாட்டு முறையாகும்.

பதுளை மாவட்டத்தில் காணப்படுகின்ற அனர்த்தப் பிரதேசங்களை இனங்கண்டு அதன் பிரகாரம் அபிவிருத்தித் திட்டமொன்றைத் தயாரிப்பது பிரதான நோக்கமாகும். இத்திட்டத்தை தயாரிப்பதற்காக பதுளை மாவட்டத்தில் காணப்படுகின்ற சகல நிறுவனங்களும் இணைந்து கொள்ளும். அதற்காக ஐக்கிய நாடுகள் சபையானது அனுசரணை வழங்குவதோடு அடிப்படை நடவடிக்கைகள் 2015 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2016 டிசம்பர் மாதத்தில் கிராமிய மட்டத்தில் ஏற்படுகின்ற மண்சரிவு அனர்த்தங்களுக்கான வரைபடங்கள் தயாரிக்கப்பட்டு ஆபத்தான பிரதேசங்கள் தொடர்பாக விழிப்புபூட்டப்பட்டுள்ளதோடு அது சம்பந்தமாக பெறப்பட்டுள்ள பௌதீக முன்னேற்றம் 70%ஆகும்.

5.11.2 நிபோன் பரிமாற்று நிகழ்ச்சித்திட்டம்- 2016

ஜப்பான் அரசாங்கத்தின் பிரதம அமைச்சரின் அலுவலகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட Ship For World Youth Leaders நிகழ்ச்சித் திட்டமானது இலங்கையில் இலங்கை அரசு சார்பாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டது. ஜப்பானின் இளைஞர் யுவதிகள் மற்றும் இலங்கையை உள்ளிட்ட 12 நாடுகளைச் சேர்ந்த இளைஞர் யுவதிகள் 250 பேரின் பங்கேற்புடன் நடைமுறைப்படுத்தப்பட்ட இந்த நிகழ்ச்சித்திட்டமானது, கலாசார, சமூக ரீதியில் இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் இடையில் பரஸ்பர புரிந்துணர்வு மேம்படுத்துதல் மற்றும் தலைமைத்துவத்தினை கட்டியெழுப்புதல் எனும் குறிக்கோளுடன் மேற்கொள்ளப்பட்டது.

இந்த இளைஞர் யுவதிகளை கொண்ட கப்பலானது 2016/2/14 தொடக்கம் 2016/2 /17 ஆம் திகதிவரை இலங்கையில் தரித்து வைக்கப்பட்டிருந்ததோடு அது தங்கி இருந்த காலப்பகுதியில் மேற்படி குழுக்கல் பல்வேறுபட்ட கற்கை விஜயங்களில் ஈடுபட்டன.

அதன் பிரகாரம் ஜப்பானைச் சேர்ந்த இளைஞர் யுவதிகளும் இலங்கை உள்ளிட்ட 12 நாடுகளைச் சேர்ந்த 50 இளைஞர் யுவதிகளும் 2016/02/15 ஆம் திகதி மு.ப. 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 12.00 மணி வரை அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் கற்கைச் சுற்றுலாவில் ஈடுபட்டனர்.

அதன்போது இலங்கையின் அனர்த்த முகாமைத்துவம் பற்றிய விழிப்பூட்டல், இலங்கையின் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக உலகளாவிய ரீதியில் காணப்படுகின்ற தொடர்பு மற்றும் அவசர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் தொடர்பாகவும் விரிவுரைகள் நடத்தப்பட்டன



6. விழிப்பூட்டல் பிரிவு


நிறுவனத்தின் உள்ளக பணியாளர் தொகுதியின் ஆற்றல் விருத்திக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் அரச திணைக்களங்கள், நிறுவனங்கள், முப்படை, போலீசார் சிவில் பாதுகாப்பு பிரிவு, மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளின் பிரதிநிதிகள் என்பவர்களுக்கான பயிற்சி மற்றும் விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்தல் மற்றும் அவற்றை நடாத்துதல் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் விழிப்பூட்டல் பிரிவின் பிரதான பொறுப்பாக அமைகின்றது.

மேற்படி பயிற்சி மற்றும் விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் தேசிய மட்டம், மாவட்ட மட்டம், பிரதேச செயலாளர் மட்டம், மற்றும் கிராம உத்தியோகத்தர் மட்டம் என்பவற்றில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. தேசிய மட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் மேற்கொள்ளப்படுவதோடு மாவட்ட, பிரதேச செயலக பிரிவுகள் மற்றும் கிராம மட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ இணைப்பாக்க அலகுகளின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

2016 ஆம் ஆண்டில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பயிற்சி மற்றும் விழிப்பூட்டல் நிகழ்ச்சி திட்டங்களுக்காக 12.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு பொதுத் திறைசேரியினால் பெற்றுத் தரப்பட்டது. அதன்படி மேற்படி நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தி நாட்டின் மக்களை அனர்த்த முகாமை தொடர்பாக விழிப்பூட்டல், சம்பந்தப்பட்ட குழுக்களை பயிற்றுவித்தல், தேசிய மட்டத்தில் இருந்து கிராமிய மட்டம் வரை நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்த முடிந்தன. அதன் பிரகாரம் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 2016 செயற்பாட்டுத் திட்டத்தின் இலக்குகளை அடைந்துகொள்ள முடிந்தன. 2016 ஆம் ஆண்டு விழிப்பூட்டல் மற்றும் பயிற்றுவித்தல் நடவடிக்கைகளுக்காக

கிடைக்கப்பெற்ற நிதி ஒதுக்கீடுகள் மற்றும் திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் பௌதீக முன்னேற்றமானது 99% வரை பதிவிட முடிந்தது.

தேசிய மட்ட நிகழ்ச்சி திட்டங்களுக்காகவும் மாவட்ட மட்ட நிகழ்ச்சி திட்டங்களுக்காகவும் நிதி ஒதுக்கீடு



பிரிந்து சென்றவிதம் கீழே தரப்பட்டுள்ளது

2016 ஆம் ஆண்டு அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் மனிதவள அபிவிருத்திக்காக 2.5 மில்லியன் ரூபா கிடைக்கப்பெற்றதோடு அந்த நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தி ஆற்றல் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. அதன் பிரகாரம் களனி பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படுகின்ற அனர்த்த முகாமைத்துவம் பற்றிய டிப்ளோமா பாடநெறியின் பொருட்டு 4 உத்தியோகத்தர்களுக்காகவும், பட்டப்பின் படிப்பு பாடநெறியின் பொருட்டு 4 உதவிப் பணிப்பாளர்களுக்காகவும் நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றுக்கு மேலதிகமாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவியாளர்களுக்கும் முகாமைத்துவ உதவியாளர்களுக்காகவும் புவியியல் சம்பவ ஏற்பாட்டு முறைமைகள் மற்றும் வரைபடமாக்கல் பற்றிய நடைமுறை ரீதியான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், அலுவலக முறையியல்கள், கடிதக் கோப்புமயமாக்கம் மற்றும் பெருகை செயன்முறை தொடர்பாகவும் பயிற்சி வழங்கப்பட்டது.

6.1 தேசிய மட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

அனர்த்த முகாமைத்துவத்திற்குறியதாக இரத்தினபுரி மாவட்டத்தில் இளம் தொண்டர் குழுக்களை தாபிப்பதற்கான முதலாம் கட்டமானது இரத்தினபுரி, எஹெலியகொடை, குருவிட்ட, எலபாத்த, நிவித்திகல, கிரியெல்ல, அயகம, மற்றும் கலவான ஆகிய பிரதேச செயலக பிரிவுகளைச் சேர்ந்த அங்கத்தவர்களுக்காக 2016.08.29 ஆம் திகதி தொடக்கம் 2016.09.01 ஆம் திகதி வரை பட்டங்கல இளைஞர் சேவைகள் பயிற்சி நிலையத்திலும் இரண்டாம் கட்டம் பலாங்கொடை, இம்புல்பே, வெலிகெபொல, பெல்மடுல்ல, ஓபநாயக்க, எம்பிலிப்பிட்டிய, கொலொன்ன, கொடக்கவெல, மற்றும் காவத்தை ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த அங்கத்தவர்களுக்காக 2016.09.13 ஆம் திகதி தொடக்கம் 2016.09.16 ஆம் திகதி வரை கல்தொட்ட மக்கள் எழுச்சி பயிற்சி நிலையத்தில் வதிவிட செயலமர்வொன்று நடத்தப்பட்டது.

இரத்தினபுரி மாவட்டத்தில் அனர்த்த முகாமைத்துவ இளம் தொண்டர் குழுக்களை தாபிப்பதற்கான 2 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கேற்ற இளைஞர் யுவதிகளின் பங்கேற்போடு இப்பயிற்சிச் செயலமர்வின் இறுதிக்கட்டமாக நடைமுறை ரீதியான செயற்பாடுகளுடன்கூடிய வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு பற்றிய ஒத்திகை (Drill) மற்றும் பயிற்சி பெற்ற இளைஞர் யுவதிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படுதல் மற்றும் இறுதி விழா என்பன அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் கௌரவ அனுர பிரியதர்சன யாப்பா அவர்களினதும், அனர்த்த முகாமைத்துவ பிரதி அமைச்சர் கௌரவ துனேஷ் கன்கந்த அவர்களினதும், அமைச்சின் செயலாளர் திரு. எஸ். எஸ். மீயனவல அவர்களினதும் தலைமையில் 2016. 09. 30 ஆம் திகதி மு.ப 9.00 மணிக்கு எம்பிலிப்பிட்டிய இராணுவ பொறியியல் பயிற்சி பாடசாலையில் நடத்தப்பட்டது.

6.2 மாவட்ட மட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

மாவட்ட மட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் தலைமையகத்தின் இணைப்பாக்கத்தின் கீழ் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அலகினால் நடைமுறைபடுத்தப்பட்டன. மாவட்ட நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தியதன் அடிப்படையாக அமைந்தது யாதெனில் அந்தந்த மாவட்டங்களில் காணப்படுகின்ற அனர்த்த ஆபத்து மற்றும் அந்தந்த மாவட்டங்களுக்கு தாக்கம் ஏற்படுத்துகின்ற அனர்த்தங்களின் பிரகாரம் பொதுமக்களை விழிப்பூட்டுதல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. அந்தந்த மாவட்டங்களுக்கு நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ள விதம் கீழே தரப்பட்டுள்ளது.

இலக்கம்	மாவட்டம்	வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகள்	இலக்கம	மாவட்டம்	வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகள்
1	அநுராதபுரம்	333,650.00	14	குருநாகல்	635,000.00
2	அம்பாறை	340,110.00	15	மன்னார்	333,985.00
3	பதுளை	584,000.00	16	மாத்தளை	441,175.00
4	மட்டக்களப்பு	320,000.00	17	மாத்தறை	532,206.50
5	கொழும்பு	482,228.50	18	மொனராகலை	347,280.00
6	காலி	492,505.00	19	முல்லைத்தீவு	373,970.00
7	கம்பஹ	402,375.00	20	நுவரெலியா	390,000.00
8	அம்பாந்தோட்டை	480,020.00	21	பொலொனறுவை	362,615.00
9	யாழ்ப்பாணம்	475,030.00	22	புத்தளம்	430,000.00
10	களுத்துறை	353,800.00	23	இரத்தினபுரி	501,100.00
11	கண்டி	369,300.00	24	திருகோணமலை	362,500.00
12	கேகாலை	500,000.00	25	வவுனியா	385,100.00
13	கிளிநொச்சி	364,572.40			

அட்டவணை 6.1: மாவட்ட மட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

2016 ஆம் ஆண்டு விழிப்பூட்டல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 25 மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டதோடு அவற்றுக்கு மேலதிகமாக தேசியமட்ட பயிற்சி மற்றும் விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் கொழும்பு தலைமையகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டன. அதன் பிரகாரம் 2016ஆம் ஆண்டில் மாவட்ட மட்ட நிகழ்ச்சி திட்டங்களிலும் தேசிய மட்ட நிகழ்ச்சித் திட்டங்களிலும் பங்கேற்ற ஆட்கள் பற்றிய விவரமான அறிக்கையொன்று கீழே தரப்பட்டுள்ளது.

இலக்கம்	மாவட்டம்	நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கேற்ற மொத்த எண்ணிக்கை
01	அம்பாறை	1748
02	அநுராதபுரம்	1623

03	பதுளை	1437
04	மட்டக்களப்பு	1000
05	கொழும்பு	2247
06	காலி	3033
07	கம்பஹ	1450
08	அம்பாந்தோட்டை	3290
09	யாழ்ப்பாணம்	1836
10	களுத்துறை	2586
11	கண்டி	1912
12	கேகாலை	2092
13	கிளிநொச்சி	1060
14	குருநாகல்	2012
15	மன்னார்	1320
16	மாத்தளை	1455
17	மாத்தறை	2156
18	மொனராகலை	1844
19	முல்லைத்தீவு	1366
20	நுவரெலியா	1630
21	பொலொனறுவை	1322
22	புத்தளம்	2537
23	இரத்தினபுரி	1296
24	திருகோணமலை	1534
25	வவுனியா	1517
26	தேசிய மட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்	2010

அட்டவணை 6.3: நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கேற்ற மொத்த எண்ணிக்கை

2016 ஆம் ஆண்டு தேசிய மட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மத்தியில் மாவட்டத்தைச் சேர்ந்த 198 இளைஞர் யுவதிகளுக்கு வதிவிட பயிற்சி வழங்கப்பட்டு அனர்த்த முகாமைத்துவ இளம் தொண்டர் குழுக்களாக சமூக மயப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இந்த நிகழ்ச்சித்திட்டமானது தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், தேசிய இளைஞர் படையணி, அனர்த்த முகாமைத்துவ நிலையம் என்பன ஒருங்கிணைந்து நடைமுறைப்படுத்தப்பட்டது.



Leadership Training Program



Camp Management Training



First Aid Programme



Awareness Program for Tri force officers on Disaster Management



Exhibition on Disaster Management



Awareness Program for Public officers on Disaster



Fire Safety Training Program



Search & Rescue Training Program



Awareness Program for School Children



Awareness Program on Rural Community

7. அவசர நடவடிக்கைகள் பிரிவு

அவசர நிலைமை நடவடிக்கை நிலையமானது 2006 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டதோடு வாரத்தின் 7 நாட்களிலும் 24 மணித்தியாலங்கள் பூராகவும் அமுல்படுகின்றது. இடம்பெறுவதற்கு வாய்ப்புள்ள இயற்கை அனர்த்தங்கள் தொடர்பாக தொழில்நுட்ப நிறுவனங்களிலிருந்து முன்கூட்டிய எச்சரிக்கை விடுத்தல்கள் பற்றிய தகவல்கள் அவசர நிலைமை நடவடிக்கை நிலையத்திற்குக் கிடைப்பதோடு உரிய தகவல்கள் கிடைக்கப்பட வேண்டிய நபருக்கு தகவல்களைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் அந்த நிலைமையை இடையறாது மேற்பார்வை செய்தல் இந்த நிலையத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. நாடு பூராகவும் இடம்பெறுகின்ற இயற்கை மற்றும் மனிதர்களால் ஏற்படுத்தப்படுகின்ற அனர்த்தங்கள் தொடர்பாக சகல தகவல்களும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் சேகரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதோடு நாளாந்த தர நியம அறிக்கையொன்றும் தயாரிக்கப்படுகின்றது.

இயற்கை மற்றும் மனிதர்களால் ஏற்படுத்தப்படுகின்ற அனர்த்த நிலைமையின்போது அனர்த்த முகாமைத்துவ நிலையங்களால் இராணுவம், பொலிஸ் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட தரப்புக்களின் உதவியோடு மீட்பு நடவடிக்கைகளை இணைப்பாக்கம் செய்தல், வளங்களை ஈடுபடுத்துதல் மற்றும் அவசர நிவாரணங்களை வழங்குதல் இணைப்பாக்கம் செய்யப்படுதல் மேற்கொள்ளப்படுகின்றது. இந்த நிலையமானது கொழும்பு 07, வித்யா மாவத்தையில் அமைந்துள்ள புதிய கட்டடத்தில் முன்னேற்றப்பட்ட வசதிகளுடன் இயங்கி வருகின்றது.

- **வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள்**

இலங்கையில் 2016 மே மாதம் ஏற்பட்ட சீரற்ற காலநிலையின் காரணமாக வெள்ளப்பெருக்கு நிலைமை ஏற்பட்டதன் விளைவாக கொழும்பு, கம்பஹ, புத்தளம், வவுனியா, இரத்தினபுரி, கேகாலை, குருநாகல், களுத்துறை, மாத்தறை ,காலி ,அம்பாந்தோட்டை, அனுராதபுரம், பொலனறுவை, வவுனியா,மன்னார், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்கள் பாதிக்கப்பட்டன. ஏற்பட்ட பாரிய மழையின் காரணமாக களனி கங்கையின் நீர் மட்டம் ஆனது படிப்படியாக அதிகரித்ததோடு அதன் காரணமாக கொழும்பு மற்றும் கம்பஹ ஆகிய மாவட்டங்கள் பெரிதும் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக குறிப்பிடமுடியும்.

2016 ஜனவரி மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் பதிவாகிய வெள்ளப்பெருக்கின் காரணமாக பாதிக்கப்பட்ட மொத்த குடும்பங்களின் எண்ணிக்கையானது 110,596 ஆகும். மாவட்ட இணைப்பாக்க அலகுகளினால் உதவிகோரப்பட்ட வேளையில் அவசர நடவடிக்கை தொழிற்பாட்டு நிலையமானது போலீஸ் மற்றும் ஆயுதப் படையினரை உதவியாகக் கொண்டு மீட்பு நடவடிக்கைகள், மக்களை பாதுகாப்பான இடங்களை நோக்கி கொண்டு செல்லல் மற்றும் அவசர சந்தர்ப்ப நிவாரண நடவடிக்கைகள் என்பவற்றை இணைப்பாக்கம் செய்தது.



களனி கங்கை பெருக்கெடுத்ததன் பின்னர் மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி கொண்டு செல்லப்படுதல்

- **மண்சரிவுகள்**

சீரற்ற வானிலையில் ஏற்பட்ட வளர்ச்சியுடன் மண்சரிவுகளும், மண்சரிவு ஆபத்துக்களும் கேகாலை, கண்டி, இரத்தினபுரி, நுவரேலியா, மாத்தளை, மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களில் ஏற்பட்டதோடு பின்வரும் பல பாரதூரமான அனர்த்தங்கள் மேற்படி அனர்த்த காலப்பகுதியில் இடம்பெற்றன.

கேகாலை மாவட்டத்தில் தெஹியோவிட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள டெனிஸ் தோட்ட மலையானது மண்சரிவுக்கு உள்ளானதன் காரணமாக நான்கு மரணங்கள் பதிவானது. அரநாயக்க பிரதேசத்தில் ஏற்பட்ட மண்சரிவின் காரணமாக 48 மரணங்கள் இடம்பெற்றதோடு 113 பேர் காணாமல் சென்றனர். புலத்கொகுபிட்டியவில் ஏற்பட்ட மண்சரிவின் காரணமாக 14 மரணங்கள் பதிவாகின. காணாமல்போன ஆட்களின் எண்ணிக்கை இரண்டாகும். மண்சரிவு தொடர்பாக ராணுவ தலைமையகம் மற்றும் கட்டளைத் தளபதி- பாதுகாப்பு படைத் தலைமையகம்(மேற்கு) விழிப்பூட்டப்பட்டு தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகள் என்பவற்றுக்காக படைகள் ஈடுபடுத்தப்பட்டன.





அரநாயக்க, தெஹியோவிட்ட,புலத்கொகுபிட்டிய மண்சரிவுகள் -தேடுதல் மற்றும் மீட்புப் பணிகள்

7.1 அனர்த்தத்திற்குப் பின்னரான முகாமைத்துவ நடவடிக்கைகளை இணைப்பாக்கம் செய்தல்

- மழைக்காலம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் சகல ஊடகங்களும் விழிப்பூட்டப்படும் நடவடிக்கைகள் 24 மணித்தியாலங்களிலும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன. மேலும் சகல முன்னறிவிப்புகள் தொடர்பாகவும் அறிவித்தல்கள் கிடைக்கப்பெற்ற உடனடுத்து அவை ஊடகங்களுக்கு இடையறாது வழங்கப்பட்டன. வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவுகள் பற்றிய முன்னறிவித்தல்கள் சார்பாக தொழில்நுட்ப தரவுகள் தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பாண்மை மற்றும் நீர்ப்பாசன திணைக்களம் என்பவற்றிலிருந்து கிடைக்கப்பெறுவதோடு அவை அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அவசர நடவடிக்கை கூட்டத்தின் மூலம் முன்னெச்சரிக்கை வழங்கப்படும் முறையியலின் மூலமாக பாதிப்புக்குள்ளாகக்கூடிய மக்களுக்கு வழங்கப்படுகின்றன.

- கொழும்பு, கொலொன்னாவை, கடுவளை ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு நிலைமையின் காரணமாக இடம்பெயர்ந்த மற்றும் பாதிக்கப்பட்ட மக்கள் இலங்கை கடற்படை, பொலீஸ் கப்பல் பிரிவினால் மற்றும் வான்படை என்பவற்றின் மூலம் இணைப்பாக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு பாதுகாப்பான இடங்களை நோக்கி ஆற்றுப்படுத்தப்பட்டதுடன் வீடுகளின் மேல் மாடிகளில் பாதுகாப்பாக தங்கியிருந்த மக்களுக்கு தொடர்ச்சியாக உணவுகள் வழங்குவதற்காக கடற்படையினரதும் விமானப்படையினரதும் உதவி பெற்றுக்கொள்ளப்பட்டது. இராணுவம் மற்றும் பொலிசார் மனித உயிர்களை பாதுகாக்கும் நடவடிக்கைகளிலும் நிவாரண சேவைகள் வழங்கப்படும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர்.

- இடம்பெயர்ந்தவர்களுக்காக சமைத்த உணவு, உலர் உணவு, ஆடை அணிகலன்கள், தற்காலிக வீடுகள்(Tent) வழங்கப்பட்டதோடு அவை அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தினால் விநியோகிக்கப்பட்டன.

- சுகாதார அமைச்சானது இணைப்பாக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு தொடர்புடைய சுகாதார குழுக்களை பாதுகாப்பான இடங்களை நோக்கி ஆற்றுப்படுத்தியது. சுற்றாடல் அமைச்சின் திண்மக் கழிவுப் பொருள் அகற்றப்படுதல் பற்றிய கருத்திட்டத்துடன் இணைந்து பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் சேகரிக்கப்பட்டு மீள்சுழற்சி நடவடிக்கைகள் பற்றிய வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது.

- இவற்றுக்கு மேலதிகமாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட மீன்பிடி படகுகள் மற்றும் அரச சார்பற்ற அமைப்பொன்றில் இருந்து பெறப்பட்ட சுமார் 47 படகுகள் மே மாதம் 18 தொடக்கம் 22 வரையிலான காலப்பகுதியில் இடம்பெயர்ந்த மக்களை மீட்பதற்காக ஈடுபடுத்தப்பட்டன.

➢ **பலமான / கடுங் காற்று**

2016 ஆம் ஆண்டு கடுங் காற்றுச் சம்பவங்கள் 83 பதிவாகியதோடு 1,846 குடும்பங்கள் அதன் மூலம் பாதிக்கப்பட்டன. மீட்புப் பணிகளை இணைப்பாக்கம் செய்தல், வீதிகளை துப்பரவு செய்தல், தொடர்பாடல் மற்றும் மின்சாரத் தொடர்புகளை வழமை நிலைக்குக் கொண்டு வருதல் மற்றும் தேசிய அனர்த்த சேவைகள் நிலையம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு என்பவற்றின் உதவியோடு பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் வழங்க அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு இயன்றது. பருவகாலம் ஆரம்பிப்தற்கு முன்னர் தமது வீட்டுக்கு அருகாமையில் அமைந்துள்ள ஆபத்துமிகு மரங்களையும் கிளைகளையும் அகற்றிக் கொள்ளுமாறு அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் பொது மக்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

➢ **காடுகள் / ஏனைய தீயின்போது அவசர நிலைமை பதிற்செற்பாட்டு நடவடிக்கைகள்**

2016 சனவரி தொடக்கம் செப்டெம்பர் வரையிலான காலப்பகுதியில் நகரங்களில் தீ விபத்துச் சம்பவங்கள் 29 உம், காட்டுத் தீ ஏற்பட்ட சந்தர்ப்பங்கள் 29 உம் பதிவாகியதோடு அனர்த்த முகாமைத்துவ நிலையங்கள் கொண்டுள்ள வினைத்திறன்மிகு தொடர்பாடல் வலையமைப்பின் காரணமாக துரிதமாக பொலிசாரினதும்,விமானப் படையினதும், இராணுவத்தினதும் உதவியை இதன்பொருட்டு பெற்றுக்கொள்வதற்கு அவசர நிலைமை நடவடிக்கை நிலையத்தினால் முடிந்தது. மக்களுக்கும் சொத்துக்களுக்கும் சுற்றாடலுக்கும் ஏற்படக்கூடிய பாரியளவிலான சேதங்களை இதன்மூலம் தவிர்த்துக்கொள்ள முடிந்தது. வனப் பாதுகாப்புத் திணைக்களத்தினதும் கிராம மக்களினதும் உதவியோடு இந்த தீயினை கட்டுப்படுத்துவதற்காக இராணுவ, விமானப் படை மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களை துரிதமாக ஈடுபடுத்த இதனால் முடிந்தது.

➢ **வெடிப்புகள்**

2016.06.05 ஆம் திகதி சாலாவ இராணுவ முகாமின் ஆயுதக் களஞ்சியம் வெடித்ததன் காரணமாக ஏற்பட்ட தீயினை தொடர்ந்து அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் பாதுகாப்பு பதவிநிலை பிரதானியின் (OCDS) அலுவலகத்துடன் இணைப்பாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி அனுப்பிவைக்கப்பட்டதுடன், ஈடுபடுத்தப்பட்டுள்ள பிணி வண்டிகள் மற்றும் தீயணைப்பு வண்டிகள் தொடர்பாக

பிறதேசத்திற்குப் பொறுப்பான இராணுவ உத்தியோகத்தரிடம் தொடர்புகொண்டு தேவைகள் தொடர்பாக ஆராய்ந்து தேவையான ஏனைய தகவல்கள் தொடர்பாக மக்களை விழிப்பூட்டி ஊடகங்களுக்கு அவை வழங்கப்பட்டன. மக்களின் பாதுகாப்புத் தொடர்பாக விழிப்பூட்டல்களை மேற்கொண்டு சுமார் 6 கிலோமீட்டர்களுக்கு அப்பால் மக்களை அகற்றுவதற்குத் தேவையான அறிவித்தல்கள் மற்றும் மின் துண்டிப்பு நடவடிக்கைகள் இணைப்பாக்கம் செய்யப்பட்டன.

சீதாவக்க மற்றும் தொம்பே பிரதேச செயலாளர்களுடன் இணைந்து பாதுகாப்பான இடங்களில் தங்கியுள்ள மக்களுக்குத் தேவையான உணவு மற்றும் நீர் என்பவற்றைப் பெற்றுக்கொடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது. அகதிமுகாம்களில் தங்கியிருந்த மக்களுக்கு இரவு வேளையில் தேவைப்படும் பொருட்களை பெற்றுக்கொடுப்பதற்காக தேசிய நிவாரண சேவைகள் நிலையத்தில் இணைப்பாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- **வறட்சியினால் பாதிக்கப்பட்ட மக்கள்**

  2016 சனவரி மாதம் தொடக்கம் டிசெம்பர் மாதம் வரையிலான காலப் பகுதியில் 23 மாவட்டங்களில் ஏற்பட்ட வறட்சியின் காரணமாக பாதிக்கப்பட்டதாகப் பதிவாகிய மொத்தக் குடும்பங்களின் எண்ணிக்கை 274,242 ஆகும் என்பதுடன் நபர்களின் எண்ணிக்கையானது 1,025,839 ஆகும். இதன்பொருட்டு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அலகுகளுடன் இணைந்து நிவாரண தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ட்ரக்டர் பவுசர்களைக் கொள்வனவு செய்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீர் வழங்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது.

வெள்ளப்பெருக்கு மற்றும் ஏனைய பேரழிவுகள் சம்பந்தமான அவசர பதிற் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்

டொகல் ரோப் 88 (200 மீற்றர்), தேடல் விளக்குகள் 103, 70 படகுகள், 28 எஞ்சின்கள், 01 மெகா போன், 05 மண் வெட்டிகள், 05 சவல்கள், 30 கிராம பூட்ஸ்கள், 2000 மழை அங்கிகள், 550 டோச்கள், 550 வயர் கட்டர்கள், 72 சங்கிலி வாள்கள், 280 மன்னாக் கத்திகள், 55 சங்கிலி கப்பிகள், 05 கோடாரிகள், 05 சிறிய வாள்கள், 550 கண் மறைப்புக்கள், 30 கையுறைகள், 1000 மழை மாணிகள், கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அவசர பதிற்செயற்பாட்டு நடவடிக்கைகளுக்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கான நிதி ஏற்பாடுகள்

கொள்வனவு செய்யப்படுதல் - விபரம்	மோத்த ஒதுக்கீடுகள் 2016 (ரூ.) மி.
டொகல் ரோப்132 (200மீற்றர்)	11.13
படகுகள் 70	10.78
PA Sys- 55	6.22
சங்கிலி வாள் 72	4.64
மழை அங்கிகள் 2000	2.68
மழை மாணிகள் 1000	2.75
சங்கிலி கப்பிகள் 55	0.275
கண் மறைப்புக்கள் 550	0.23
மன்னாக் கத்திகள 280	0.46
மேகா போன் 01	0.15

மண் வெட்டிகள் 05	
சவள் 05	
கிராம பூட்ஸ் 30	
கோடாரிகள் 05	
சிறிய வாள்கள் 05	
கை உறைகள் 30	

அட்டவணை 7.1: கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள்





கடற்படையினருக்கு தேடல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளுக்குத் தேவையான உபகரணங்கள் வழங்கப்படுதல்

அனர்த்தம்	பாதிக்கப்பட்ட		மரணங்களின் எண்ணிக்கை	காயமுற்ற நபர்களின் எண்ணக்கை	காணாமற்போன நபர்களின் எண்ணக்கை	சேதமுற்ற வீடுகளின் எண்ணிக்கை	
	குடும்பங்களின் எண்ணிக்கை	நபர்களின் எண்ணக்கை				முழுமையாக	பகுதியளவாக
வறட்சி	274,242	1,025,839	-	-	-	-	-
வெள்ளம்	110,596	448,833	26	22	0	385	2549
பலமான காற்று	1,839	7,076	4	3		59	1830
விலங்குகளின் தாக்குதல்கள்	-	-	1	12	-	-	-
நீரில் மூழ்குதல்	7	14	13	-	5	-	-
மின்னல் தாக்கம்	38	154	9	9		6	25
மண்சரிவுகள்	7,903	28,270	67	9	117	244	1776
அணைகள் சரிதல்	3,616	14,041	9	5		30	591
மொத்தம்	**398,241**	**1,524,227**	**129**	**60**	**122**	**724**	**6771**

அட்டவணை 7.2: ஏற்பட்ட அனர்த்தங்களின் விபரங்கள்

மூலம் *: Disinventra, 2016*

7.2 முன்னறிவித்தல்கள்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினதும் மாவட்ட அலகுகளினதும் கிராமிய மட்ட சமுதாயங்களினதும் முன்னெச்சரிக்கை விடுத்தலை பிரச்சாரம் செய்வதற்கான ஆற்றலை வலுவூட்டுவதற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் உச்சமட்ட முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. 77 முன்னெச்சரிக்கை விடுத்தல் கம்பங்கள் கடற்கரை பூராக அமைந்துள்ளதோடு குறுந்செய்தி முறையியலொன்றின் ஊடாக மக்களை விழிப்பூட்டும் நடவடிக்கைகள் நவீனமயப்படுத்தப்பட்டு புதிய முறைமையொன்றின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. தற்போது நாட்டின் பெரும்பாலான பகுதிகள் உள்வாங்கப்படும் வகையில் முன்னெச்சரிக்கை முறைமையானது பரிணாமமடையச் செய்யப்பட்டுள்ளது. மேலும் VHF முறையின் ஊடாக நில மட்டம் வரை தொடர்பாடல் நடவடிக்கைகள் வியாபிக்கச்செய்யப்பட்டுள்ளன.

- **இடை அரச வலையமைப்பு (Intra Government Network)**

டயலொக் நிறுவனமானது Broad band இணையத்தள வசதியின் ஊடாக இதனை முன்பிருந்ததைவிட குறைந்த செலவிலான முறையொன்றாகத் தாபிக்க முடிந்ததுள்ளது. தொழில்நுட்ப நிறுவனங்கள், ஊடக மற்றும் பொலிஸ் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அவசர நிலைமை நடவடிக்கை நிலையத்தோடு முழுமையாக இணைந்துள்ளது. இந்த 15 நிறுவனங்களுக்கு மத்தியில் தடையின்றி தொடர்பாடல் இடம்பெறுவதை உறுதிப்படுத்துவதற்காக 03 இலக்கங்களின் கீழ் இந்த முறைமை தாபிக்கப்பட்டுள்ளது. மேலும் டயலொக்கின் Broad band இணையத்தள வசதியினைப் பயன்படுத்தி அவசர அனர்த்த சந்தர்ப்பமொன்றில் தொடர்பாடல் நடவடிக்கைகளை முறையாகப் பேணிச் செல்வதற்காக இடை அரச தொடர்பாடல் வலையமைப்பானது வினைத்திறனுடன் பேணிச் செல்லப்பட்டது.

- **Email முறைமையினை நவீனமயப்படுத்துதல்**

தகவல்களைப் பரிமாறிக்கொள்ளும் முறைசார்ந்த முறையியலொன்றாகிய Email வசதியானது மகிவும் வினைத்திறனாகவும் ஆக்கவிளைவுடனும் பயன்படுத்தக்கூடிய வகையில் தாபிக்கப்படுதல்.

- **117 web portal அறிமுகம் செய்யப்படுதல்**

அவசர அனர்த்த நிலைமைகளின்போது தமது தேவைகளை web application ஒன்றைப் பயன்படுத்தி மிகவும் துரிதமாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்குப் பெற்றுக்கொடுக்கக்கூடியவாறு web portal ஒன்று Virtusa Pvt (Ltd.) நிறுவனத்தினது தலையீட்டின் கீழ் அனர்த்த முகாமைத்தவ நிலையத்துக்குப் பெற்றுக்கொடுக்கப்பட்டது. இதன் மூலம் மக்களுக்கு தமது தேவைகள், நிவாரணச் சேவை தேவைகள் மற்றும் அனர்த்தங்களுக்கு உள்ளானதன் காரணமாக ஏற்பட்ட அனர்த்த நிலைமைகளுக்கு உரிய தகவல்களை வழங்க முடிந்தது.

- **இலங்கை பேரழிவு வள வலையமைப்பு**

இலங்கை பேரழிவு வள வலையமைப்பினைப் பயன்படுத்தி ஒவ்வொரு மாவட்டத்திலும் தற்போது நிலவுகின்ற பல்வேறுபட்ட உபகரணங்களையும் மனித வளங்களையும் இனங்கண்டு அந்த உபகரணங்களையும் மனித வளங்களையும் அவசர நிலைமைகளில் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வது இடம்பெறுகின்றது. அவசர நிலைமையொன்றின்போது பயன்படுத்தும் முகமாக ஒவ்வொரு மாவட்டத்திலும் காணப்படுகின்ற இந்த வளங்கள் பற்றிய தரவுத் தளம் 3

மாதங்களுக்கொருமுறை அவசர நிலைமைக்கான நடவடிக்கை நிலையத்தினால் இற்றைபடுத்தப்படுகின்றது.

- **அழைப்பு நிலையம்**

2013 ஆம் ஆண்டு தொடக்கம் இயங்கி வருகின்ற அனர்த்த முகாமைத்துவ அழைப்பு நிலையமானது (அழைப்பு இலக்கம் 117) அனர்த்தச் சந்தர்ப்பங்களின்போது மக்களுடன் தொடர்பாடல் செய்வதற்காக தாபிக்கப்பட்டது. அழைப்பு இயக்குனர்கள் 20 பேர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதோடு அவசர நிலைமை நடவடிக்கை நிலையமானது 24 மணித்தியாலங்கள் பூராக இயங்குகின்றது. இதுவரை அழைப்பு நிலையத்திற்கு முறைப்பாடுகளுக்கான அழைப்புகள், அவசர அழைப்புகள், நழுவிச் சென்ற அழைப்புகள் மற்றும் துண்டிக்கப்பட்ட அழைப்புகள் போன்றவகையில் கிடைக்கப்பெற்ற பலவேறுபட்ட அழைப்புகள் 105,498 க்கு மத்தியில் இந்த வருடம் டிசெம்பர் 31 ஆம் திகதி வரை 18278 அழைப்புக்களுக்கு துரித பதிற் செயற்பாடு காட்டப்பட்டுள்ளது.

117 தொலைபேசி கூடத்தினை நவீனமயப்படுத்தல்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 117 தொலைபேசி அழைப்பு கூட்டத்திற்காக புதிய மென்பொருள் ஒன்றை பொருத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தினூடாக மேற்கொள்ளப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

ஏற்பட்ட அவசர அனர்த்த நிலைமையின் கீழ் SLT மனுதம் சேவை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 98 CDMA தொலைபேசிகள் அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு வழங்கப்பட்டதோடு அவற்றுள் 82 தொலைபேசிகள் தொடர்புடைய தரப்பு நிறுவனங்களுக்கு மத்தியில் வினியோகிக்கப்பட்டு அனர்த்த முகாமைத்துவ நிலையத்துடனான தொடர்பாடல் வலையமைப்பு வினைத்திறன் ஆக்கப்பட்டது.





- **அவசர நிலைமை பதிற்செயற்பாட்டுக் குழு (அ.ப.கு)**

அத்தியாவசிய சேவைகளுக்கான சிரேஸ்ட அங்கத்தவர்கள் மற்றும் அவசர நிலைமைகளில் பதிற்செயற்பாடு காட்டுகின்ற தரப்புக் குழுக்கள், அனர்த்தமொன்றின்போது சம்பந்தப்பட்ட றிறுவனங்களோடு இணைந்து வளங்களை ஈடுபடுத்தக்கூடிய அவசர பதிற்செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் நேரடியாகத் தொடர்புடைய தரப்பு நிறுவனங்கள் என்பவற்றைக் கொண்டு அவசர நிலைமை பதிற் செயற்பாட்டுக் குழு அமைந்துள்ளது. 2016 ஆம் ஆண்டினுள தேசிய மட்டத்தில் இடம்பெற்ற பாரிய இரண்டு அனர்த்தங்களின்போது தேவையான சலுகையானது அவசர நிலைமை பதிற் செயற்பாட்டுக் குழுவினால் பெற்றுத்தரப்பட்டது. அதன் பிரகாரம் கேகாலை மாவட்டத்தில் ஏற்பட்ட பாரிய மண்சரிவுகளின்போது ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதோடு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்கள் பல நாட்களாக வழங்கப்பட்டன.

➢ டெங்குத் ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டம்

2016 ஆம் ஆண்டினுள் 25 மாவட்டங்களிலும் அனர்த்த முகாமைத்துவ இணைப்பாக்க அலகுகளினால் மாகாண, மாவட்ட மற்றும் கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் நாடு முழுவதிலும் டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்வதற்காக நடைவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேலும் அனர்த்த முகாமைத்துவ அலகினால் பிரதேசத்திலுள்ள சுகாதார அதிகாரிகள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் இராணுவத்தினர் மற்றும் பொலீசார் என்போரின் ஒத்துழைப்பு பெறப்பட்டு டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைபடுத்தப்பட்டு வருகின்றன.

➢ அவசர சந்தரப்ப்ங்களில் ஊடக இணைப்பாக்கம்

அனர்த்தச் சந்தர்ப்பங்களில் 24 மணித்தியாலங்கள் பூராகவும் சகல அச்சு மற்றும் இலத்திரணியல் ஊடகங்களையும் பயன்படுத்தி முன்னறிவித்தல்களை விடுத்து மக்களை விழிப்பூட்டும் நடவடிக்கைகள் நிதமும் மேற்கொள்ளப்படுகின்றன.

➢ தேசிய அவசர நிலைமை நடவடிக்கைத் திட்டம் (தே.அ.நி..ந.தி)

தேசிய அவசர நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் நாட்டில் பேரழிவுகள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் தெளிவுபடுத்தப்படுவதோடு இலங்கையில் இடம்பெறுகின்ற வானிலை, நீர், உயிரியல், தொழில்நுட்பம் மற்றும் மனிதனால் ஏற்படுத்தப்படுகின்ற பேரழிவுகளுக்கான பதிற்செயற்பாடு பொறிமுறைகள் அதன் மூலம் உள்வாங்கப்படுகின்றன. தே.அ.ந.திட்டத்தினைப் பரிசீலிக்கும் வசதிக்காக தேசிய அவசர நடவடிக்கை திட்டமானது தொகுதி 1 மற்றும் தொகுதி 2 என இரண்டு தொகுதிகளை கொண்டதாக மூன்று மொழிகளில் தயாரிக்கப்பட்டன. ஏதேனும் ஒரு நிறுவனத்தின் உள்ளார்ந்த ஆற்றல் மற்றும் உறுதியான பொறுப்பு என்பவற்றை விஞ்சிச் செல்லும் வகையிலான அவசர சந்தர்ப்பம் ஒன்றில் நிறுவனங்களுக்கும் ஆட்களுக்கும் பொறுப்பினை ஒப்படைப்பதற்காக வசதிகளை வழங்குதல், முன்னெச்சரிக்கை பொறிமுறையினை உயிர்ப்பூட்டுதல் மற்றும் அவசர தேவைப்பாடு நடவடிக்கைகளை இணைப்பாக்கம் செய்தல் என்பன தேசிய அவசர நடவடிக்கை திட்டத்திற்கான தொகுதி 1 இன் மூலமும், நிறுவன பொறுப்பு மற்றும் செயற் பொறுப்பு என்பன தேசிய அவசர நடவடிக்கை திட்டம் தொகுதி 2 இன் மூலமும் விவரிக்கப்பட்டுள்ளன.

மூன்று மொழிகளிலும் தயாரிக்கப்பட்ட தேசிய அவசர நடவடிக்கை திட்டத்திற்காக எதிர்காலத்தில் அனர்த்த முகாமைத்துவ தேசியப் பேரவையின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளும் வரை தேசிய அவசர நடவடிக்கைத் திட்டத்திற்கான தொகுதி 1இன் அவசர நடவடிக்கை கூடத்தின் மூலமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளின் பொருட்டு இடைக்கால முகாமைத்துவ குழுவின் இணக்கப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அவசர நடவடிக்கைப் பிரிவுக்குரிய ஏனைய பணிகள்

பாடசாலை மானவர்கள், பாதுகாப்புத் துறை உத்தியோகத்தர்கள், பங்கீடுபாட்டாளர்கள், அரசாங்க அதிகாரிகள் போன்ற வகையில் 85 குழுக்களுக்காக அவசர நிலைமை நவடிக்கைகள், முன்னறிவித்தல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவம் போன்ற விடயங்கள் தொடர்பாக வீடியோ கருத்தரங்கு கூடம் மற்றும் அவசர நிலைமை நடவடிக்கை நிலையம் மேற்கொண்ட விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களைப் பயன்படுத்தி விழிப்பூட்டல்கள் மேற்கொள்ளப்பட்டன.

சவால்கள்

- **தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் பயிற்சி**

  அவசர நிலைமையிலான ஒரு சந்தரப்பத்தில் நில மட்ட மக்களுக்கு தகவல்களை வழங்குவதற்காக வினைத்திறன்மிகு தொடர்பாடல் முறைமையை அனர்த்த முகமைத்துவ நிலையம் கொண்டிருக்க வேண்டும். அனர்த்த முகமைத்துவ நிலையம் தற்போது அதனிடம் கொண்டுள்ள தொடர்பாடல் கடத்துகை முறைமையானது அனர்த்தங்களுக்கு உள்ளாகக்கூடிய ஒட்டுமொத்த மக்களையும் இளகுவாக உள்வாங்கும் அளவிற்கு பலமான மட்டத்தில் இல்லை.

- **வானிலை மாற்றங்களும் அவற்றின் பாதகமான தாக்கங்களும்**

  அனர்த்தங்களைக் குறைப்பதற்காக நடவடிக்கைகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தாலும் அனர்த்தங்கள் இடம்பெறுவதைத் தடுக்க முடியாது. எனவே, வானிலை மாற்றங்களினால் உருவாக்கப்படுகின்ற சவால்களுக்கு முகங்கொடுப்பதற்காக அவசர நிலைமைக்காக பதிற்செயற்பாடு காடடும் முறைகளை வலுவூட்டும் பொருட்டு அதிக முன்னுரிமை அளிக்கப்படுதல் வேண்டும்.

  வானிலை மாற்றங்களின் காரணமாக கடந்த சில வருடங்களில் வழமைக்கு மாறான வானிலைப் பாங்கினைக் காணமுடிந்தது. எனவே, குறுகிய காலத்தினுள் அதிகளவான மழை கிடைக்கும்போது எதிர்வுகூற முடியாதவாறு அனர்த்தங்கள் இடம்பெறுகின்றன. சீரற்ற வானிலையின் காரணமாக வீடுகள், உட்கட்டமைப்பு வசதிகள், பயிர்ச் செய்கைகள், கால்நடைகள் போன்றவை பாதிக்கப்படுகின்றன. எனவே, முன்தயார்நிலை, வானிலை மாற்றங்களுக்கு இசைவாக்கமடைதல் தொடர்பாக கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டுமென்பதோடு வானிலை மாற்றங்களுக்கான பாதகமான தாக்கங்கள் தொடர்பான விழிப்பூட்டுதலை மிகவும் பரந்த மட்டத்தில் நடைமுறைப்படுத்த வேண்டும்.

- பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள மற்றும் தாபிக்கப்பட்டள்ள அனர்த்த பதிற் செயற்பாட்டு உபகரணங்கள் மற்றும் பிரச்சார உபகரணங்கள் பராமரிக்கப்படுவதற்கு அதிக செலவினம் ஏற்பட்டபோதிலும் அவை உரிய முறையிலான செயல்திறனுடன் இருத்தல் வேண்டும்.

8. நிதிசார் முன்னேற்றம் - 2016 டிசம்பர் 31

2016ஆம் ஆண்டில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு 978 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டது. அதில் 12.5 மில்லியன் ரூபா தேசிய பேரவையின் செலவுக்காகவும், 195 மில்லியன் ரூபா அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் மீண்டெழும் செலவுகளுக்காகவும், 770.5 மில்லியன் ரூபா மூலதன செலவுகளுக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளன. மேற்படி ஒட்டுமொத்த நிதி ஒதுக்கீட்டில் 2016 டிசம்பர் 31

செலவுத் தலைப்பு இலக்கம்	**நிகழ்ச்சித்திட்டம்/கருத்திட்டம்/செயற்பாடு**	**மொத்த ஒதுக்கீடு 2016 (திருத்தப்பட்ட) (ரூ.மி.)**	**கிடைக்கப்பட்ட ஒதுக்கீடு 2016 (ரூ.மி.)**	**மொத்தச் செலவினம் 2016 (ரூ.மி.)**
106-2-3-1-1503	அனர்த்த முகாமைத்துவ தேசியப் பேரவை (NDMC)	12.5	1.5	1.4
106-2-3-2-1503	மீண்டெழும் செலவுகள் (DMC)	195	195	194.25
	மூலதனச் செலவுகள்			
106-2-3-2401	பயிற்சி மற்றும் ஆற்றல் விருத்தி	2.5	2.5	2.47
106-2-3-3-2201	மாவட்டங்களில் அனர்த்தங்களின் தாக்கங்களைக் குறைப்பதற்காக அனர்த்தங்களைக் குறைப்பதற்கான கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்	500	443.2	421.58
106-2-3-4-2201	திடீர் வெள்ளப்பெருக்கு மற்றும் வறட்சி நிலைமைகளுக்கு முகங்கொடுப்பதற்காக உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்	75	75	71.8
106-2-3-5-2201-I	அனர்த்த முன் தயார்நிலை மற்றும் முகாமைத்துவம் தொடர்பாக மக்களை விழிப்பூட்டுதல் - விழிப்பூட்டல் பிரிவு	12.5	12.5	11.96
106-2-3-5-2201-II	அனர்த்த முன் தயார்நிலை மற்றும் முகாமைத்துவம் தொடர்பாக மக்களை விழிப்பூட்டுதல் -முன்தயார்நிலைப் பிரிவு	12.5	12.5	11.35
106-2-3-6-2201	வெள்ள ஆப்பத்துக்களைக் குறைப்பதற்கான கருத்திட்டங்கள்	100	-	-
106-2-3-7-2201	இலங்கையின் பொருட்டு பல்தரப்பட்ட அனர்த்த ஆபத்துத் தோற்றப்பாடுகளை அபிவிருத்தி செய்தல்	68	10.17	10.1
	மொத்த மூலதனச் செலவினம்	**770.5**	**555.87**	**529.26**
	மொத்தச் செலவினம் - மீண்டெழும் மற்றும் மூலதனம்)	**978**	**752.37**	**724.91**

ஆம் திகதியில் 8.1: மில்லியன் ரூபா கீழே காட்டப்பட்டுள்ள வகையில் செலவிடப்பட்டுள்ளன.

அனர்த்த முகாமைத்துவ நிலையம்

STATEMENT OF FINANCIAL PERFORMANCE FOR THE YEAR ENDED 31ST DECEMBER 2016

	குறிப்புகள்	2016	2015 (மீளக் கூறப்பட்ட)	2015 (கணக்காய்வு செய்யப்பட்ட)
		Rs. Cts.	Rs. Cts.	Rs. Cts.
வருமானம்	01	195,000,000.00	167,119,514.00	167,119,514.00
வேறு வருமானம்	02	187,216,586.25	198,850,659.63	195,351,155.31
		382,216,586.25	365,970,173.63	362,470,669.31
நிர்வாகச் செலவுகள்	03	(377,524,745.74)	(373,688,176.81)	373,722,384.06
வேறு செலவினங்கள்	04	(10,851,314.92)	(4,537,469.33)	4,511,174.17
மிகை/ குறை செயலாற்றுகை மூலமானது		(6,159,474.41)	(12,255,472.51)	(15,762,888.92)
நிதிச் செலவினங்கள்		-	-	-
மிகை/ குறை வரி விதிப்பதற்கு முன்னர்		(6,159,474.41)	(12,255,472.51)	(15,762,888.92)
வரி விதிப்பு		-	-	-
வருடத்துக்கான மொத்த மிகை/ குறைவு		(6,159,474.41)	(12,255,472.51)	(15,762,888.92)

கணக்கீட்டுக் கொள்கைகளில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் 1 – 17 வரை காட்டப்பட்டுள்ள குறிப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் முக்கியமான பகுதிகளாகும்.

அனர்த்த முகாமைத்துவ நிலையம்

2016.12.31ஆம் திகதியில் இருந்தவாறான நிதி நிலைமைகள் தொடர்பான கூற்று

	குறிப்புகள்	2016	2015 (மீளக் கூறப்பட்ட)	2015 (கணக்காய்வு செய்யப்பட்ட)
		Rs. Cts.	Rs. Cts.	Rs. Cts.
சொத்துக்கள்				
நடைமுறையற்ற சொத்துக்கள்				
ஆதனங்கள், உபகரணங்கள், சொத்துக்கள்	05	1,146,812,194.17	1,285,538,301.94	1,285,538,301.94
நடைமுறைச் சொத்துக்கள்				
தொடரும் கருத்திட்டங்களுக்கான மூலதன வேலைகள்	06	22,708,287.86	203,166,796.20	203,166,796.22
அனர்த்த பதில் நடவடிக்கை உபகரணக் கையிருப்பு	07	51,449,284.34	33,706,203.05	33,706,203.05
பொருட் பதிவேடுகள்	08	4,380,582.08	2,574,007.56	2,574,007.56
செலுத்தல்களும் முற்பணங்களும்	09	9,306,995.63	2,906,314.37	2,906,314.37
வைப்புக்களும் ஏனைய கிடைப்பனவுகளும்	10	1,653,509.55	1,723,808.72	1,723,808.72
காசு மற்றும் காசுக்குச் சமமானவை	11	30,353,922.06	23,520,286.72	23,520,286.72
மொத்த நடைமுறைச் சொத்துக்கள்		**119,852,581.52**	**267,597,416.62**	**267,597,416.64**
மொத்தச் சொத்துக்கள்		**1,266,664,775.69**	**1,553,135,718.56**	**1,553,135,718.58**
நிதிகள், ஒதுக்கங்கள் மற்றும் பொறுப்புக்கள்				
தேறிய சொத்துக்கள்/ பங்குகள்				
திரண்ட நிதியம்		(51,438,043.14)	(41,805,359.48)	(45,278,568.73)
ஒதுக்கங்கள்				
மூலதன வழங்கல் - பொதுத் திறைசேரி		812,532,905.28	833,185,769.81	833,185,769.81
சொத்துக்கள் மீதான் மூலதன மானியம் - பொதுத் திறைசேரி		10,740,000.00	7,505,000.00	7,505,000.00
சொத்துக்கள் மீதான மூலதன மானியம் - ICET		1,075,226,667.42	1,244,186,078.53	1,244,186,078.53
மூலதன வழங்ல் மீதான முதலீடுகள்	12	(617,916,270.94)	(525,322,864.53)	(525,322,864.53)
மொத்தத் தேறிய சொத்துக்கள்/ பங்குகள்		**1,229,145,258.62**	**1,517,748,624.33**	**1,514,275,415.08**

அனர்த்த முகாமைத்துவ நிலையம்

2016.12.31ஆம் திகதியில் இருந்தவாறான நிதி நிலைமைகள் தொடர்பான கூற்று (தொடர்ச்சி….)

நடைமுறையற்ற பொறுப்புக்கள்				
ஏனைய நிறுவனங்களிடமிருந்து கிடைத்த மானியம்	13	8,454,707.50	11,506,391.11	14,979,600.38
இளைப்பாறு பண உதவிகள் தொடர்பான பொறுப்புக்கள்	14	23,408,696.82	21,174,185.63	21,174,185.63
நடைமுறைப் பொறுப்புக்கள்				
வர்த்தகம் மற்றும் ஏனைய செலுத்தல்கள்	15	5,450,101.19	2,500,505.93	2,500,505.93
ஏனைய செயற்பாடுகள்	16	206,011.56	206,011.56	206,011.56
மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்		**5,656,112.75**	**2,706,517.49**	**2,706,517.49**
மொத்தப் பொறுப்புக்கள்		**37,519,517.07**	**35,387,094.23**	**38,860,303.50**
மொத்த நிதிகளும் பொறுப்புக்களும்		**1,266,664,775.69**	**1,553,135,718.56**	**1,553,135,718.58**

கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் 1 தொடக்கம் 17 வரையிலான குறிப்புக்கள் நிதிக்கூற்றின் அவசியமான பகுதிகளாகும்.

நிறுவனத்தின் நிதிக்கூற்று 2016 டிசம்பர் 31ஆந் திகதியிலிருந்த நிலைமை தொடர்பாக மற்றும் வருட இறுதியில் மேலதிகம்/ பற்றாக்குறை தொடர்பாக உண்மையான மற்றும் நியாயமான பெளிப்படுத்துகையை வழங்குவதாக நாங்கள் உறுதிப்படுத்துகின்றோம்.

இந்த நிதிக் கூற்றினைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பாகப் பணிப்பாளர்கள் பொறுப்புக் கூறவேண்டும்.

நிசாந்த அபேசிங்க
உதவிப் பணிப்பாளர் (நிதி)
அனர்த்த முகாமைத்துவ நிலையம்
திகதி

G.L.S. சேனாதீர
பணிப்பாளர் நாயகம்
அனர்த்த முகாமைத்துவ நிலையம்
திகதி

அனர்த்த முகாமைத்துவ நிலையம்
2016 டிசம்பர் மாதம் 31ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்கான சொத்துக்கள்/ பங்குகளின் மாற்றங்கள் தொடர்பான கூற்று

	திறைசேரியின் மூலதன மானியம்	திரண்ட நிதியம்	மொத்தச் சொத்துக்களின் அ அளவு
	ரூ. சதம்.	ரூ. சதம்.	ரூ. சதம்.
2015 ஜனவரி 01ஆம் திகதிக்கு மீதி	515,487,058.00	(35,294,840.79)	480,192,217.21
2015ஆம் ஆண்டுக்காகக் கிடைத்த மூலதன மானியம்	684,500,000.00	-	684,500,000.00
2015ஆம் ஆண்டு மூலதன மானியம் மீதான முதலீடு	(525,322,864.53)	-	(525,322,864.53)
மிகை/ (பற்றாக்குறை) 2015ஆம் ஆண்டுக்கான (கணக்காய்வுக்கு உட்பட்ட)		(15,762,888.92)	(15,762,888.92)
மிகை/ (பற்றாக்குறை) 2015ஆம் ஆண்டுக்கான (மீளக் கூறப்பட்ட)		(12,255,472.51)	(12,255,472.51)
முன்னைய ஆண்டுக்கான சீராக்கம் (மீளக் கூறப்பட்ட)	-	5,744,9 53.83	5,744,953.84
முன்னைய ஆண்டுக்கான சீராக்கம் (கண்காய்வு செய்யப்பட்ட)	-	5,779,160.93	5,779,160.93
2015 டிசம்பர் 31ஆம் திகதிக்கான மீதி (மீளக் கூறப்பட்ட)	674,664,193.47	(41,805,359.46	632,858,834.01
2015 டிசம்பர் 31ஆம் திகதிக்கான மீதி (கணக்காய்வு செய்யப்பட்ட)	674,666,193.47	(45,278,568.78)	629,385,624.69
2016 ஜனவரி 01ஆம் திகதிக்கான மீதி	674,664,193.47	(41,805,359.46)	632,858,834.01
முன்னைய ஆண்டுக்கான சீராக்கல்	-		-
2016ஆம் ஆண்டு கிடைத்த மூலதன மானியம்	504,670,000.00	-	504,670,000.00
2016ஆம் ஆண்டு மூலதன மானியம் மீதான முதலீடு	(617,916,270.94)	-	(617,916,270.94)
மீளக்கூறப்பட்ட கூற்றின் எதிர்வரும் ஆண்டுக்கான ஒப்பீட்டளவிலான தகவல்கள்		(3,473,209.27)	(3,473,209.27)
மிகை/ பற்றாக்குறை 2016ஆம் ஆண்டுக்கானது	-	(6,159,474.41)	(6,159,474.41)
2016 டிசம்பர் 31ஆம் திகதிக்கான மீதி	561,417,922.53	(51,438,043.14)	513,453,088.66

கணக்கீட்டுக் கொள்கைகளில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவம் 1 – 17 வரை காட்டப்பட்டுள்ள குறிப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் முக்கியமான பகுதிகளாகும்.

அனர்த்த முகாமைத்துவ நிலையம்

2016 டிசம்பர் மாதம் 31ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்கான நிதிப் பாய்ச்சல் தொடர்பான கூற்று

	2016	2015 (மீளக் கூறப்பட்ட)	2015 (கணக்காய்வு செய்யப்பட்ட)
	ரூ. சதம்	ரூ. சதம்	ரூ. சதம்
மிகை/ பற்றாக்குறை, வரிக்கு முன்னர்	(6,159,474.41)	(12,255,472.51)	(15,762,888.92)
சீராக்கல்			
பெறுமானத் தேய்வு	179,126,454.64	187,020,281.57	187,020,281.57
மூலதன மானிய சொத்துக்கள் மீதான பெறுமானத் தேய்வு	(173,699,411.11)	(181,500,222.57)	(181,500,222.57)
பணிக் கொடைக் கொடுப்பனவு	(589,034.50)	(236,901.25)	-
மோட்டார் வாகனப் பெறுமானத் தேய்வு சீராக்கல்	-	2,897,025.16	2,847,928.63
ஓய்வூதிய நிதிப் பயன்பாடுகளுக்கான ஏற்பாடு	2,823,545.69	8,936,348.13	8,699,446.88
மீளக் கூறப்பட்ட கூற்றின் எதிர்வரும் ஆண்டுக்கான ஒப்பீட்டளவிலான தகவல்கள்	(3,473,209.27)	-	-
செயற்படு மூலதன மாற்றத்திற்கு முன்னர் மிகை/ பற்றாக்குறை	**(1,971,128.96)**	**4,861,058.53**	**1,304,545.59**
செயற்படு மூலதன மாற்றம்			
கிடைக்கவேண்டிய மிகை/ பற்றாக்குறை	70,299.17	(288,645.10)	(288,645.10)
பொருட் பதிவேடுகளில் மிகை/ பற்றாக்குறை	(1,806,574.52)	313,937.90	313,937.90
மொத்தமாக இருக்கும் அனர்த்தப் பதிவு நடவடிக்கை உபகரணங்களின் மிகை/ பற்றாக்குறை	(17,743,081.29)	(20,512,794.57)	(20,512,794.57)
முன்னைய செலுத்தல்கள் மற்றும் முற்பண மிகை/ பற்றாக்குறை	(6,400,681.26)	6,363,020.86	6,363,020.86
வேறு செலுத்தவேண்டியவற்றின் மிகை/ குறைவு	2,949,595.26	(846,198.88)	(846,198.88)
வேறு ஒதுக்கங்களின் மிகை/ குறைவு	-	-	-
மூலதன WIP கருத்திட்டங்களின் மிகை/ பற்றாக்குறை	180,458,508.36	(125,903,932.97)	(125,903,932.97)
கருமமாற்றல் செயற்பாடுகளின் மொத்த நிதிப் பாய்ச்சல்	**155,556,936.74**	**(136,013,554.23)**	**(139,570,067.17)**
முதலீட்டுச் செயற்பாடுகளின் நிதிப் பாய்ச்சல்			
சொத்துக்கள், உபகரணங்கள் என்பவற்றைக் கையேற்றல்	(32,425,346.87)	(11,787,926.53)	(11,787,926.53)
முதலீட்டுச் செயற்பாடுகளின் மொத்த நிதிப் பாய்ச்சல்	**(32,425,346.87)**	**(11,787,926.53)**	**(11,787,926.53)**
நிதிச் செயற்பாடுகளின் நிதிப் பாய்ச்சல்			
மூலதன மானியங்களின் கிடைப்பனவு	504,670,000.00	684,500,000.00	684,500,000.00
மூலதன மானியங்களின் செலுத்தல்கள்	(617,916,270.92)	(525,322,864.53)	(525,322,864.53)
அரச சார்பற்ற, சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து கிடைத்த மொத்த உதவிகள்	(3,051,683.61)	6,389,177.99	9,945,691.37
நிதிச் செயற்பாடுகளின் மொத்த நிதிப் பாய்ச்சல்	**(116,297,954.53)**	**165,566,313.46**	**169,122,826.84**
நிதி மற்றும் நிதி சமப்படுத்தல்களின் போதான மொத்த வித்தியாசம்	6,833,635.34	17,764,832.70	17,764,832.70
வருட ஆரம்பத்தில் பணம் மற்றும் பண சமப்படுத்தல்கள	23,520,286.72	5,755,454.02	5,755,454.02
வருட இறுதியில் பணம் மற்றும் பண சமப்படுத்தல்கள் (குறிப்பு A)	**30,353,922.06**	**23,520,286.72**	**23,520,286.72**
வங்கியிலுள்ள காசு	**30,353,922.06**	**23,464,131.47**	**23,464,131.47**
கையிலுள்ள காசு	**-**	**56,155.25**	**56,155.25**
	30,353,922.06	**23,520,286.72**	**23,520,286.72**

கணக்கீட்டுக் கொள்கைகளில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவம் 1 – 17 வரை காட்டப்பட்டுள்ள குறிப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் முக்கியமான பகுதிகளாகும்.

அனர்த்த முகாமைத்துவ நிலையம்

கணக்கீட்டுக் கொள்கைகள்

1. **தாபனத் தகவல்கள்**

1.1 **அமைவிடமும் சட்டத்தன்மையும்**

அனர்த்த முகாமைத்துவ நிலையம் என்பது இலங்கையில் அனர்த்த ஆபத்தினை முகாமைத்துவம் செய்யும் நடவடிக்கைகளின் போது அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான தேசிய சபைக்கு உதவுவதற்காக 2005ஆம் ஆண்டு 13ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள ஒரு சட்டரீதியான நிறுவனமாகும். அனர்த்த முகாமைத்துவ நிலையம் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் கீழ் செயற்படுகின்றது. அமைச்சின் பெயர் மக்கள் அமைதி, அனர்த்த முகாமைத்துவ, கிறிஸ்தவ மத விவகார அமைச்சு என்று 2015இல் அழைக்கப்பட்டது. அதே ஆண்டில் அமைச்சின் பெயர் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு என மாற்றப்பட்டது.

1.2 **கூட்டிணைக்கப்பட்ட நாடு**

2005ஆம் ஆண்டின் 13வது இலக்கப் பாராளுமன்றச் சட்டத்தின் கீழ் அனர்த்த முகாமைத்துவ நிலையம் கூட்டிணைக்கப்பட்டது.

1.3 **கருமம் மற்றும் பணிகள் முன்னெடுக்கப்படும் முக்கிய இடங்கள்.**

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தலைமை அலுவலகம் வித்யா மாவத்தை, கொழும்பு 07 என்ற முகவரியில் அமைந்துள்ளது. அதேபோன்று அனைத்துக் கச்சேரிகள் தோறும் 25 மாவட்ட அலுவலகங்கள் நிறுவப்பட்டுள்ளன.

1.4 **முக்கிய செயற்பாடுகள்**
அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நோக்கம் இயற்கையான தொழில்நுட்ப, மற்றும் மனிதர்களின் செயற்பாடுகளினால் ஏற்படும் அனர்த்தங்களை முறையாக முகாமைத்துவம் செய்வதன் மூலம் தேசத்திலும் சமுதாயத்திலும் ஒரு பாதுகாப்பான கலாசாரமொன்றை உருவாக்குவதுடன் அதனைத் தொடர்ந்து பேணுதல். அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நோக்கம் சமூகம் பாதுகாப்பாகவும் தயாராகவும் உள்ளது என்பதை உறுதிப்படுத்துவதாகும்.

2. **கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம்**
2.1 **பொதுவான கணக்கீட்டுக் கொள்கைகள்**

2.1.1 **ஒவ்வும் தன்மையைக் காட்டும் கூற்று**

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நிதிக் கூற்றுக்களுக்குப் பூரணமான வருமானக் கூற்று நிதி நிலைமைகள் தொடர்பான கூற்று நிதியங்கள் மாறுபடல் தொடர்பான கூற்று, மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் இருப்பதுடன் இலங்கை அரச துறையின் கணக்கீட்டுக் கொள்கைக்கு ஏற்புடையும்வண்ணம் தயாரிக்கப்பட்டுள்ளது.

2.1.2 **தயாரிக்கும் அடிப்படை**

இலங்கை ரூபாய்களில் தயாரிக்கப்பட்டுள்ள இக் கூற்றுக்கள் வரலாற்று ரீதியிலான கிரய சம்பிரதாயத்துக்கமையத் தயாரிக்கப்பட்டுள்ளது. நிதிக் கூற்றுக்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் பணவீக்க நிலைமைகள் தொடர்பாகச் செம்மையாக்கலகள் மேற்கொள்ளப்படவில்லை. தேவையான சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்பட்ட விசேட கொள்கைகளுக்குப் பின்னால் வரும் குறிப்புக்களில் அது விபரிக்கப்பட்டுள்ளது.

2.1.3 **ஒப்பீட்டு அடிப்படையிலான தகவல்கள்**

இந்தக் கணக்கீட்டுக் கொள்கைகள் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் நிரந்தரமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

2.1.4 **நிதி ஆண்டு**
அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் கலண்டர் ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதியுடன் நிறைவடைகின்றது.

2.2 **சொத்துக்கள் மற்றும் உபகரணங்கள்**

சொத்துக்கள் மற்றும் உபகரணங்கள் திரண்ட தேய்மானங்களை குறைத்த மதிப்பீடுகளுக்கமையக் குறிப்பிடப்பட்டுள்ளது. தேய்மான ஒதுக்கங்கள் பின்வருமாறு சமனான தவணைப் பணங்கள் மூலம் மதிப்பீடு செய்யப்பட்டவற்றைப் பதிவழிப்பதற்கான சொந்தக் காணிகளுக்கு மேலதிகமாகச் சகல காணிகள், உபகரணங்கள் என்பவற்றின் மதிப்பீட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது.

	வீதம் (%)
கட்டிடங்கள்	2.5
சுனாமி முன்னெச்சரிக்கைக் கோபுரங்கள்	5
அலுவலக உபகரணங்கள்	10
தளபாடங்கள், உபகரணங்கள்	10
கணினிகள், உதிரிப்பாகங்கள்	10
மோட்டார் வாகனங்கள்	20

தொலைத்தொடர்பு சாதனங்கள்	5-20
கணக்கீட்டு மென்பொருட்கள்	20

2013க்கு முன்னர் பெறுமானத் தேய்வு கொள்வனவு செய்யப்பட்ட/ நிர்மாணிக்கப்பட்ட சொத்துக்களைப் பயன்படுத்தும் வருடத்துக்குள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நிர்மாணிக்கப்பட்ட/ கொள்வனவு செய்யப்பட்ட வருடத்துக்குள் பெறுமானத் தேய்வு கழிக்கப்படாமையினால் அந்தச் சொத்துக்களைப் பதிவழிக்கும் வருடத்தில் அது முழுமையாகப் பெறுமானத் தேய்வுக்கு உள்ளாகுவதனால் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தனது முறையை மாற்றியுள்ளது.

குறிப்பிடத்தக்களவிலான கணக்கீட்டுக் கொள்கைகள் (முன்னோக்கி.....)

2.3 **ஓய்வூதியப் பணிக்கொடைகளைச் செலுத்துவதற்கான நிதி ஒதுக்கம்**

1983ஆம் ஆண்டின் 12ஆம் இலக்கப் பணிக்கொடை செலுத்தல் சட்டத்தின் கீழ் ஊழியர்களுக்கு அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் பணியாற்றிய ஒவ்வொரு வருடத்துக்குமாகக் கலண்டர் வருடத்தின் இறுதி மாதத்துக்கான சம்பளத்தில் அரைவாசி கணக்கிடப்பட்டுக் கணக்காளர் ஊடாக ஓய்வூதியப் பணிக்கொடைச் செலுத்தல்களுக்காக நிதி ஒதுக்கங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த விடயம் பிற்போடப்பட்ட பொறுப்புக்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஒதுக்கங்களில் புறம்பாக நிதி மயமாக்கல் அல்லது ஆயுள்காலத்தைக் கணக்கிடுதல் மேற்கொள்ளப்படவில்லை.

2.4 **வேறு கிடைக்கவேண்டியவை**

வர்த்தக ரீதியில் கிடைக்கவேண்டியவை எதிர்பார்க்கப்பட்ட, நிறைவேற்றிக்கொள்ளக்கூடிய பெறுமதியில் கணக்கிடப்பட்டுள்ளன. வருட இறுதியில் கிடைக்கவேண்டிய அனைத்தும் மீளாய்வு செய்யப்பட்டு, அதனடிப்படையில் கிடைக்காதென கருதப்படுபவற்றின் மதிப்பீடொன்று தயாரிக்கப்படும். அறவிடமுடியாக் கடன்கள் அவை இனங்காணப்பட்ட வருடத்துக்குள் பதிவழிக்கப்படும்.

2.5 **நிதி மற்றும் நிதிச் சமன்பாடுகள்**

நிதிப் பாய்ச்சல் கூற்றுக்களுக்கான நிதி மற்றும் நிதிச் சமன்பாடுகளுக்குக் கையிலுள்ள காசு, வங்கியிலுள்ள காசு, வங்கி மேலதிகப் பற்றுக்கள் என்பன உள்ளடங்கியுள்ளன. ஐந்தொகையில் வங்கி மேலதிகப் பற்றுக்கள் நடைமுறைப் பொறுப்புக்களில் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களும் உள்ளடங்குகின்றன.

2.6 **அறிக்கையிடப்படும் காலவரையறையின் பின்னரான சம்பவங்கள்**

நிதி நிலைமைகள் தொடர்பான கூற்றின் பின்னர் இடம்பெறும் சகல பௌதிக சம்பவங்கள் கருத்திற் கொள்ளப்படும் என்பதுடன் தேவைப்படும் இடங்களில் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் செம்மையாக்கல்கள் செய்யப்படும்.

2.7 **பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்**

நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்யும்போது அறிந்திருந்த அனைத்துப் பொறுப்புக்களும் உள்ளடக்கப்படும்.

2.8 **நிச்சயமான பங்களிப்புத் திட்டங்கள்**

ஊழியர்கள் ஊழியர் சேமலாப நிதிக்கும், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிக்கும் பங்களிப்பு வழங்கத் தகமை பெறுகின்றனர். ஊழியர்களினால் ஊழியர் சேமலாப நிதிக்கு மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிக்கு முறையே 12% மற்றும் 3% பங்களிப்பினை வழங்குகின்றனர்.

2.9 **வருமானம்**

2.9.1 **நிகழ்கால மானியம் வழங்கலின் தன்மை**

இலங்கைக் கணக்கீட்டுத் தரங்கள் 20, 29, 30 மற்றும் 31ஆம் பிரிவுகளின்படி அரச மானியங்கள் மற்றும் உதவிகளை வெளிப்படுத்தல் நடைமுறைச் செலவுகளுக்காக நிறுவனத்துக்குத் திறைசேரியிடமிருந்து கிடைக்கும் உதவிகள் வருமானங்களாகக் கணக்கிடப்படும் என்பதுடன் நிறுவனத்தினால் சம்பாதிக்கப்படும் அனைத்து வருமானங்களும் நேரடியாக ஏனைய வருமானங்களின் கீழ் வருமானக் கூற்றில் உள்ளடக்கப்படுகின்றது.

2.9.2 **மூலதனத் தன்மையிலான வருமானம்**

இலங்கைக் கணக்கீட்டுத் தரங்கள் 20, 29, 30 மற்றும் 31ஆம் பிரிவுகளின்படி அரச மானியங்கள் மற்றும் உதவிகளை வெளிப்படுத்தல் மூலதனச் செலவுகளுக்காக நிறுவனத்துக்குத் திறைசேரியிடமிருந்து கிடைக்கும் உதவிகள் வருமானங்களாகக் கணக்கிடப்படும் என்பதுடன் நிறுவனத்தினால் சம்பாதிக்கப்படும் அனைத்து வருமானங்களும் நேரடியாக ஏனைய வருமானங்களின் கீழ் வருமானக் கூற்றில் உள்ளடக்கப்படுகின்றது.

2.1.0 **செலவுகளை ஏற்றல்**

வருடத்துக்கான செலவுகளுக்கமைய வருமானங்களைக் கணக்கிடும்பொது நிருவாகத்தைப் பேணுவதற்குத் தேவைப்படும் நடைமுறை ரீதியிலான அனைத்துச் செலவுகளும் வருமானத்தில் சேர்க்கப்படும்.

2.1.1 **பொருட்பதிவேடுகளைத் தயாரித்தல்.**

பொருட்பதிவேடுகள் உண்மைப் பெறுமதிக்கமைய மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் முதலில் வந்து முதலில் செல்லும் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. பொருட்பதிவேடுகளின் இறுதி மீதி கொள்வனவு செய்யப்பட்ட இறுதிப் பெறுமதிக்கமைய மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

2016 நிதிக் கூற்றுக்கமையக் குறிப்புக்கள்	**2016**	**2015 (மீளக் கூறப்பட்ட)**	**2015 (கணக்காய்வு செய்யப்பட்ட)**
	Rs. Cts.	**Rs. Cts.**	**Rs. Cts.**
குறிப்பு 01 - வருமானம்			
நடைமுறைச் செலவுகளுக்கான மானியம்	195,000,000.00	167,119,514.00	167,119,514.00
	195,000,000.00	**167,119,514.00**	**167,119,514.00**

பொதுத் திறைசேரியிடமிருந்து கிடைக்கும் நடைமுறைச் செலவுகளுக்கான மானியங்கள் மற்றும் இலங்கைக் கணக்கீட்டுத் தரம் இல.20, அரச உதவிகள் மற்றும் அரசின் உதவிகளை வெளிப்படுத்துவதற்கான கணக்கீட்டுக்கமைய ஏற்றுக்கொள்ளப்படும். அந்தத் தரங்களுக்கமைய அரசின் உதவிகள் அந்த உதவிகள் கிடைப்பது தொடர்பான போதுமான உறுதிப்படுத்தல் கிடைக்கும் வரை அதனை ஏற்றுக்கொள்ளலாகாது. இதனால் அனர்த்த முகாமைத்துவ நிலையம் அடைந்த நடைமுறைச் செலவுகளை மாத்திரம் 2016 – டிசம்பர் 31ஆம் திகதிக்குத் தமது வருமானமாக ஏற்றுக்கொண்டுள்ளது. ஆனால். வருமானத்துக்கமையச் செலவுகள் ஏற்பட்ட அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளன.

குறிப்பு 02 - வேறு வருமானம்	**ரூ. சதம்.**	**ரூ. சதம்.**	**ரூ. சதம்.**
ஒக்ஸ்பாம் உதவி	140,000.00	-	-
யு.என்.டி.பி. உதவி	-	271,382.00	271,382.00
ஏடிபிசி உதவி	1,140,000.00	1,140,000.00	-
பாதுகாப்புக்கான UNDP உதவி	-	990,000.00	990,000.00
CSE உதவி	186,292.50	-	-
செஞ்சிலுவை உதவி	39,975.00	-	-
தேசிய அனர்த்த முகாமைத்துவ சபை உதவி	40,878.40	-	-
மீள் செலுத்தப்படாத கேள்விப்பத்திர வைப்பு	57,500.00	85,500.00	85,500.00
நானாவித வருமானம்	93,117.73	145,106.12	145,106.12
மூலதன மானியங்களுக்கான பெறுமதித் தேய்வு– (குறிப்பு 2:1)	173,699,411.11	184,348,151.20	181,500,222.57
உலக சுகாதார அமைப்பின் உதவி	119,348.84	627,585.00	627,585.00
அன்ஹபிடாட் உதவி	23,331.20	7,704,531.09	7,704,531.09
நியாப்புக்கான யுஎன்டிபி உதவி	1,969,339.28	1,530,820.00	-
பாதுகாப்புத் தினத்துக்கான எடிபிசி உதவி	95,799.00	-	-
செயலமர்வுக்கான சார்க உதவிகள்	10,000.00	-	-
என்டிஎம்சி உதவி	1,500,000.00	1,000,000.00	1,000,000.00
காப்புறுதி கோரல்	31,050.00	27,550.00	27,550.00
சார்க் தேவைகள் மதிப்பீட்டு நிகழ்ச்சித் திட்ட உதவி	-	151,349.90	151,349.90
சீனா CAMC இஞ்சினியர் கோ லிமிட்டட் உதவி மீரியபெத்த வீடமைப்புத் திட்டத்துக்கு	1,000,000.00	-	-
IDMP க்கான UNDP உதவி	396,400.00	396,400.00	-
RSSDP க்கான UNDP உதவி	840,069.80	36,045.00	-
SFDRRக்கான UNDP உதவி	321,122.43	321,122.43	-
DOSEG க்கான UNDP உதவி	1,477,164.96	75,117.00	-
2016 மே வெள்ளப்பெருக்குப் பதில் நடவடிக்கைக்கான உதவி	4,035,786.00	-	-
	187,216,586.25	**198,850,659.63**	**195,351,155.31**

அனர்த்த முகாமைத்துவ நிலையம்

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான குறிப்புக்கள் - 2015

குறிப்பு 02 - வேறு வருமானம்

உப குறிப்பு - 02:01 சொத்து மூலதனம் மானியப் பெறுமானத் தேய்வு

மானியமாக வழங்கப்பட்ட சொத்துக்கள்	**2016.01.01ஆம் திகதிக்கு மொத்தச் செலவினம்**	**வருடத்தில் சேர்க்கப்பட்டவை/ முதலீடு**	**முன்னைய வருடச் சீராக்கல்**	**2016.12.31ஆம் திகதிக்கு மொத்தச் செலவினம்**
	ரூ. சதம்.	**ரூ. சதம்.**	**ரூ. சதம்.**	**ரூ. சதம்.**
சுனாமி முன்னெச்சரிக்கைக் கோபுரங்கள்	426,286,941.28			426,286,941.28
அலுவலக உபகரணங்கள்	5,916,010.90			5,916,010.90
தளபாடங்களும் உபகரணங்களும்	558,600.00			558,600.00
மோட்டார் வாகனங்கள்	259,413,229.98			259,413,229.98
தொடர்பாடல் உபகரணங்கள்	1,547,757,171.74			1,547,757,171.74
கணினிகள், உதிரிப்பாகங்கள்	66,762,750.01			66,762,750.01
மோட்டார் வாகனங்கள் – திறைசேரி	23,700,000.00	7,975,000.00		31,675,000.00
	2,330,394,703.91	7,975,000.00	-	2,338,369,703.91

தேய்மானம்	**2016.01.01ஆம் திகதிக்கு திரண்ட மீதி**	**வருடத்துக்கான தேய்மானம்**	**முன்னைய வருடச் சீராக்கல்**	**2016.12.31ஆம் திகதிக்கு திரண்ட மீதி**
மோட்டார் வாகனங்கள் ICET	259,152,195.79	261,034.19		259,413,229.98
சுனாமி முன்னெச்சரிக்கைக் கோபுரங்கள் ICET	111,899,343.64	21,314,347.06		133,213,690.70
கணினிகள், உதிரிப்பாகங்கள் ICET	30,257,549.27	6,676,275.00		36,933,824.27
அலுவலக உபகரணங்கள் ICET	5,182,170.90	183,460.00		5,365,630.90
தொடர்பாடல் உபகரணங்கள் ICET	645,842,104.57	140,468,434.86		786,310,539.43
தளபாடங்களும் உபகரணங்களும் ICET	335,160.00	55,860.00		391,020.00
மோட்டார் வாகனங்கள் திறைசேரி வேறு	16,195,000.00	4,740,000.00		20,935,000.00
	1,068,863,524.17	173,699,411.11	-	1,242,562,935.28

அனர்த்த்த முகாமைத்துவ அமைச்சின் சொத்துக்கள், மூலதன உதவிகள் பெறுமானத் தேய்வுக்கான கணக்கீட்டுத் தரங்கள் 2015ஆம் ஆண்டு இலங்கை நியமம் 20 – அரசின் உதவிகள் மற்றும் அரசின் உதவிகளை வெளிப்படுத்தும் வகையிலான கணக்கீட்டின்படி மாற்றப்பட்டது. மேல் கொள்கை ரீதியிலான மாற்றங்களுக்காகக் கணக்கீட்டுத் தீர்வகள் மற்றும் இலங்கை கணக்கீட்டுத் தரம் 8 கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் பிழைகள் எனக் குறிப்பிடப்பட்டுக் கிடந்தவை மீது தாக்கத்தை ஏற்படுத்தும் உள்ளீடுகள் மூலம் 2015ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் - 2016

குறிப்பு 03 - நிர்வாகச் செலவுகள்	2016 ரூ. சதம்.	2015 ரூ. சதம்.	2015 (கணக்காய்வு செய்யப்பட்ட) ரூ. சதம்.
பெறுமானத் தேய்வு			
கணனிகள்	8,844,456.09	8,818,191.09	8,818,191.09
அலுவலக உபகரணங்கள்	1,943,378.05	1,942,488.05	1,942,488.05
கணக்கீட்டு மென்பொருட்கள்	80,625.00	107,500.00	107,500.00
வாகனங்கள்	5,001,034.19	13,436,202.25	13,436,202.25
தளபாடங்களும் உபகரணங்களும்	642,634.18	640,294.25	640,294.25
சுனாமி முன்னெச்சரிக்கைக் கோபுரங்கள்	21,366,091.07	21,366,091.07	21,366,091.07
தொடர்பாடல் உபகரணங்கள்	141,248,236.06	140,709,514.86	140,709,514.86
பராமரிப்புச் செலவுகள்			
வாகனங்கள் பராமரிப்பு	13,206,475.52	11,364,219.73	11,364,219.73
இயந்திர உபகரணங்கள், ஏனைய உபகரணங்கள் பராமரிப்பு	11,374,572.84	10,216,494.63	10,216,494.63
ஆட்களுக்கான பணிக்கொடை			
சம்பளங்கள், சம்பளச் செலவுகளுக்கான கணக்குகள்	49,234,858.08	44,706,750.18	44,706,750.18
சாரதிகளுக்கான சீருடைக் கொடுப்பனவுகள்	-	136,000.00	136,000.00
மேலதிக நேரக் கொடுப்பனவுகள்	6,409,466.84	4,319,858.54	4,319,858.54
ஊழியர் சேமலாப நிதிப் பங்களிப்பு(12%)	13,014,858.30	11,705,037.08	11,705,037.08
வேறு கொடுப்பனவுகள்	54,752,161.09	51,951,060.00	51,951,060.00
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிப் பங்களிப்பு(3%)	3,147,491.82	2,876,463.18	2,876,463.18
செலுத்தவேண்டிய ஓய்வூதியப் பணிக்கொடைக்கான ஏற்பாடுகள்	2,823,545.69	8,936,348.13	8,936,348.13
சேவைகள்			
AMC கொடுப்பனவுகள்	120,000.00	28,000.00	28,000.00
வேறு செலவுகள்	400,804.16	552,262.96	552,262.96
மின்சாரம், நீர்	11,933,442.79	10,710,750.94	10,710,750.94
பாதுகாப்புச் சேவைகள்	834,010.78	1,529,040.54	1,529,040.54
போக்குவரத்துச் செலவுகள்	13,300.00	-	-
கட்டிடங்கள் பராமரிப்பு	1,091,709.58	1,088,166.73	1,088,166.73
விசாரணைக் கட்டணங்கள்	-	37,725.00	37,725.00
வாடகையும் உள்நாட்டு வரியும்	682,672.00	624,723.58	624,723.58
IMC கொடுப்பனவுகள்	452,191.46	187,649.50	187,649.50
நேர்முகக் கலந்துரையாடல்களுக்கான செலவுகள்	21,738.00	1,725.00	1,725.00
தபால், தொலைத்தொடர்பு	9,061,101.41	8,263,874.48	8,263,874.48
விளம்பரங்கள்	580,771.00	187,696.50	187,696.50
மொழிபெயர்ப்புக் கட்டணங்கள்	17,160.00	273,548.00	273,548.00
முன்னேற்ற மதிப்பாய்வுக் கூட்டச் செலவுகள்	-	202,694.00	202,694.00
வழங்கல்கள்			
உபசரிப்புச் செலவுகள்	562,700.74	240,078.55	240,078.55
அச்சு, காகிதாதிகள், அலுவலக தேவைகள்	3,168,975.85	3,182,018.36	3,182,018.36
பத்திரிகை மற்றும் வேறு	38,460.00	72,970.00	72,970.00
எரிபொருட் செலவுகள்	8,779,330.89	7,729,214.17	7,729,214.17
போக்குவரத்து மற்றும் வழங்கல் செலவுகள்			
போக்குவரத்து மற்றும் வழங்கல் செலவுகள் – உள்நாடு	3,773,245.11	2,874,994.21	2,874,994.21
போக்குவரத்து மற்றும் வழங்கல் செலவுகள் – வெளிநாடு	2,903,247.15	2,702,738.50	2,702,738.50
	377,524,745.74	373,688,176.81	373,722,384.06

அனர்த்த முகாமைத்துவ நிலையம்

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் - 2016	2016	2015 (மீள்கூறப்பட்ட)	2015 (கணக்காய்வு செய்யப்பட்ட)
	ரூ. சதம்.	ரூ. சதம்.	ரூ. சதம்.
குறிப்பு 04 - வேறு செலவுகள்			
ஒக்ஸ்பாம் உதவிச் செலவுகள்	140,000.00	-	-
யு.என்.டி.பி. உதவிச் செலவுகள்	-	19,382.00	19,382.00
ஏ.டி.பி.சி. உதவிச் செலவுகள்	-	1,140,000.00	1,140,000.00
சி.எஸ்.ஈ. உதவிச் செலவுகள்	176,097.50	-	-
செஞ்சிலுவை உதவிச் செலவுகள்	39,975.00	-	-
NDMC செலவினங்கள்	1,406,250.00	336,348.00	336,348.00
வேறு	617,957.42	-	-
உலக சுகாதார அமைப்பு உதவிச் செலவுகள்	145,644.00	627,585.00	601,289.84
நியொப் இற்காக யு.என்.டி.பி. உதவிச் செலவுகள்	438,519.28	1,418,320.00	1,418,320.00
செயலமர்வுகளுக்கான சார்க் செலவுகள்	-	10,000.00	10,000.00
சார்க் தேவைகள் மதிப்பீட்டுத்திட்டச் செலவுகள்	-	151,349.90	151,349.90
ஏ.டி.பி.சி. செலவுகள் - பாதுகாப்புத்தினம்	-	5,800.00	5,800.00
மீரியபத்த வீட்டுத்திட்டத்திற்காக சீன சி.ஏ.எம்.சி. Eng. Co. Ltd உதவிச் செலவுகள	1,000,000.00	-	-
ஐ.டீ.எம்.பி. உதவிச் செலவுகள்	-	396,400.00	396,400.00
ஆர்.எஸ்.எஸ்.டி.பி. உதவிச் செலவுகள்	804,024.80	36,045.00	36,045.00
எஸ்.எப்.டி.ஆர்.ஆர். உதவிச் செலவுகள்	-	321,122.43	321,122.43
டி.ஓ.எஸ்.ஈ.ஜி. உதவிச் செலவுகள்	2,047,060.92	75,117.00	75,117.00
2016 வெள்ள பதில் நடவடிக்கைகளுக்கான செலவுகள்	4,035,786.00	-	-
	10,851,314.92	4,537,469.33	4,511,174.17

அனர்த்த முகாமைத்துவ நிலையம்

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் - 2016

குறிப்பு 05 - ஆதனங்கள், உபகரணங்கள்

நிலையான சொத்துக்கள்		**2016.01.01ஆம் திகதிக்கு மொத்தச் செலவு**		**வருடத்தில் சேர்த்தல்/ மாற்றுதல்**		**2016.12.31ஆம் திகதிக்கு மொத்தச் செலவு**		**2016.01.01ஆம் திகதிக்கு எழுதப்பட்ட பெறுமதி**	
		ரூ.	**சதம்.**	**ரூ.**	**சதம்.**	**ரூ.**	**சதம்.**	**ரூ.**	**சதம்.**
சுனாமி முன்னெச்சரிக்கைக் கோபுரங்கள்	5%	427,321,821.33		-		427,321,821.33		315,008,525.66	
அலுவலக உபகரணங்கள்	10%	23,590,191.39		19,998,832.62		43,589,024.01		5,423,019.81	
தளபாடங்கள், உபகரணங்கள்	10%	6,577,440.01		5,257,567.75		11,835,007.76		2,896,412.62	
கணினி, உதிரிப்பாகங்கள்	10%	88,447,410.85		7,168,946.50		95,616,357.35		41,673,398.50	
மோட்டார் வாகனங்கள்	20%	297,462,051.98		7,975,000.00		305,437,051.98		7,766,034.18	
தொலைத்தொடர்பு உபகரணங்கள்	5-20%	1,558,531,595.74		-		1,558,531,595.74		912,448,411.17	
கணக்கீட்டு மென்பொருள்	20%	530,000.00		-		530,000.00		322,500.00	
		2,402,460,511.30		40,400,346.87		2,442,860,858.17		1,285,538,301.94	

தேய்மானம்		**2016.01.01ஆம் திகதிக்கு திரண்ட மீதி**		**வருடத்துக்கு ஒதுக்கம்/ செம்மையாக்கல்**		**2016.12.31ஆம் திகதிக்கு திரண்ட தேய்மானம்**		**2016.01.01ஆம் திகதிக்கு எழுதப்பட்ட பெறுமதி**	
		ரூ.	**சதம்.**	**ரூ.**	**சதம்.**	**ரூ.**	**சதம்.**	**ரூ.**	**சதம்.**
சுனாமி முன்னெச்சரிக்கைக் கோபுரங்கள்	5%	112,313,295.67		21,366,091.07		133,679,386.74		293,642,434.59	
அலுவலக உபகரணங்கள்	10%	18,167,171.58		1,943,378.05		20,110,549.63		23,478,474.38	
தளபாடங்கள், உபகரணங்கள்	10%	3,681,027.39		642,634.18		4,323,661.57		7,511,346.19	
கணினிகள்	10%	46,774,012.35		8,844,456.09		55,618,468.44		39,997,888.91	
மோட்டார் வாகனங்கள்	20%	289,696,017.80		5,001,034.19		294,697,051.99		10,739,999.99	
தொலைத்தொடர்பு உபகரணங்கள்	5-20%	646,083,184.57		141,248,236.06		787,331,420.63		771,200,175.11	
கணக்கீட்டு மென்பொருள்	20%	207,500.00		80,625.00		288,125.00		241,875.00	
		1,116,922,209.36		179,126,454.64		1,296,048,664.00		1,146,812,194.17	

அனர்த்த முகாமைத்துவ நிலையம்

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் - 2016

குறிப்பு 06 - செயற்படு மூலதனக் கருத்திட்டம்

பொறுப்பேற்கப்பட்ட சகல கருத்திட்டங்களுக்கும் செலுத்தப்பட்ட பணம் மற்றும் 2016 டிசம்பர் மாதம் 31ஆந் திகதி முடிவடையாத இன்னும் நடைமுறையிலிருக்கும் எல்லாக் கருத்திட்டங்களும் செயற்படு மூலதனக் கருத்திட்டங்களாகக் கருத்திற்கொண்டு அந்தக் கருத்திட்டங்களின் விபரங்கள் பின்வருமாறு தரப்பட்டுள்ளன.

தொ.இல.	கருத்திட்டம்	தன்மை மாவட்டம்	ஒதுக்கப்பட்டவை		மொத்தக் கொடுப்பனவுகள்	
			ரூ.	சதம்.	ரூ.	சதம்.
1.	குட்டியாவத்த தொடக்கம் மாபென் எல வரையிலான பாதையை நிரப்புதல்	வெள்ளம் காலி	9,500,000.00		9,305,287.86	
2.	தண்டுகம ஓயா புனரமைப்பு	வெள்ளம் குருநாகல்	13,403,000.00		13,403,000.00	
	மொத்தம்		**22,903,000.00**		**22,708.287.86**	

அனர்த்த முகாமைத்துவ நிலையம்

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் - 2016

குறிப்பு 07 – அனர்த்த பதில் நடவடிக்கை உபகரணங்கள் கையிருப்பு	2016		2015		2015 (கணக்காய்வு செய்யப்பட்ட)
விடயம்	அளவு	மொத்தப் பெறுமதி ரூ. சதம்.	அளவு	மொத்தப் பெறுமதி ரூ. சதம்.	மொத்தப் பெறுமதி ரூ. சதம்.
சங்கிலி அரிவாள்	95	7,114,935.00	50	3,857,250.00	3,857,250.00
உயிர்காப்பு அங்கிகள்	43	113,950.00	189	500,850.00	500,850.00
படகு இயந்திரம்	-	-	11	3,388,000.00	3,388,000.00
படகுகள் (Hull)	70	12,397,000.00	11	2,007,500.00	2,007,500.00
அ.மு.நி. இனங்காணும் அங்கிகள்	2646	1,309,770.00	2997	1,483,515.00	1,483,515.00
கையினால் இயக்கும் சைரன்	2	48,840.00	241	5,885,220.00	5,885,220.00
மழை அளவிடும் கருவி	1000	2,750,000.00	-	-	-
பாரிய கத்திகள்	10	6,328.00	10	6,328.05	6,328.05
தேடுதல் மற்றும் பாதுகாக்கும் கயிறுகள்	132	11,134,200.00	-	-	-
தேடுதலுக்குப் பயன்படும் மின்விளக்குகள்	92	160,960.00	67	105,860.00	105,860.00
தெப்பம்	1	134,000.00	50	6,637,500.00	6,637,500.00
வோட் -7 இடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட கம் பூட்	405	521,478.00	3000	3,862,800.00	3,862,800.00
மின்பிறப்பாக்கி	1	38,080.00	1	38,080.00	38,080.00
அ.மு.நி. இனங்காணும் அங்கிகள் – யு.என்.டி.பி.	2000	990,000.00	2000	990,000.00	990,000.00
மீட்புப் பை	1500	2,475,000.00	2410	3,976,500.00	3,976,500.00
தண்ணீர் தாங்கி 1000 ட	46	373,244.00	100	811,400.00	811,400.00
இறப்பர் கிளவுஸ்	2150	376,250.00	-	-	-
பேஸ் மாஸ்க்	2350	317,250.00	-	-	-
கோடாரிகள்	5	3,070.05	-	-	-
ஸ்டீல் சவல்	5	2,686.30	-	-	-
லன்லோ மண்வெட்டி	5	4,250.00	-	-	-
பிளக் கம் பூட்	30	59,700.00	-	-	-
மெகா போன்	1	10,700.00	-	-	-
லெதர் கிளவுஸ்	30	9,549.30	-	-	-
மச்செட் 12"	280	464,800.00	-	-	-
கண்ணாடி குகல்ஸ்	550	232,375.00	-	-	-
பி.ஏ. சிஸ்ட்டம் அ.மு.நி. A2120 H	55	7,154,618.90	-	-	-
மழை அங்கிகள்	2000	3,082,000.00	-	-	-
கையால் இயக்கும் அரிவாள்	5	8,850.00	-	-	
தண்ணீர் பம்புகள் BGVSP 2' SP	5	155,400.00	5	155,400.00	155,400.00
மொத்தம்		**51,449,284.55**		**33,706,203.05**	**33,706,203.05**

வருட ஆரம்பத்தில் அனர்த்த பதில் நடவடிக்கை உபகரணங்களின் கையிருப்பு ரூபா 33,706,203.05 ஆகும் என்பதுடன் வருடத்துக்குள் அந்தப் பொருட்கள் பகிர்ந்தளிக்கப்பட்டதனால் அது 27,576,153 ரூபா பெறுமதியான அனர்த்த பதில் நடவடிக்கை உபகரணங்களுக்கான செலவுகளுக்காக மாற்றப்பட்டது. அதேபோன்று 2016இல் 43 மில்லியன் ரூபா பெறமதியான அனர்த்த முகாமைத்துவ பதில் நடவடிக்கை உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

அனர்த்த முகாமைத்துவ நிலையம்

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் - 2016	2016	2015	2015 (கணக்காய்வு செய்யப்பட்ட)
	ரூ. சதம்.	ரூ. சதம்.	ரூ. சதம்.
குறிப்பு 08 - பொருட்பதிவேடு			
எழுதுகருவிகள்	269,774.88	271,004.66	271,004.66
கணனி ரோனர், காட்ரிஜ்	1,611,933.00	685,630.00	685,630.00
பத்திரங்கள்	36,250.00	58,000.00	58,000.00
புத்தகங்கள்	966,420.00	966,420.00	966,420.00
வாகனப் பழுதுபார்த்தல், பராமரிப்பு	1,496,204.20	504,452.90	504,452.90
வேறு	0.00	88,500.00	88,500.00
மொத்தம்	**4,380,582.08**	**2,574,007.56**	**2,574,007.56**
குறிப்பு 09 - முற்கொடுப்பனவு, முற்பணம்	**ரூ. சதம்.**	**ரூ. சதம்.**	**ரூ. சதம்.**
முற்பணம் - விழா	175,750.02	303,500.02	303,500.02
முற்பணம் - முத்திரை	19,788.85	18,910.70	18,910.70
முன்னெச்சரிக்கைக் கோபுரங்களுக்கான முற்கொடுப்பனவு	7,910,812.50	75,000.02	75,000.00
முற்பணம் – தலைமை அலுவலகம்	67,324.35	298,743.95	298,743.95
தயாரித்தல், திட்டமிடல் - தலைமை அலுவலகம்	-	8,750.00	8,750.00
பயிற்சி தலைமை அலுவலகம்	-	0.49	0.49
முற்பணம் – சேவைகள், பராமரிப்பு தலைமை அலுவலகம்	-	2,060.00	2,060.00
முற்பணம் - மாவட்டங்களில் சேவைகள், பராமரிப்பு	588,463.84	-	-
முற்பணம் – மாவட்ட மட்டத்தில் ஆயத்தமும் திட்டமிடலும்	200,165.53	1,315,569.80	1,315,569.80
முற்பணம் – மாவட்ட மட்டத்தில் பயிற்சியளித்தலும் விழிப்புணர்வூட்டலும்	98,943.20	431,529.57	431,529.57
முற்பணம் – எரிபொருள் மாவட்ட ரீதியில்	222,763.34	223,898.34	223,898.34
முற்பணம் - மாவட்டங்களில் சேவைகள், பராமரிப்பு	22,984.00	22,984.00	22,984.00
முற்பணம் – கொழும்பு பங்குச்சந்தை	-	205,367.50	205,367.50
	9,306,995.63	**2,906,314.39**	**2,906,314.37**
குறிப்பு 10 - வைப்புக்கள் மற்றும் வேறு கிடைக்கவேண்டியவை	**ரூ. சதம்.**	**ரூ. சதம்.**	**ரூ. சதம்.**
டொங்கல் மீதான வைப்பு	3,000.00	3,000.00	3,000.00
வைப்பு - இலங்கை மின்சார சபை	1,108,500.00	1,108,500.00	1,108,500.00
வைப்பு – தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை	51,500.00	51,500.00	51,500.00
வேறு கிடைக்கவேண்டியவை	490,509.55	560,808.72	560,808.72
	1,653,509.55	**1,723,808.72**	**1,723,808.72**
குறிப்பு 11 – பணம் மற்றும் பணம் சமப்படுத்தல்	**ரூ. சதம்.**	**ரூ. சதம்.**	**ரூ. சதம்.**
இலங்கை வங்கி – 2744646	30,353,922.06	23,464,131.47	23,464,131.47
திரவப் பணம்	-	56,155.25	56,155.25
	30,353,922.06	**23,520,286.72**	**23,520,286.72**

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் - 2016	2016	2015	2015 (கணக்காய்வு செய்யப்பட்ட)
குறிப்பு 12 – மூலதன மானியம் மீதான முதலீடுகள்	**ரூ. சதம்.**	**ரூ. சதம்.**	**ரூ. சதம்.**
மூலதனச் செலவு			
ஆற்றல் அபிவிருத்தி – மனித வள அபிவிருத்தி	2,472,535.44	2,115,113.04	2,115,113.04
குருநாகல், மாத்தறை, அம்பாந்தோட்டை, களுத்துறை, மாத்தளை, முல்லைத்தீவு மற்றும் பதுளை மாவட்டங்களில் நடுத்தர அனர்த்தங்களைத் தடுக்கும் திட்டங்கள்	558,548,530.26	367,101,455.22	367,101,455.22
அவசர நிலைமைகளின்போது பாதுகாப்பாக வெளியேற்றல்	-	19,309,427.21	19,309,427.21
அவசர வெள்ளப்பெருக்குத் தொடர்பான உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் (அ.மு.நி)	27,774,077.00	52,265,991.99	52,265,991.99
முன் ஆயத்தத் திட்டங்களைத் தயாரிப்பதற்காக அரச நிறுவனங்களுக்கு உதவுதல் (அ.மு.நி)	11,349,750.88	10,895,758.24	10,895,758.24
பானந்துறை, களுத்துறை பிரதேச செயலகப் பிரிவுகளில் வெள்ளப்பெருக்குக் கட்டுப்பாடு	-	35,000,000.00	35,000,000.00
தம்புள்ள பிரதேச செயலகப் பிரிவில் வெள்ளப்பெருக்குக் கட்டுப்பாடு	-	5,000,000.00	5,000,000.00
யாழ்ப்பாண மாவட்டத்தில் வெள்ளப்பெருக்குக் கட்டுப்பாடு	-	23,000,000.00	23,000,000.00
விழிப்புணர்வூட்டல்	11,964,515.10	8,663,038.57	8,663,038.57
முன்னறிவித்தல் கட்டமைப்பில் ஆற்றல் அபிவிருத்தி - UNHABITAT	-	284,149.44	284,149.44
முன்னறிவித்தல் கட்டமைப்பில் ஆற்றல் அபிவிருத்தி - UNHABITAT கட்டம் II	-	1,687,930.82	1,687,930.82
Development of Multi Hazard Risk Profile for Sri Lanka	5,806,862.26	-	-
மூலதன மானியங்களில் முதலீடு	**617,916,270.94**	**525,322,864.53**	**525,322,864.53**

அனர்த்த முகாமைத்துவ நிலையம்	2016	2015 (மீளக்கூறப்பட்ட)	2015 (கணக்காய்வு செய்யப்பட்ட)
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் - 2016			
குறிப்பு 13 - வேறு அமைப்புக்களிலிருந்து கிடைக்கும் மானியங்கள்	**ரூ. சதம்.**	**ரூ. சதம்.**	**ரூ. சதம்.**
யு.என்.டீ.பி.	966,420.00	966,420.00	966,420.00
ஏ.டீ.பி.சி.	265,242.30	265,242.30	1405,242.30
சி.எஸ்.ஈ.	234,493.31	420,785.81	420,785..81
தகவல் தொழில்நுட்பம் தொடர்பான உபகரணங்கள் கொள்வனவு A/C	37,795.22	37,770.22	37,770.22
உலக சுகாதார அமைப்பு	37,547.41	26,295.16	-
தேசத்துக்கு மகுடம் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு	120,672.92	120,672.92	120,672.92
யு.என்.ஹபிடட் கட்டம் II	86,144.48	109,475.68	109,475.68
நியொப், யு.என்.டி.பி.	4,953.22	193,972.50	1,724,792.50
ஏ.டி.பி.சி. பாதுகாப்புத்தினம்	32,724.85	128,523.85	90,203.85
செயலமர்வு சார்க்	1,755,917.10	1,765,917.10	1,264,594.00
சீன சி.ஏ.எம்.சி. பொறியியல் Co, Ltd மீரியபத்த வீட்டுத்திட்டம்	1,000,000.00	2,000,000.00	2,000,000.00
யு.என்.டி.பி. – ஐ.டி.எம்.பி	1,103,600.00	1,103,600.00	1,500,000.00
யு.என்.டி.பி. – ஆர்.எஸ்.எஸ்.டி.பி.	159,930.20	963,955.00	1,000,000.00
யு.என்.டி.பி. – எஸ்.எப்.டி.ஆர்.ஆர்.	981,418.49	978,877.57	1,300,000.00
யு.என்.டி.பி. – டி.ஓ.எஸ்.ஈ.ஜீ.	667,848.00	1,424,883.00	1,500,000.00
யு.என்.டி.பி. – டி.ஆர்.ஆர். – எல்.ஜீ.எஸ்	1,000,000.00	1,000,000.00	1,000,000.00
	8,454,707.50	**11,506,391.11**	**14,979,600.38**

அனர்த்த முகாமைத்துவ நிலையம்

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் - 2016

குறிப்பு 14 – ஓய்வூதியப் பயன்கள் தொடர்பான பொறுப்புக்கள்

	2016		2015		2015 (கணக்காய்வு செய்யப்பட்ட)	
	ரூ.	சதம்	ரூ.	சதம்	ரூ.	சதம்
2016 ஜனவரி 01 மீதி	**21,174,185.63**		12,474,738.75		12,474,738.75	
வருடத்துக்கான நிதி ஏற்பாடு	2,823,545.69		8,936,348.13		8,936,348.13	
கொடுப்பனவுகள்	589,034.50		236,901.25		236,901.25	
2016 டிசம்பர் 31ஆந் திகதிக்கு மீதி	**23,408,696.82**		**21,174,185.63**		**21,174,185.63**	

1983ஆம் ஆண்டு 12ஆம் இலக்கப் பணிக்கொடை செலுத்தல் சட்டத்தின் கீழ் கணக்குகளில் ஓய்வூதியப் பணிக்கொடை செலுத்துவதற்காக நிதி ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன் நிதி ஆண்டில் இறுதி மாதத்தில் பெற்ற சம்பளத்தில் அரைவாசிப் பெறுமதி அனர்த்த முகாமைத்துவ அமைச்சில் பணியாற்றிய வருடக் கணக்கு எண்ணிக்கைக்கமையக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்த அலகு பிற்போடப்பட்ட பொறுப்புக்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இந்த நிதி ஒதுக்கங்களுக்கு வெளிவாரி நிதி முகாமை அல்லது ஆயுட்காலத்துக்கமையக் கணிப்பிடப்படவில்லை.

இலங்கைக் கணக்கீட்டுத் தரம் 19க்கமைய இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்டுள்ள ஊழியர் பயன் தரல்கள் தொடர்பில் 57வது பந்தி மற்றும் டி தலைப்பில் இணங்கப்பெற்ற பயன்களுக்கான பொறுப்புக்கள் தொடர்பில் நிதி ஏற்பாடுகளைச் செய்தல் சம்பந்தமாக எடுகோள்கள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் இதன்படி இந்த நிறுவனத்துக்கு 100க்கும் அதிகமான ஊழியர்கள் இருந்திருப்பின் ஈ தலைப்பில் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளைப் பின்பற்ற வேண்டும். தலைப்பு 2இல் பொருட்கள் விற்பனை அல்லது சேவைகள் வழங்குதல் தொடர்பில் அரச கூட்டுத் தாபனங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அனர்த்த முகாமைத்துவ நிலையம்
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் - 2016

	2016	2015	2015 (கணக்காய்வு செய்யப்பட்ட)
	ரூ. சதம்	ரூ. சதம்	ரூ. சதம்
குறிப்பு 15 - வேறு செலுத்தவேண்டியவை			
களஞ்சியப் பொறுப்பாளர் பாதுகாப்பு வைப்பு	-	3,600.00	3,600.00
கேள்விப்பத்திர வைப்பு – மீளச் செலுத்தக்கூடியது	123,800.00	145,000.00	145,000.00
சம்பளங்கள், கூலிகள் செலுத்தவேண்டியவை	23,020.00	72,736.47	72,736.47
மேலதிக நேரச் செலுத்தவேண்டியது	489,335.75	348,022.11	348,022.11
போக்குவரத்துச் செலவு சென்மதி	195,415.00	180,498.40	180,498.40
எரிபொருள் செலவு சென்மதி	415,060.00	-	-
வாகனப் பராமரிப்புச் செலுத்தல்	280,684.00	-	-
செலுத்தவேண்டிய வாடகை மற்றும் உள்நாட்டு வரி	55,500.00	31,500.00	31,500.00
தபால் மற்றும் தொடர்பாடல்	2,736,238.91	676,353.09	676,353.09
செலுத்தவேண்டிய மின்சாரம் மற்றும் நீர்வழங்கல்	905,366.37	837,292.48	837,292.48
செலுத்தவேண்டிய வேறு சேவைகள்	225,681.16	205,503.38	205,503.38
	5,450,101.19	**2,500,505.93**	**2,500,505.93**

குறிப்பு 16 - வேறு ஒதுக்கங்கள்	ரூ. சதம்	ரூ. சதம்	ரூ. சதம்
கையிருப்புக்கள் இல்லாமல் போனமை தொடர்பான ஒதுக்கம்	206,011.56	206,011.56	206,011.56
	206,011.56	**206,011.56**	**206,011.56**

2007 ஜூன் 07ஆந் திகதி அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் வெயாங்கொட களஞ்சிய சாலையில் அனர்த்த பதில் நடவடிக்கைகளுக்கான உபகரணங்கள் காணாமல் போனமையினால் 206,611.56 ரூபாய்க்கான நட்டம் ஏற்பட்டுள்ளது. உபகரணங்கள் காணாமல் போனமைக்குப் பொறுப்பான உத்தியோகத்தர் தற்போது விளக்க மறியலில் இருப்பதுடன் அவருக்கெதிராக ஒழுக்க விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இதன் முடிவின்படி உத்தியோகத்தர் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது. 2016 டிசம்பர் ஆகும்போதும் வழக்கு விசாரணை இடம்பெறுகின்றது.

குறிப்பு 17 – ஒப்பீட்டுத் தகவல்

நடப்பாண்டுடன் இசைவாக்கம் செய்யப்படுவதற்காக, தேவைப்படுமிடத்து, ஒப்பீட்டு எண்ணிக்கைகள் மீள ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. ஒப்பீட்டு மீதிகளின் வருமானம், செலவினம் மற்றும் பொறுப்புக்களின் திருத்தத்திற்காக 2016ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட நிதிக் கூற்றின் மீள் கூற்றுக்களுக்கு உரித்தான குறிப்பு இலக்கங்கள் 02, 04 மற்றும் 13இல் இதன் மொத்தப் பெறுமதி ரூ.3,473,209.27 ஆகக் காணப்படுகின்றது. நிதிக் கூற்றினைப் பயன்படுத்துபவர்களின் தகவலுக்காக 2016ஆம் ஆண்டுக்கான நிதிக் கூற்று விபரங்கள் 2015க்கான கணக்காய்வு செய்யப்பட்ட பகுதியின் கீழும் மேலதிக பகுதியின் கீழும் காட்டப்பட்டுள்ளன.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இல.
My No. } டீஎம்ஜீ/ஏ/டீஎம்சீ/01/16/13

මගෙ අංකය
உமது இல.
Your No. }

දිනය
திகதி
Date } 2017 நவம்பர் 14

பணிப்பாளர் நாயகம்
அனர்த்த முகாமைத்துவ நிலையம்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கத் தகல்வல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் 2005 இன் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்தங்கள் முகாமைத்தவ அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் நிலையத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களை (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) பின்தொடர்ந்து இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள்

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. . - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றியகணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிலையத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி நிலையத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக் கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு

நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் படி சொத்துக்கள் அவற்றை பயன்படுத்தப்படுவதற்கு தயாரான நிலையக்கு கொண்டுவரப்பட்ட பின்னரே பெறுமானத்தேய்வு செய்தல் ஆரம்பிக்கப்படுதல் வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், நிலையத்தினால் அதற்கு முரணாக கொள்வனவு செய்த வருடத்தில் பெறுமானத்தேய்வு செய்யாதிருப்பதற்கும், கைதவிர்க்கும் வருடத்தில் ஒழு முழு வருட பெறுமானத்தேய்வினை செய்வதற்கும் கொள்கையொன்றை இனங்கண்டிருந்தது. இருப்பினும், 2013 ஆம் ஆண்டிற்கு முன்னர் நிலையத்தினால் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டு முதல் பெறுமானத்தேய்வு செய்கின்ற கொள்கை பின்பற்றப்பட்டிருந்தது.

2.2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

2010 மே 10 ஆந் திகதி பதவி முடிவிற்கு கொண்டுவரப்பட்டிருந்த உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்தும் 2014 சனவரி 06 ஆந் திகதி வாகனமொன்றை அனுமதியின்றி ஓட்டிச்சென்று விபத்துக்குள்ளாக்கியிருந்தமையால் குறித்த உத்தியோகத்தரிடமிருந்து நிலையத்திற்கு அறவிடப்பட வேண்டிய முறையே ரூபா 256,589 மற்றும் ரூபா 165,645 இனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.3 கணக்காய்விற்கான சான்றின்மை

பின்வரும் அவதானிப்புக்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அனர்த்தங்களை குறைக்கும் செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதற்காக நிலையத்தினால் மாவட்டச் செயலாளர்களிற்கு அனுப்பிவைக்கப்படுகின்ற நிதிகள் பயன்படுத்தப்படுகின்ற முறைகள் மற்றும் குறித்த செயற்திட்டங்களின் பௌதீக செயன்முன்னேற்றங்கள் தொடர்பான தகவல்கள் உரிய வேளையில் அறிவிக்கப்படுவதில்லை என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் ரூபா 142,104,047 கிரயம் கொண்ட 48 இடர் குறைப்புச் செயற்திட்டங்கள் நிலையத்தினால் அமுல்படுத்தப்பட்டிருந்த போதிலும், அவற்றின் வேலை முடிவுறுத்தல் அறிக்கைகள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக அச் செயற்திட்டங்களின் பௌதீக செயன்முன்னேற்றங்களையும் அவற்றின் பயன்தரும் தன்மையினையும் கணக்காய்வு செய்வதற்கு முடிந்திருக்கவில்லை.

(ஆ) நிலையத்தின் நிலையான சொத்துக்களின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 5,475,000 கிரயமான பெகோ லோடர் தொடர்பிலான பௌதீக பரிசோதனை அறிக்கையும் ஏனைய ஆதார அறிக்கைகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஒத்த மதிப்பீட்டுப் பெறுமதிகளைக் கொண்ட 30 மோட்டார் வாகனங்களிற்காக பல்வேறு மதிப்பீட்டுப் பெறுமதிகளின் கீழ் காப்புறுதி தவணைக் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. அத்துடன், மீளாய்வாண்டிற்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 2,284,431 தொகையான 38 மோட்டார் வாகனங்களிற்குரிய காப்புறுதி தவணைக் கட்டணங்கள் கணிப்பீடு செய்யப்பட்டிருந்த அடிப்படை கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதான அலுவலகத்திலுள்ள சொத்துக்கள் தொடர்பிலான பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2.3 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு	இணங்காமை
(அ) 2005 இன் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவ அதிகாரச்சட்டத்தின் 05 ஆம் பந்தி	அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடகளின் பிரகாரம் வருடந்தோரும் குறைந்தது 04 கூட்டங்களேனும் நடாத்தப்படுதல் வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அனர்த்த முகாமைத்துவ நிலையம் ஆரம்பிக்கப்பட்ட திகதியான 2005 ஒக்தோபர் 12 ஆந் திகதி முதல் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலுமான 11 வருட காலப்பகுதியில் 10 கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன.
(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் கோவை	
(i) நிதிப்பிரமாணம் 395 (ஈ)	மாதாந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடர்ந்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், 2016

	யூலை மாதம் முதல் 2016 நவம்பர் மாதம் வரையிலுமான நிலையத்தின் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தாமதத்துடன் தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன், 2016 திசெம்பர் மாதத்திற்கான வங்கிக் கணக்கிணக்கக் கூற்று 2017 மார்ச் 22 ஆந் திகதியன்றே தயாரிக்கப்பட்டிருந்தது.
(ii) நிதிப்பிரமாணம் 104	மீளாய்வாண்டில் 11 சந்தர்ப்பங்களில் இடம்பெற்றிருந்த 09 மோட்டார் வாகன விபத்துக்கள் தொடர்பில் ஆரம்ப அறிக்கைகள் அல்லது முழுமையான அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.
(இ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கோவை	
(i) 3.4.3 ஆம் வழிகாட்டல்	நிலையத்தின் கொள்வனவு நடவடிக்கைகளிற்காக வழங்குனர்களை பதிவுசெய்தல் தொடர்பில் கொள்வனவு வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(ii) 4.2.1 (ஆ) ஆம் வழிகாட்டல்	ஆகக்குறைந்தது 03 ஆண்டு காலத்திற்காக எதிர்பார்க்கப்படுகின்ற கொள்வனவு நடவடிக்கைகள் பிரதான கொள்வனவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும், நிலையத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த பிரதான கொள்வனவுத் திட்டத்தில் மீளாய்வாண்டிற்குரிய கொள்வனவு நடவடிக்கைகள் மாத்திரமே உள்ளடக்கப்பட்டிருந்தன.
(iii) 2014 யூலை 04 ஆந் திகதிய கொள்வனவு வழிகாட்டல்கள் கோவைக்கான 28 ஆம் இலக்க மேலதிக வழிகாட்டல்	ரூபா 200,000 இற்கு மேற்பட்ட மோட்டார் வாகன திருத்தங்களிற்காக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் தனிப்பட்ட அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், ரூபா 1,643,434 கூட்டுத்தொகையான 04 மோட்டார் வாகனங்களின் திருத்தங்களிற்காக அவ்வாறான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3. நிதி மீளாய்வு

3.1 நிதி விளைவுகள்

2016 திசெம்பர் 31 இல் முடிவுற்ற அண்டிற்கான நிலையத்தின் நிதி விளைவுகள் ரூபா 6,159,474 பற்றாக்குறையொன்றானதுடன், அதனையொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 12,255,473 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 6,095,999 முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. ஏனைய வருமானம் ரூபா 11,634,074 ஆல் குறைந்திருந்த போதிலும், அரசாங்கத்தின் மீணடெழும் மானியம் ரூபா 27,880,486 ஆல் அதிகரித்திருந்தமையே மேற்படி முன்னேற்றத்திற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்கையில் 2014 ஆம் ஆண்டில் மிகையொன்று காணப்பட்ட போதிலும், ஏனைய 04 ஆண்டுகளிலும் பற்றாக்குறையே காணப்பட்டது. இருப்பினும், நிதி விளைவிற்கு ஊழியர் வேதனங்கள் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களிற்கான பெறுமானத்தேய்வை சீராக்கியதன் பின்னர் 2012 ஆம் ஆண்டில் ரூபா 272,154,844 ஆகக் காணப்பட்ட பங்களிப்பு 2016 ஆம் ஆண்டில் ரூபா 238,364,189 ஆக மாற்றமடைந்திருந்தது.

3.2 நிலையத்திற்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டரீதியான சம்பவங்கள்

நிலையத்திற்குச் சொந்தமாகக் காணப்பட்ட மோட்டார் வாகனமொன்று 2012 ஆகஸ்ட் 16 ஆந் திகதி விபத்துக்குள் சிக்குண்டு ஒருவர் மரணித்தமை காரணமாக பாதிப்புக்குட்பட்ட தரப்பினரால் 2014 ஆகஸ்ட் 07 ஆந் திகதி மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்தில் நிலையத்திற்கு எதிராக வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன், அதனுடன் தொடர்பில் தேவையான தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2005 இன் 13 ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவ அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 21 பிரதான ஆபத்துக்களை குறைத்துக் கொள்வதற்காக நிலையத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், 2012 முதல் 2016 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் அவற்றில் 04 ஆபத்துக்களிற்காக மாத்திரம் முன்னுரிமையளித்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மேற்குறித்த காலப்பகுதிக்காக நிலையத்தினால் அனர்த்தங்களை குறைத்துக் கொள்வதற்காக செய்யப்பட்டிருந்த ரூபா 1,749.42 மில்லியன் மொத்தச் செலவினத்தில் வெள்ளப்பெருக்கு ஆபத்தை

குறைத்துக் கொள்வதற்காக 63 சதவீதமும், வரட்சியினால் ஏற்படக்கூடிய அர்த்தங்களை குறைப்பதற்காக 22 சதவீதமும், மண்சரிவு ஆபத்தைக் குறைத்துக்கொள்வதற்காக 08 சதவீதமும் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், பெயர் குறிப்பிடப்பட்டிருந்த ஏனைய 18 இடர்கள் தொடர்பில் இடராபத்தைக் குறைத்துக் கொள்வதற்காக மொத்தச் செலவினத்தில் 07 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) நிலையத்தின் தயார்படுத்தல் பிரிவினால் மாவட்ட, பிரதேச மற்றும் கிராமிய ரீதியிலான அனர்த்த முகாமைத்துவ திட்டங்கள் வருடந்தோரும் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 13 மாவட்டங்களுடன் தொடர்புடைய திட்டங்கள் 03 ஆண்டுகளிற்கும் மேல் பழமைவாய்ந்தவை என்பது அவதானிக்கப்பட்டது. அத்துடன், சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்களின் பிரகாரம், உயர்வான இடராபத்து காணப்படும் மாவட்டங்களிலுள்ள கிராம சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கையினை உறுதியாக இனங்காண முடியவில்லை. மாவட்ட திட்டத்தின் பிரதான அங்கமான மாவட்டத்தின் இடராபத்தினை மதிப்பீடு செய்வதற்கான முன்னேற்பாட்டுத் திட்டம், அவசர நிலைமையினை எதிர்கொள்ளும் திட்டம் மற்றும் புனரமைப்புத் திட்டம் போன்ற திட்டங்களில் அவ்விடராபத்துக்களை மதிப்பீடு செய்வதற்கான பொறிமுறையினை இனங்காண்பதற்கு முடியாதிருந்தமை காரணமாக, அத் திட்டங்களை திருத்தமாக நடைமுறைப்படுத்தக்கூடிய செயன்முறையின் தன்மையினை இனங்காண்பதற்கு முடியாது போயிருந்தது.

(இ) ரூபா 247,000,000 மொத்த மதிப்பீட்டுக் கிரயத்துடன் திறைசேரி நிதி ஏற்பாட்டின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற இலங்கையின் அபிவிருத்தி பல் ஆபத்துக்கள் இடர் ஏற்பு செயற்திட்டத்திற்காக 2016 ஆம் ஆண்டில் ரூபா 68,000,000 நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டில் ரூபா 10,804,000 செலவில் செயற்திட்டத்திற்குத் தேவையான மென்பொருள் முறைமை மற்றும் கணனி உபபாகங்களை கொள்வனவு செய்வதல் மாத்திரம் இடம்பெற்றிருந்த போதிலும், செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கை என்பன சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பேரளவு செயற்திட்டமொன்றாக நிலையத்தினால் அமுல்படுத்தப்பட்டிருந்த தம்புள்ள வெள்ள ஆபத்துக் குறைப்பு செயற்திட்டம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- இச் செயற்திட்டத்தின் கீழ் தம்மன்னா கால்வாயினை விரிவுபடுத்தி கால்வாய் கட்டினை நிர்மாணிப்பதற்கான 07 வேலைகளிற்காக ரூபா 42 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பில் சாத்தியவள ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தமைக்கான சான்றுகள் கிடைத்திருக்காமையால் செயற்பாட்டின் தேவை மற்றும் பயனுள்ள தன்மை தொடர்பில் உறுதிப்பாட்டினை பெற்றுக்கொள்ள முடிந்திருக்கவில்லை.

- கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 4.3.1 ஆம் பிரிவின் பிரகாரம், 7 வேலைகளிற்காக மொத்தக் கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யாது பகுதி பகுதியாக மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது.

- 7 வேலைகளில் 3 இனை பௌதீக ரீதியில் பரிசோதனை செய்தபோது கேபியன் மதிற்சுவரை நிர்மாணித்தமைக்காக ரூபா 5,459,000 செலுத்தப்பட்டிருந்த போதிலும், அதற்காக உரிய அளவிலமைந்த கருங்கற்கள் பயன்படுத்தப்பட்டிருக்காமையால் அவை உரியமுறையில் இணைக்கப்பட்டிருக்கவில்லை. சுவரின் பின்புறத்தில் கிரவல் இடப்பட்டு நீர் வார்க்கப்பட்டு செப்பணிடுவதற்காக ரூபா 342,498 செலுத்தப்பட்டிருந்த போதிலும், கிரவலுக்குப் பதிலாக மண் இடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) மாவட்டச் செயலகங்களினால் அமுலாக்கப்படுகின்ற மாவட்ட மட்டத்திலான இடர் குறைப்பு சிறிய மற்றும் நடுத்தரளவிலான செயற்திட்டங்கள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- செயற்திட்டத்திற்கான நிதி ஏற்பாட்டினை வழங்குவதற்கு முன்னர் முறைப்படியான செயற்திட்டப் பிரேரணைகள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு இல்லாத 08 மாவட்டங்களில் செயற்படுத்தப்பட்டிருந்த 31 செயற்திட்டங்களிற்காக ரூபா 121,945,689 மதிப்பீட்டுப் பெறுமதியான நிதி குறித்த மாவட்டச் செயலாளர்களிற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

- அத்துடன், பிரதேச செயலகங்களினால் வேலை மதிப்பீடுகள் உரிய முறையில் தயாரிக்கப்பட்டிருக்காமை காரணமாக 15 சதவீதம் முதல் 66 சதவீதம் வரையிலான வீச்சில் நிதி ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது.

- மாவட்டச் செயலகங்களிற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த நிதியில் செயற்திட்டங்கள் பூரணப்படுத்தப்பட்ட பின்னர் எஞ்சியிருந்த நிதி 2016 திசெம்பர் 31 இற்கு முன்னர் நிலையத்திற்கு மீளளிக்கப்பட வேண்டிய போதிலும், அநுராதபுரம், இரத்தினபுரி மற்றும் குருணாகல் ஆகிய மாவட்டங்களில் செயற்படுத்தப்பட்டிருந்த 31 செயற்திட்டங்களில் எஞ்சியிருந்த ரூபா 8,889,449 தொகையினை அந்த அலுவலகங்களிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுகக்ப்பட்டிருக்கவில்லை. அத்துடன், செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதற்காக மாவட்டச் செயலகங்களிற்குரிய நிர்வாக செலவினத்தை கணிப்பிடுகையில் உறுதியான அடிப்படையொன்றை பின்பற்றாது பல்வேறு அடிப்படைகளின் கீழ் நிர்வாக செலவினம் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2005 இன் 13 ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவ அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினை செயற்படுத்துவதற்காக அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே இந்த அதிகாரச்சட்டத்தினை திருத்துவதற்காக அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் சட்ட வரையுனர் திணைக்களத்தின் ஊடாக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், சட்ட வரையுனர் திணைக்களத்தினால் 2017 யூன் 22 ஆந் திகதி அதிகாரச்சட்டத்திற்கான திருத்தங்கள் மறுபரிசீலனை செய்யப்பட்டு அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் அவதானிப்புக்களை சமர்ப்பிப்பதற்காக திருப்பி அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

(ஆ) வானிலை அவதான திணைக்களத்திற்குரிய காணியொன்றில் ரூபா 1,034,399,368 செலவிடப்பட்டு 2010 ஆம் ஆண்டில் நிலையத்தின் தலைமை அலுவலகக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், அக் காணியினையும் கட்டிடத்தினையும் நிலையத்திற்கு கையேற்று கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஐக்கிய நாடுகள் தாபனத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ஏனைய அரச சார்பற்ற அமைப்புக்களிடமிருந்து நிலையத்திற்கு கிடைத்திருந்த 18 மோட்டார் சைக்கில்களின் பெறுமதியினை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், அவற்றின் பயணிக்கக்கூடிய நிலை, வைத்திருக்கும் பொறுப்புவாய்ந்த தரப்பினர் போன்ற விடயங்கள் தொடர்பில் பிந்திய பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக இச் சொத்துக்கள்

துஷ்பிரயோகத்திற்கு உட்படுதல் அவ்வாறே சொத்துக்களின் உள்ளமை தொடர்பில் சிக்கலான நிலைமை காணப்படுகின்றது என்பது கணக்காய்வின் கருத்துரையாகும்.

4.3 சொத்துக்கள் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) "திடீர் அனர்த்தங்களை எதிர்கொள்ளல் ஆற்றலை முன்னேற்றுதல்" இற்காக நிலையத்தினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 5,000,000 கிரயமான தண்ணீர் பவுசர் இனை மொனராகலை மாவட்டச் செயலகத்திற்கு கையளிப்பதற்காக 2014 மார்ச் 14 ஆந் திகதி ஒடன்படிக்கையொன்று ஏற்படுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், அந்த அலுவலகத்திற்கு தண்ணீர் பவுசர் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2017 யூன் 23 ஆந் திகதி வரையிலும் அதன் உரித்தினை சட்டரீதியாக ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாவட்டச் செயலகங்களில் காணப்பட்ட 2008 ஆம் ஆண்டில் அகற்றப்படுதல் வேண்டுமென பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் மூலம் பரிந்துரைக்கப்பட்டிருந்த 62 பொருள் விடயங்களை அகற்றுவதற்கான அங்கீகாரம் 2017 பெப்ரவரி மாதம் வரையிலும் நிலையத்தினால் வழங்கப்பட்டிருக்கவில்லை.

4.4 நிதி முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான காசுப் புத்தகத்தின் மீதி ரூபா 18,023,370 என உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், 2016 திசெம்பர் 31 ஆந் திகதியிடப்பட்டு வழங்கப்பட்டிருந்த ரூபா 67,231,890 இற்கான 162 காசோலைகள் மற்றும் ரூபா 79,562,441 இற்கான 45 பற்றுச்சீட்டுக்கள் என்பன 2016 ஆம் ஆண்டின் போது இடம்பெற்ற கொடுப்பனவுகள் மற்றும் பெறுவனவுகளாக கருதப்பட்டு 2017 சனவரி 01 ஆந் திகதி முதல் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. அதற்கமைய, மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான காசுப்புத்தக மீதி ரூபா 30,353,972 என நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. இதற்கமைய, நிதியாண்டு முடிவடைந்த பின்னரும் கணனி மயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமையினை திறந்து வைத்து கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்வதற்கு உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்திருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டிற்காக அரசாங்க பாதீட்டில் மூலதன மற்றுறும் மீண்டெழும் செலவினத்திற்காக முறையே ரூபா 770,500,000 மற்றும் ரூபா 12,500,000 நிதி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதிலும், திறைசேரியினால் விடுவிக்கப்பட்டிருந்த தொகைகள் முறையே ரூபா 504,670,000 மற்றும் ரூபா 1,500,000 ஆக மாத்திரம் காணப்பட்டிருந்ததுடன், அது மதிப்பீட்டுப் பெறுமதியில் 65 சதவீதம் மற்றும் 12 சதவீதமாகக் காணப்பட்டது. அதற்கமைய, ஆண்டின் போது மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த மூலதன மற்றும் மீண்டெழும் செலவினத்திற்குத் தேவையான நிதியினை திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு நிலையத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 மார்ச் 31 ஆந் திகதியளவில் தனியார் நிறுவனமொன்றினால் நிலையத்திற்கு அன்பளிப்பச் செய்யப்பட்டிருந்த ரூபா 2,000,000 தொகையில் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 1,000,000 பயன்படுத்தப்படாது விளைவற்று வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) அனைத்து விதமான இடர்களையும் குறைத்துக் கொள்வதற்காக சர்வதேச நியமகங்களிற்கமைய 2015 ஆம் ஆண்டு முதல் 2030 ஆம் ஆண்டு வரையிலுமான காலப்பகுதிக்காக "செந்தாய் வேலைத்திட்டம்" என்ற பெயரில் திட்டமொன்றை தயாரிப்பதற்கு ஐக்கிய நாடுகள் தாபனத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் 2015 ஆம் ஆண்டில் நிலையத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 1,300,000 மானியத்திலிருந்து 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் பல்வேறு நடவடிக்கைகளிற்காக ரூபா 318,583 செலவிடப்பட்டிருந்த போதிலும், செந்தாய் வேலைத்திட்டத்திற்கு அமைவாக திட்டத்தினை தயாரிக்கும் பணியினை பூரணப்படுத்தவதற்கு நிலையம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) ஐக்கிய நாடுகள் தாபனத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் நிறுவனரீதியான இடர் முகாமைத்துவ திட்டத்தினை தயாரிப்பதற்கான மானியமாக 2015 யூலை 07 ஆந் திகதி கிடைத்திருந்த ரூபா 1,500,000 தொகையிலிருந்து 2017 மே 19 ஆந் திகதி வரையிலும் ரூபா 396,000 பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், குறித்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

4.5 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்

அவசர தேவைகளிற்காக நிலையத்தின் நிதி ஏற்பாட்டிலிருந்து 2014 யூலை மற்றும் ஒக்தோபர் மாதங்களில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த அனர்த்த நிவாரண தொழிலாளர்களை இனங்காணக்கூடிய மேலங்கி இருப்பிலிருந்து ரூபா 1,483,515 பெறுமதியான 2997 அலகுகள் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் களஞ்சியத்தில் வைத்திருக்கப்பட்டிருந்ததுடன்,

மீளாய்வாண்டின் போது 351 அலகுகள் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தன. இவ்வாறு மேலங்கிகள் எஞ்சியிருக்கையில் ஐக்கிய நாடுகள் தாபனத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி உதவியினைப் பயன்படுத்தி 2015 சனவரி மாதத்தில் ரூபா 990,000 கிரயத்தில் 2000 மேலங்கிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அவையும் 2016 திசெம்பர் 31 வரையிலும் பயன்படுத்தப்படாது களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன.

4.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

ரூபா 17,081,640 பெறுமதியான 70 படகுகள் மற்றும் 72 சங்கிலி வாள்கள் என்பவற்றை 2016 நவம்பர் 28 ஆந் திகதிக்கு முன்னர் வழங்குவதற்காக நிலையத்தினால் தெரிவுசெய்யப்பட்டிருந்த வழங்குனர்கள் இணங்கியிருந்த போதிலும், குறித்த கட்டளைகள் 2016 திசெம்பர் 14 மற்றும் 31 ஆந் திகதிகளிலேயே நிறைவேற்றப்பட்டிருந்தன. அதன் காரணமாக, தாமதிக்கப்பட்ட காலத்தினுள் கூட்டப்பட்ட பெறுமதியின் மீதான விகிதாசார மாற்றத்தின் மீது ரூபா 616,960 கூட்டுத்தொகை பெறுமதிசேர் வரியாக செலுத்தப்பட்டிருந்தது.

4.7 கொள்வனவுகள் மற்றும் ஒப்பந்த செயன்முறை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலையத்தின் குருணாகல் மாவட்ட அலுவலகத்தின் இடர் குறைத்தல் செயற்திட்டத்தின் கீழ் குடிநீர் கிணறுகளை நிர்மாணித்தல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2016 நவம்பர் 30 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் கடுகம்பல பிரதேசத்தில் குடிநீர் கிணற்றினை நிர்மாணித்தல் வேலைகள் ஒரு மாதத்தினுள் பூரணப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், 2017 சனவரி 26 ஆந் திகதி வரையிலும் வேலைகள் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், ஒப்பந்தத்தினை பொறுப்பேற்றிருந்த சமூக அடிப்படை நிறுவனத்தினால் குறித்த காலத்தில் வேலைகள் பூரணப்படுத்தப்பட்டிருந்ததாக குறிப்பிட்டு தவறான அறிக்கையொன்று நிலையத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ii) பன்னல பிரதேச செயலக அதிகாரப்பிரதேசத்தில் ரூபா 4,033,835 மதிப்பீட்டுப் பெறுமதியினைக் கொண்ட 05 குடிநீர் கிணறுகள் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான 2017 சனவரி 26 ஆந் திகதி வரையிலும், அக்கிணறுகள் குடிநீரை பெறுவதற்கு பொருத்தமான விதத்தில் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிலையத்தினால் தனியார் கம்பனியொன்றுடன் 77 சுனாமி கோபுரங்களை புனரமைத்து திருத்துவதற்காக ரூபா 134,746,419 பெறுமதிசேர் வரி உள்ளடங்கலான பெறுமதிக்கு 2016 திசெம்பர் 16 ஆந் திகதி உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டிருந்ததுடன், 2016 திசெம்பர் 21 ஆந் திகதி முற்பணமாக ரூபா 8,345,898 செலுத்தப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் 90 நாட்களில் குறித்த பணிகள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த போதிலும், 2017 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அப்பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

உடன்படிக்கைக்கு அமைய 06 மாதங்கள் கடந்த பின்னரும் கூட அனர்த்த முன் எச்சரிக்கை கோபுரங்களை புனரமைப்பதற்கு முடியாது போனமைக்கு சீரற்ற காலநிலை, தொழில்நுட்ப உபகரணங்களை பெற்றுக்கொள்வதில் தாமதம், இலங்கை தரைப்படையின் சமிக்கை படைப்பிரிவின் உத்தியோகத்தர்கள் ஒவ்வொரு கோபுரத்திற்கும் சென்று பரீட்சிப்பதற்கு காலம் எடுத்திருந்தமை போன்ற காரணங்கள் தாக்கமளித்திருந்ததாக பணிப்பாளர் நாயகத்தினால் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(இ) 2016 திசெம்பர் 21 ஆந் திகதி கொள்வனவுத் திட்டத்திற்கமைய, அவசர நிலைமைகளின் போதான கொள்வனவுகளிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 54.8 மில்லியன் தொகையிலிருந்து 19 வகையான பொருட்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 941,794 செலவில் செய்திப்பத்திரிகை அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்தது. இருப்பினும், ரூபா 12.86 மில்லியன் தொகைக்கான 04 வகைகளிற்குரிய 1213 பொருள் விடயங்களின் கொள்வனவு நடவடிக்கைகள் நிலையத்தினால் இரத்துச் செய்யப்பட்டிருந்தன. 55 சங்கிலி கப்பிகளை கொள்வனவு செய்வதற்காக 2016 திசெம்பர் 22 ஆந் திகதி ரூபா 4,243,250 வரி நீங்கலான பெறுமதிக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்த போதிலும், 2017 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் கொள்வனவு செய்தல் இடம்பெற்றிருக்கவில்லை.

(ஈ) அக்குரண வெள்ள அபாய தடுப்புச் செயற்திட்டத்தின் மதிப்பீட்டினை தயாரிப்பதற்கு முன்னர் பேராதனை பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தினால் 2014 ஒக்தோபர் மாதத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த நிலத்தின் ஆய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த அடிப்படை விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்காமை காரணமாக நெடுஞ்சாலையின் குறுகலான இடங்களில் காணப்படுகின்ற அத்துமீறிய நிர்மாணங்களை அகற்றுவதற்காகவும் குறுகலான இடங்களை அகலப்படுத்துவதற்காகவும் எவ்வித தொகையும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. இச் செயற்திட்டத்தின் கீழ் 12700 கன மீற்றர் சேற்றினை அகற்றுவதற்காக ஒப்பந்ததாரரிற்கு ரூபா 18,122,900 செலுத்தப்பட்டிருந்ததுடன்,

அகற்றப்படுகின்ற சேற்றின் கனமீற்றரை சான்றுறுதிப்படுத்துதல் தற்காலிக அடிப்படையில் அமர்த்தப்பட்டிருந்த வேலைப் பரிசோதகரினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேற்படி செயற்திட்டத்தின் மூலம் 486.76 கனமீற்றர் சேறு அகற்றப்பட்டிருந்ததுடன், அதற்குரிய வேலைப் பெறுமதி ரூபா 694,606 ஆன போதிலும், குறித்த ஒப்பந்த தாரரிற்கு ரூபா 17,428,294 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. செயற்திட்ட உடன்படிக்கையின் படி, வேலைகள் பூரணப்படுத்தப்பட வேண்டிய திகதி 2015 நவம்பர் 14 ஆந் திகதியாகக் காணப்பட்ட போதிலும், 2016 பெப்ரவரி 29 ஆந் திகதி வரையிலும் வேலைகள் பூரணப்படுத்தப்படாதிருந்ததுடன், செயற்திட்டக் காலத்தினை நீடிப்பதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. செயற்திட்ட தாமத நாளொன்றிற்காக ரூபா 4,700 வீதம் தண்டப்பணம் அறவிடப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) பதுளை மாவட்டத்திலுள்ள கெஹல்எல்ல ஸ்ரீ ஆனந்தராமயவின் பாதுகாப்பிற்காக ரூபா 1,569,490 செலவில் நிர்மாணிக்கப்பட்ட கொங்கரீட் சுவரின் பின்புறத்தில் மண்ணை நிரப்புதல் உரிய விதத்தில் செப்பணிடப்படாதிருந்ததுடன் சுவரிற்கு மேற்புறத்தில் அமைந்துள்ள நிலப்பகுதியிலிருந்து வழிந்தோடுகின்ற நீர் சுவரின் பின்புறத்தில் நேரடியாக வந்துசேரும் ஆபத்து காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

4.8 பதவியணியினர் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

(அ) நிலையத்தின் பதவியணிக்கான அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 344 ஆக காணப்பட்டதுடன், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 17 பதவிகளில் 114 வெற்றிடங்கள் காணப்பட்டன. அந்த வெற்றிடங்களில் 15 பதவிகளிற்குரிய 62 வெற்றிடங்களை நிரப்புவதற்கான செய்திப்பத்திரிகை விளம்பரத்திற்காகவும் நேர்முகப் பரீட்சைக்காகவும் ரூபா 806,269 செலவிடப்பட்டிருந்த போதிலும், 2017 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அவற்றில் 09 பதவிகளிற்குரிய 46 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நிலையம் தவறியிருந்தது. அத்துடன், 04 சாரதி பதவிகள் மற்றும் 25 அலுவலக உதவியாளர் பதவிகளிற்காக பகிரங்க செய்திப்பத்திரிகை அறிவித்தல் வெளியிடப்படாது உள்வாரியாக விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்ததுடன் 04 சாரதி பதவிகள் தொடர்ந்தும் வெற்றிடமாகக் காணப்பட்டது.

(ஆ) தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 13.3 ஆம் பிரிவின் பிரகாரம் நிரந்தர நியமனமொன்று செய்யப்படும் வரை தற்காலிக தீர்வொன்றாகவே பதிற்கடமை நியமனமொன்று செய்யப்படுதல் வேண்டுமென்றும் முழுநேர உத்தியோகத்தர் ஒருவரின் சேவை தேவைப்படுமாயின் நிரந்தர நியமனமொன்றை தாமதிக்காது

மேற்கொள்தல் வேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதற்கு முரணாக 06 மாதங்கள் முதல் 35 மாதங்கள் வரையிலான காலவீச்சில் நிலையத்தின் 04 பிரதிப் பணிப்பாளர் பதவிகள் மற்றும் 01 உதவிப் பணிப்பாளர் பதவியில் பதிற்கடமை ஆற்றுவதற்காக நிலையத்தின் 05 உத்தியோகத்தர்களிற்கு ரூபா 658,558 பதிற்கடமை படி செலுத்தப்பட்டிருந்தது.

5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றுநிருபத்தின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க கூட்டுத்தாபனமும் அதற்குரிய வரைவு ஆண்டறிக்கைகள் மற்றும் கணக்குகளை நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களிற்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், நிலையத்தினால் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 01 ஆந் திகதியன்றே சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், திருத்திய நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு 2017 மே 09 ஆந் திகதி வரை காலதாமதம் செய்யப்பட்டிருந்தது.

5.2 கொள்வனவுத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த கொள்வனவுத் திட்டம் 2016 திசெம்பர் 27 ஆந் திகதி திருத்தப்பட்டிருந்தமையால் திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்டிருந்த குறிக்கோள்கள் அடையப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. திருத்திய திட்டத்தின் பிரகாரம் ரூபா 100.1 மில்லியன் மொத்த நிதி ஏற்பாட்டிலிருந்து ரூபா 25.3 மில்லியன் மீண்டுவரும் கொள்வனவுகளிற்காகவும் ரூபா 54.8 மில்லியன் அவசர நிலமைகளின் கொள்வனவு நடவடிக்கைகளிற்காகவும் எஞ்சிய ரூபா 20 மில்லியன் மூலதன உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காகவும் ஒதுக்கப்பட்டிருந்தது. இருப்பினும், ஒதுக்கப்பட்டிருந்த மூலதன நிதி ஏற்பாட்டிலிருந்து 98.93 சதவீதமான ரூபா 74 மில்லியன் தொகை 2016 திசெம்பர் மாதத்திலேயே திறைசேரியினால் விடுவிக்கப்பட்டிருந்தமை காரணமாக மீளாய்வாண்டிற்குரிய கொள்வனவுகளிற்காக மேற்படி நிதியினை உரிய விதத்தில் பயன்படுத்தவதற்கு நிலையத்திற்கு முடிந்திருக்கவில்லை.

5.3 செயல்நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 37 இடர் குறைப்பு செயற்திட்டங்கள் மற்றும் நிதி ஏற்பாட்டின் பெறுமதி ரூபா 511,853,709 எனக்

குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், செயன்முன்னேற்ற அறிக்கையின் படி செயற்திட்டங்களின் எண்ணிக்கை 157 எனவும் நிதி ஏற்பாட்டின் பெறுமதி ரூபா 713,849,427 எனவும் குறிப்பிடப்பட்டிருந்தன. வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தினை நடைமுறை நிலைமைக்கேற்ப அமுலாக்குகையில் ஒருசில திருத்தங்களை செய்யவேண்டி ஏற்பட்டிருந்ததாக நிலையத்தினால் இது தொடர்பில் அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தினை தயாரிக்கையிலும் அதிலுள்ள ஒவ்வொரு செயற்திட்டத்திற்கும் நிதி ஏற்பாடுகளை ஒதுக்குகையிலும் செயற்திட்டம் தொடர்பான சாத்தியவள ஆய்வினை மேற்கொண்டு செயற்திட்டத்தினை அமுல்படுத்தக்கூடிய இயலுமை மற்றும் அதன்மூலம் கிடைக்கக் கூடிய பிரதிபலன்கள் ஆராயப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்படாமை காரணமாக ரூபா 76,685,049 நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த 21 செயற்திட்டங்கள் பல்வேறுபட்ட காரணங்களாக அமுல்படுத்த முடியாது போயிருந்தன.

6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் காணப்பட்ட குறைபாடுகள் காலத்திற்குக் காலம் நிலைய பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள்	அவதானிப்புக்கள்
(அ) கணஞ்சியக் கட்டுப்பாடு	(i) அலுவலகத்தினால் பயன்படுத்தவதற்காகவும் விநியோகிப்பதற்காகவும் களஞ்சியத்தில் வைத்திருக்கப்பட்டுள்ள பொருட்கள் அனைத்தும் ஒரு பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்தமையால் பொருட்களை தனித்தனியாக இனங்காண முடியாதுள்ளமை.
	(ii) 2017 சனவரி 07 ஆந் திகதி இருப்புப் புத்தகங்கள் கணக்காய்வு செய்யப்பட்டு தீர்க்கப்பட்ட பின்னர் 23 பொருள் விடயங்களிற்குரிய 2016 ஆம் ஆண்டிற்கான பதிவுகள் உள்ளடக்கப்பட்டிருக்காமை.

(iii) 05 பொருள் வகைகளிற்குரிய 3,352 பொருள் விடயங்கள் களஞ்சியத்திற்கு பெறப்பட்ட திகதிகள் பொருள் பெறுவனவு பத்திரத்திற்கமைய 2016 திசெம்பர் 31 ஆந் திகதியாக காணப்பட்ட போதிலும், வேறுபட்ட திகதிகளில் இருப்புப் பதிவேட்டிற்கு உள்ளடக்கப்பட்டிருந்தமை.

(iv) 05 பொருள் வகைகளிற்குரிய 3313 பொருள் விடயங்கள் வழங்குனரால் வழங்குவதற்கு இணங்கப்பட்ட திகதிகளைக் காட்டிலும் 14 நாட்கள் முதல் 36 நாட்கள் வரை தாமதிக்கப்பட்டு வழங்கப்பட்டிருந்தமை.

(v) 03 மாவட்ட அலுவலகங்களிற்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள 03 வாகனங்கள் தொடர்பான விபரங்கள் பௌதீக பரிசோதனை அறிக்கைகளில் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமை

(ஆ) கணக்கீடு

(i) செலுத்தப்பட வேண்டிய வைப்புப் பணத்தினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காது தொடர்ந்தேற்சியாக கணக்குகளில் காண்பிக்கப்படுகின்றமை.

(ii) செலவினத்தை திருத்தமாக கணிப்பிட்டு கணக்கீடு செய்திருக்காமை.

(இ) சொத்துக்களை கையேற்றல்

நிலையத்தினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற 39 வாகனங்களில் 31 வாகனங்களின் உரித்தினை நிலையத்திற்கு கையேற்றிருக்காமை.

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

ஒப்பம்: எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

கணக்காளர் நாயகம்,

கண்காளர் நாயகம் திணைக்களம்,

306/72,

பொல்துவ வீதி,

பத்தரமுல்ல.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 2016 டிசம்பர் மாதம் 31ஆந் திகதி முடிவடைந்த வருடத்துக்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பான 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2) சி பிரிவுக்கமையக் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

மேற்கூறிய விடயம் தொடர்பாக உங்களது டிம்ஜி/எ/டிஎம்சி/01/16/13ஆம் சம இலக்கமும் 2017 நவம்பர் மாதமும் 14ஆந் திகதிய கடிதத்துடன் தொடர்புபடும். அது தொடர்பான விளக்கமளிப்புப் பின்வருமாறு.

2.2.1 இலங்கை அரச கணக்கீட்டுத் தர நிர்ணயம்

உடன்படுகின்றேன்.

LKAS 16 இன்படி பயன்பாட்டுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட திகதி தொடக்கம் தேய்மானத்தைக் கணக்கிய எதிர்வரும் காலங்களில் நடவடிக்கைகள் எடுக்கப்படும். 2013க்கு முந்திய ஆண்டுகளில் ICET கருத்திட்டத்தின் கீழ் கிடைத்திருந்த சில சொத்துக்கள் கணக்கில் பதியப்படாமல் இருந்ததுடன் அவற்றை 2013இல் கணக்கில் பதிய நடவடிக்கை எடுக்கப்பட்டது. எவ்வாறாயினும் அந்தச் சொத்துக்கள் நிலையத்துக்குக் கிடைத்திருந்த திகதிளைச் சரியான முறையில் பெற்றுக்கொள்ள முடியாமலிருந்தமையினால் சொத்துக்களுக்கான தேய்மானத்தைக் கணக்கிடல் மற்றும் பயன்படுத்தக் கூடிய ஆயுட்காலத்தைக் கணக்கிடல் என்பவற்றை உறுதியாக மேற்கொள்ள முடியாமல் போனதன் காரணமாக 2013 பெறுமானத் தேய்வு வித்தியாசமான முறையில் கணக்கிடப்பட்டது என்பதைத் தயவுடன் அறிவிக்கின்றேன்.

2.2.2. கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

அறவிடப்பட வேண்டிய பணத்தை நிலையத்துக்குப் பெற்றுக்கொள்வதற்காக உரிய நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளதாகத் தயவுடன் அறிவிப்பதுடன்

எதிர்வரும் நாட்களில் குறிப்பிடப்பட்ட அறவீட்டங்களை முடிவுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும்.

2.2.3 கணக்காய்வுக்கான சாட்சிகள் இன்மை

(அ) கருத்திட்டங்களின் முன்னேற்றம் மாதாந்த முன்னேற்ற அறிக்கைகள் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டு மாதாந்தம் இடைக்கால முகாமைத்துவக் குழுவுக்கும் அமைச்சுக்கும் அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காகப் பிரதான கோப்பொன்று பேணப்படும் என்பதுடன் கருத்திட்டங்களின் முன்னேற்றம் கருத்திட்டக் கோவைக்குள் உள்ளடக்கப்படவில்லை என்பதுடன் அந்தத் தகவல் முன்னேற்றம் தொடர்பான கோவையில் இணைக்கப்பட்டுள்ளது. அதேபோன்று வேலைகள் முடிவடைந்தமை தொடர்பான அறிக்கைகளைச் சமர்ப்பித்துப் பிரதேச செயலகங்களினால் தாமதப்படுத்தப்பட்டமையை ஏற்றுக்கொள்வதுடன் அந்த அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதை அறியத்தருகின்றேன்.

(ஆ) உடன்படுகின்றேன்.

இந்த பெக்கோ லோடர் அம்பாந்தோட்டை அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் மேற்பார்வையின் கீழ் அங்குறு கொல பெலஸ்ச பிரதேச செயலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த பெக்கோ வாகனம் 2012.08.15ஆந் திகதி லுணுகம்பொறை பிரதேச சபைக்குக் கையளிக்கப்பட்டதாகப் பிரதேச செயலகம் அறிவித்துள்ளது. இந்த வாகனம் தொடர்பாகத் தேடிப்பார்த்து எதிர்வரும் (2017) பண்ட ஆய்வின் போது பௌதிகக் கணக்கெடுப்பை மேற்கொண்டு அறிக்கை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(இ) அனர்த்த முகாமைத்துவ நிலையச் சகல வாகனங்களுக்காக அனர்த்த நிலையமானது ஆரம்பம் தொடக்கம் அரசாங்கத்துக்குரிய நிறுவனமான இலங்கைக் காப்புறுதித் தாபனத்திடமிருந்து காப்புறுதியைப் பெற்றுள்ளது.

நிலையத்தின் சகல வாகனங்களும் கூட்டுறவுக் காப்புறுதியின் கீழ் (Vehicle Fleet) இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் காப்புறுதி செய்யப்பட்டுள்ளது. இந்தக் காப்புறுதி வருடாவருடம் குறிப்பிட்ட திகதியில் புதுப்பிக்கும் அடிப்படையில் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திடமிருந்து இந்தச் சேவை பெறப்பட்டுள்ளது. இந்தக் கூட்டுக் காப்புறுதி பூர்த்தியடையும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் பெறுகைகளைக் கோரிக் குறிப்பிட்ட எண்ணிக்கைக்கு அமைய நடைமுறைப்படுத்துவது சாத்தியமற்றதாகும். எனினும், நிலையத்தினால்

மேற்கொள்ளப்பட வேண்டிய பெறுகைகளின் அளவினைக் கருத்திற் கொள்ளும்போது பெறுகைகளுக்கான பிரதான பிரிவொன்றைப் பொறுப்பு வாய்ந்த அதிகாரி ஒருவரின் தலைமையில் முன்னெடுக்கப்பட வேண்டியதன் தேவை பொிதும் உணரப்பட்டுள்ளதுடன் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காப்புறுதித் தவணைக்கான தொகையைக் கணிப்பிடுவது தொடர்பாக இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத் தாபனத்திடமிருந்து தகவல்களைப் பெற்றுக் கணக்காய்வுக்கு உட்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கின்றேன்.

(ஈ) **உடன்படவில்லை.**

தலைமை அலுவலகத்தின் பண்டங்கள் தொடர்பான பொருட் கணக்கெடுப்பு அறிக்கைகள் 2017/09/06ஆந் திகதி கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனினும், அவசர நிலைமை கருமமாற்றல் பிரிவு மற்றும் பிரதான அலுவலகத்தின் சில வாகனங்கள் தொடர்பான கணக்காய்வுப் பணிகள் முடிவடைந்து 2017 ஒக்டோபர் மாதம் 20ஆந் திகதி கணக்காய்வுப் பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

2.3 சட்டதிட்டங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் ஒழுகிச் செல்லாமை.

(அ) 2005ஆம் ஆண்டு 13ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவச் சட்டத்தின் 05வது பிரிவு.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் இடைக்கால முகாமைத்துவக் குழு 2012ஆம் ஆண்டு இறுதிக் காலப்பகுதியில் நிறுவப்பட்டதை அடுத்து ஒவ்வொரு மாதமும் இடைக்கால முகாமைத்துவக் குழு கூடிக் கூட்டத்தை நடத்துகின்றது. அதன்போது ஒவ்வொரு மாதமும் நிலையத்தின் முன்னேற்றம் மற்றும் அதனுடன் தொடர்பான அனைத்து விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்படுவதுடன் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான தீர்மானங்களும் எடுக்கப்படுகின்றன. எனவே, அனர்த்த முகாமைத்துவத் தேசிய சபையின் கூட்டம் அவசர அனர்த்த நிலைமைகளின் போதும் தேவைப்படும் போதும் இடம் பெறுகின்றது.

(ஆ) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை

(i) நிதிப் பிரமாணங்கள் 395 (ஈ)

உடன்படுகின்றேன்.

கணக்கீடு மற்றும் நிதி முகாமைத்துவத்தின் ஓர் முக்கிய உள்ளக நிர்வாகமாக வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் முக்கிய பொறுப்பாற்றுகின்றதுடன் ஒவ்வொரு மாதமும் கொடுக்கல் வாங்கல்கள் பதியப்பட்டு முடிவடைந்தவுடன் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்படும். எனினும், நிதிப் பிரிவின் கடமைப் பழு காரணமாகச் சில மாதங்களில் குறிப்பிட்ட திகதியில் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களைத் தயாரிக்க முடியாத நிலைமை ஏற்படுவது உண்டு.

2016 முதல் ஆறு மாதங்களுக்குரிய வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுக் கணக்காய்வாளர் அதிபதிக்குக் குறித்த காலகட்டத்தில் ஒப்படைக்கப்பட்ட போதிலும் தற்செயலாக 06 மாதங்களுக்குரிய வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களைக் கணக்காய்வாளர் அதிபதிக்குச் சமர்ப்பிப்பது தாமதடைந்திருப்பதுடன் எதிர்காத்தில் இத்தகைய தாமதங்கள் நிவர்த்தி செய்யப்பட்டுச் சகல மாதங்களிலும் 15ஆந் திகதிக்கு முன்னர் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களைத் தயார் செய்து கணக்காய்வாளர் நாயகத்துக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

2017 டிசம்பர் 07ஆந் திகதி ஆகும்போது 2017 ஒக்டோபர் மாதம் வரை வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களைத் தயார் செய்து கணக்காய்வாளர் அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(ii) நிதிப் பிரமாணங்கள் 104

மேற்கூறிய வாகன விபத்துக்களுடன் தொடர்புபட்ட ஆரம்ப அறிக்கையின் ஓர் பகுதி பூரணப்பட்டுத்தப்பட்டு நிதி அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் மீதிப் பணிகள் நிறைவடைந்து வருவதைத் தயவுகூர்ந்து அறிவிக்கின்றேன்.

(ஈ) அரசாங்கப் பெறுகைகள் கோரலுக்கான வழிகாட்டி

(i) 3.4.3 வழிகாட்டி

உடன்படுகின்றேன்

அவசர அனர்த்த நிலைமைகளின் போதான பதில் நடவடிக்கைகளுக்காகத் தேவைப்படும் பண்டங்கள் மற்றும் சேவைகள் என்பவற்றைக் கொள்வனவு

செய்வதற்கான பெறுகைகள் கோரல் மற்றும் நாளாந்த தேவைகளுக்கான கொள்வனவுகள் தொடர்பாக ரென்போ பேஜர்ஸில் பதிவு செய்யப்பட்டவர்களிடமிருந்து விலை மனுக்கள் கோரப்படுவதுடன் அல்லது பெறுகைகள் கோரலுக்கான வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கமையப் பத்திரிகைகளில் அறிவித்தல் மூலம் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. நிலையத்தில் தற்போது பெறுகைகள் கோரல் நடவடிக்கைகளுக்குப் பிரதான பிரிவொன்று இயங்காத போதிலும் கைவசம் உள்ள வளங்களைப் பயன்படுத்தி வழங்குனர்களின் வருடாந்தம் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தயவு கூர்ந்து அறிவித்துக் கொள்கின்றேன்.

(ii) 4.2.1 (ஆ) வழிகாட்டல்

உடன்படுகின்றேன்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளின் தன்மைகளுக்கமையப் பெறுகைகளுக்கு உட்படுத்தப்படும் பண்டங்கள் மற்றும் சேவைகள் தொடர்பாக 3 வருடங்கள் முன்கூட்டியே எதிர்வு கூற முடியாதுள்ளது. அவசர நிலைமைகளின் போது பதில் கடமையாற்றுவதற்காகக் கொள்வனவு செய்ய வேண்டிய பொருட்கள் சந்தர்ப்பத்துக்கு ஏற்ப அதேபோன்று அவற்றைப் பயன்படுத்தும் நிறுவனங்களின் கோரிக்கைகளுக்கு அமைய வருடாந்தம் கொள்வனவுகள் இடம் பெறுகின்றன. எனினும், எதிர்வரும் வருடங்களில் இந்த வழிகாட்டல்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தொிவித்துக்கொள்கின்றேன்.

(iii) **2014 ஜூலை மாதம் 04ஆந் திகதி பெறுகைகள் கோரல் கோரிக்கைக்கான மிகை இல.28**

<u>வாகன இலக்கம்</u>	<u>புதுப்பித்தல் செலவுகள் (ரூ.)</u>	<u>அனுமதி</u>
WPLF 1101	749,900	தலைமைக் கணக்கு வழங்கும் வழங்கும் உத்தியோகத்தரின் தலைமையில் 2015.12.02ஆந் திகதி நடைபெற்ற நிலையத்தின் இடைக்காலக் குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட நி.பி.135 க்கமைய அதிகாரங்களைக் கையளிப்பதற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட சபைப் பத்திரத்தின் அடிப்படையில்

		திணைக்களத்தின் பெறுகைகள் கோரல் சபையின் அனுமதி கிடைத்துள்ளது.
WPPB 7697	292,617	புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புப் பிரிவின் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள வாகனப் புதுப்பித்தலுக்காகக் குறிப்பிட்ட மாவட்டச் செயலாளர் மற்றும் மோட்டார் வாகனப் பரிசோதகரின் சிபாரிசின் அடிப்படையில் நிலையத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதி வழங்கப்பட்டது. எவ்வாறாயினும் வாகனம் புதுப்பித்தலுக்காக அனுப்பிவைக்கப்பட்டதன் பின்னர் இனங்காணப்பட்ட புதுப்பித்தல்கள் அடிப்படையில் விலைகள் அதிகரித்துள்ளன. இனிமேல் அவ்வாறான குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.
WPNA 7830	208,150	2016ஆம் ஆண்டுக்காக நி.பி.135இன் கீழ் அதிகாரங்களைக் கையளிக்கும் போது நிலையத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் கையளிக்கப்பட்ட 2,50,000 செலவு எல்லைக்குள் அனுமதி வழங்கப்பட்டது.
WPPB 9337	392,767	மேற்குறித்த வாகனம் தொடர்பாக இவ்வாறான கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறவில்லை.

3. நிதி மீளாய்வு

3.2 நிலையத்துக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட சட்ட நடவடிக்கைகள்

உடன்படுகின்றேன்.

இந்த வழக்குத் தொடர்பான தகவல்கள் எதிர்வரும் நிதி ஆண்டில் நிதிக் குறிப்புக்களில் உள்ளடக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

4. கருமமாற்றல் மீளாய்வு

4.1 செயலாற்றுகை

(அ) சட்ட மூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனர்த்தம் 21 தொடர்பாகச் செயற்படுவதற்காக நாட்டில் நிறுவனங்கள் பல ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் பல சட்ட மூலங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அதேபோன்று அனர்த்த முகாமைத்துவச் சட்டத்தின் இல.08 மூலம் அனர்த்த முகாமைத்துவ நிலையங்களை நிறுவுதல் 2(1) அ, ஆ,இ இல்விபரிக்கப்பட்டுள்ள போதிலும் சட்ட மூலத்தினால் இனங்காணப்பட்டுள்ள அனைத்து அனர்த்தங்களும் உள்ளடங்கும் வகையில் அந்த அனர்த்தங்களினால் ஏற்படக்கூடிய சேதங்கள் அவற்றின் அனர்த்தப் பாதிப்புக்கள் குறையும் வகையில் தேசிய அனர்த்த முகாமைத்துவத் திட்டத்தைத் தயாரித்தல், ஏற்படக்கூடிய அனர்த்த நிலைமைகளின்போது திடீர் பதில் நடவடிக்கைகளை மேற்கொள்ளல், தேசிய அனர்த்த முகாமைத்துவத் திட்டத்துக்கமைய அமைச்சுக்கள், திணைக்களங்கள், நிறுவனங்கள் என்பவற்றுக்கான அந்த நிறுவனங்களின் கடமைப் பொறுப்புக்களுக்கேற்ப நிலவும் அல்லது ஏற்படக்கூடிய அனர்த்தப் பாதிப்புக்களைக் குறைக்கும் வகையில் அந்த நிறுவனங்கள் தொடர்பான அனர்த்த முகாமைத்துவத் திட்டமொன்றைத் தயாரித்தல் மற்றும் வழிகாட்டல்களை வழங்குவதற்காக இவை ஏற்படுத்தப்பட்டன. சட்டமூலத்தின் இல.08 மற்றும் அதே சட்டமூலத்தின் 08(இ) இற்கமைய மிகவும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் யாதெனில், குறிப்பிட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையமானது குறிப்பிட்ட அனர்த்தங்களுக்குத் தயாராகுதல், அனர்த்த பாதிப்புக்களைக் குறைத்தல், நிவாரணங்களை வழங்குதல் மற்றும் புனர்வாழ்வு, புனரமைப்பு என்பவற்றுக்கமையச் செயற்படவேண்டும் என்பதாகும்.

அதேபோன்று சட்டமூலத்தின் 10வது ஏற்பாட்டுக்கமைய
ஏதேனுமோர் அமைச்சு, அரச திணைக்களம் அல்லது அரச கூட்டுத்தாபனமொன்று தொடர்பாக ஏதேனுமோர் அனர்த்தமொன்றை அல்லது ஏற்படக்கூடிய அனர்த்தமொன்றைத் தடுக்கும் பொருட்டு அனர்த்த முகாமைத்துவத் திட்டத்தின் அடிப்படையிலான மற்றும் சபையினால் விதித்துரைக்கக் கூடிய ஏதேனும் வழிகாட்டல்களுக்கமைய அனர்த்த முகாமைத்துவத் திட்டமொன்றைத் தயாரித்தல்

அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் கடமையாகும்.

அதன்படி,

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில்ன கடமைப் பெறுப்பு ஏனைய நிறுவனங்களை ஒருங்கிணைத்து அனர்த்த ஆபத்துக்களைக் குறைத்தலுக்காக ஒழுங்கமைப்பு ரீதியிலான ஒழுங்கமைப்பற்ற பணிகளை மேற்கொள்வதற்கான வசதிகளைச் செய்து கொடுத்தல்.

21 அனர்த்தங்கள் சட்டமூலத்தினால் இனங்காணப்பட்டிருந்தாலும் 1974 தொடக்கம் இதுவரை அனர்த்தப் பாதிப்புக்கள் தொடர்பாக இருக்கும் தரவுகள் கட்டமைப்புக்கு அமைய ஆகக் கூடிய சேதங்கள் வெள்ளப் பெருக்கு அனர்த்தத்தின் மூலமே ஏற்பட்டுள்ளது. இந்தக் கட்டமைப்பினைப் பகுப்பாய்வு செய்வதன் மூலம் இது புலனாகின்றது என்பதுடன் வரட்சி, மண்சரிவு என்பனவும் முறையே தனி நபர்களுக்குப் பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளுக்குப் பெருமளவு சேதங்களை ஏற்படுத்தியுள்ளது. ஒட்டுமொத்த நாட்டில் வருடாந்தம் சேதங்கள் மூலம் ஏற்படும் நட்டங்களுக்கு மதிப்பீடானது பல பில்லியன் ரூபாய் என்று மதிப்பீடுகளின் மூலம் அறியவந்துள்ளது. இந்த அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் பணியாற்ற அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்குக் கிடைக்கும் பணம் போதுமானதல்ல. எனினும், வருடாந்தம் இடம் பெறும் சேதங்களின் பெருமளவு வெள்ளப் பெருக்கினால் ஏற்படுவதனால் வெள்ளப் பெருக்குச் சேதங்களைக் குறைப்பதற்குக் கூடியளவு நிதியை ஒதுக்குதல் அடிப்படை ரீதியில் ஒரு முக்கியமான விடயமாகும்.

(ஆ) முன் ஆயத்தப் பிரிவின் முக்கிய கடமையாகத் தேசிய அனர்த்த முகாமைத்துவத் திட்டங்களைத் தீட்டுதல், தேசிய ரீதியான அவசரகாலத் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் மாவட்டப் பிரதேச, கிராமியத் திட்டங்களை வகுப்பதைக் குறிப்பிடலாம். 2005 தொடக்கம் இதுவரை தொடர்ச்சியாக அனர்த்த முகாமைத்துவத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுவருகின்றன. இந்தத் திட்டங்களைத் தீட்டுதல் பொதுத் திறைசேரியிடமிருந்து கிடைக்கும் நிதியின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது. முன் ஆயத்தப் பிரிவுக்குத் திறைசேரியிடமிருந்து கிடைத்த நிதி 2015இல் 12 மில்லியன் ரூபாயாகும் என்பதுடன் 2016இல் இது 12.5 மில்லியன் ரூபாயாகும் 2017இல் இது 19.8 மில்லியன் ரூபாயாகவும்

அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் கடமையாகும்.

அதன்படி,

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில்ன கடமைப் பெறுப்பு ஏனைய நிறுவனங்களை ஒருங்கிணைத்து அனர்த்த ஆபத்துக்களைக் குறைத்தலுக்காக ஒழுங்கமைப்பு ரீதியிலான ஒழுங்கமைப்பற்ற பணிகளை மேற்கொள்வதற்கான வசதிகளைச் செய்து கொடுத்தல்.

21 அனர்த்தங்கள் சட்டமூலத்தினால் இனங்காணப்பட்டிருந்தாலும் 1974 தொடக்கம் இதுவரை அனர்த்தப் பாதிப்புக்கள் தொடர்பாக இருக்கும் தரவுகள் கட்டமைப்புக்கு அமைய ஆகக் கூடிய சேதங்கள் வெள்ளப் பெருக்கு அனர்த்தத்தின் மூலமே ஏற்பட்டுள்ளது. இந்தக் கட்டமைப்பினைப் பகுப்பாய்வு செய்வதன் மூலம் இது புலனாகின்றது என்பதுடன் வரட்சி, மண்சரிவு என்பனவும் முறையே தனி நபர்களுக்குப் பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளுக்குப் பெருமளவு சேதங்களை ஏற்படுத்தியுள்ளது. ஒட்டுமொத்த நாட்டில் வருடாந்தம் சேதங்கள் மூலம் ஏற்படும் நட்டங்களுக்கு மதிப்பீடானது பல பில்லியன் ரூபாய் என்று மதிப்பீடுகளின் மூலம் அறியவந்துள்ளது. இந்த அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் பணியாற்ற அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்குக் கிடைக்கும் பணம் போதுமானதல்ல. எனினும், வருடாந்தம் இடம் பெறும் சேதங்களின் பெருமளவு வெள்ளப் பெருக்கினால் ஏற்படுவதனால் வெள்ளப் பெருக்குச் சேதங்களைக் குறைப்பதற்குக் கூடியளவு நிதியை ஒதுக்குதல் அடிப்படை ரீதியில் ஒரு முக்கியமான விடயமாகும்.

(ஆ) முன் ஆயத்தப் பிரிவின் முக்கிய கடமையாகத் தேசிய அனர்த்த முகாமைத்துவத் திட்டங்களைத் தீட்டுதல், தேசிய ரீதியான அவசரகாலத் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் மாவட்டப் பிரதேச, கிராமியத் திட்டங்களை வகுப்பதைக் குறிப்பிடலாம். 2005 தொடக்கம் இதுவரை தொடர்ச்சியாக அனர்த்த முகாமைத்துவத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுவருகின்றன. இந்தத் திட்டங்களைத் தீட்டுதல் பொதுத் திறைசோியிடமிருந்து கிடைக்கும் நிதியின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது. முன் ஆயத்தப் பிரிவுக்குத் திறைசோியிடமிருந்து கிடைத்த நிதி 2015இல் 12 மில்லியன் ரூபாயாகும் என்பதுடன் 2016இல் இது 12.5 மில்லியன் ரூபாயாகும் 2017இல் இது 19.8 மில்லியன் ரூபாயாகவும்

(ஈ)

- ஒவ்வொரு வேலைகளுக்கும் வெவ்வேறாகச் சாத்திய அறிக்கைகள் பெறப்பட்டுள்ளதுடன் ஒட்டுமொத்தத் திட்டத்துக்குச் சாத்திய மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டுக் கருத்திட்டத்துக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

- இந்தக் கருத்திட்டம் தொடர்பாகத் தாழ்நிலங்களை நிரப்புதல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம், நகர அபிவிருத்தி அதிகாரச் சபை, நீர்ப்பாசனத் திணைக்களம் என்பன மேற் கொண்ட ஆரம்ப மதிப்பீட்டின் பின்னர் மொத்தக் கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டுத் தேசியத் திட்டமிடல் திணைக்களதத்தின் அனுமதியுடன் பொதுத் திறைசேரி நிதி வழங்கியுள்ளதுடன் வருமான மதிப்பீடுகளுக்காக நில அளவை போன்ற பொறியியல் நடவடிக்கைகள் இடம் பெறுவதனால் விபரமான மதிப்பீடுகள் பகுதி பகுதியாக மேற்கொள்ளப்படுகின்றன.

- மாவட்டச் செயலகம் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களின் மேற்பார்வையில் இந்த நிர்மாணப் பணிகள் இடம்பெற்றுள்ளதுடன் இந்தப் பணிகளுக்கான செலுத்தல்களைச் செய்யும்போது மாவட்டச் செயலாளர், மாவட்டப் பொறியியலாளர் மற்றும் தொழில்நுட்பட நிறுவனங்களின் சிபாரிசுகளின் அடிப்படையிலேயே செலுத்தல்களை மேற்கொள்வார்கள். இதன்படி குறிப்பிட்ட செலுத்தல்களைச் செய்வதற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நிதி பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் விசேட தொழில்நுட்பப் பிரச்சினைகள் தொடர்பாக மாவட்டச் செயலாளரிடம் வினாவப்பட்டுள்ளது.

(ஒ)

- மதிப்பீடுகளைத் தயார் செய்தல் அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் மேற்கொள்ளப்படவில்லை. பிரதேச செயலாளர்களினால் அனுப்பிவைக்கப்படும் மதிப்பீடுகள் மாவட்டச் செயலாளர்களினால் சிபாரிசு செய்யப்பட்டு அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு அனுப்பிவைக்கப்படுகின்றது. இந்த விடயம் தொடர்பாகக் கவனம் செலுத்துமாறு மாவட்டச் செயலாளர் பிரதேச செயலாளர்களுக்கு அறிவிப்பார்.

- அநுராதபுரம் மாவட்டத்தில் மாஓயா துணைக் கால்வாய் ஊடாகப் பாலமொன்றை நிர்மாணிக்கும் கருத்திட்டத்தின் 2016.12.31ஆந் திகதி இறுதிக் கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளதுடன் கருத்திட்டத்துக்காக வழங்கப்பட்ட மொத்தப் பணமும் செலவிடப்பட்டுள்ளதனால் பணம் மீதியாகவில்லை. பண்டுலகம கருத்திட்டத்துக்கு இரண்டு தடவைகள் காசோலைகள் மூலம் பணம் வழங்கப்பட்டுள்ளதுடன் கருத்திட்டத்துக்கான செலவுகளைச் செய்ததன் பின்னர் மீதிப் பணமான 2,151,843.00 ரூபாய் பணத்தை அந்தச் சந்தர்ப்பத்தில் வழங்கக் கையிலிருக்கும் காசு போதுமானதாக இருக்காமையினால் தலைமைக் கணக்காளரினால் அந்தப் பணத்தை ஜனவரி மாதம் பெற்றுத் தருவதாக

அறிவித்திருந்தார். பின்னர் அந்தப் பணத்தில் மெதகம அளுத் வெவ கருத்திட்டத்தின் செலுத்தல்கள் 2016.12.31ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டதுடன் மீதிப்பணமான 984,579.12 ரூபாய் பணத்தை டிசம்பர் மாதத்தில் வழங்கக் கையிலிருக்கும் காசு போதுமானதாக இருக்காமையினால் 2017.02.17ஆந் திகதி நிலையத்துக்கு அனுப்பிவைக்க மாவட்டச் செயலகத்தின் கணக்காளர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

நிருவாகச் செலவுகளைக் கணிப்பிடும் போது ஒவ்வொரு நிறுவனங்கள் பல்வேறு விதிமுறைகளைப் பின்பற்றுவதை அவதானிக்க முடிந்தது. இதனால் திறைசேரியிடம் ஓர் ஒழுங்கு விதிமுறை தொடர்பாக ஆலோசனை கேட்கப்பட்டுள்ளது. எனினும் இதுவரை ஓர் உறுதியான பொது விதிமுறை தொடர்பாக ஆலோசனை கிடைக்கவில்லை என்பதுடன் இது தொடர்பாக ஒரு குறித்துரைக்கப்பட்ட விதி முறை இருப்பின் அது தொடர்பாக அறிவிக்குமாறு கணக்காய்வாளர் திணைக்களத்திடம் கேட்கப்படுகின்றது.

4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்.

(அ) அனர்த்த முகாமைத்துவத் திட்டத்தைத் திருத்தும் நடவடிக்கை அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் நடைமுறைப்படுத்தப்படுவதை அறிவிக்கின்றேன்.

(ஆ) கட்டிடத்தை அமைச்சுக்குப் பொறுப்பேற்பதற்கான நடவடிக்கைகள் அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதை அறியத்தருகின்றோம்.

(இ) இந்த மோட்டார் சைக்கிள் தொடர்பாகப் பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக அரச நிதித் திணைக்களத்திடம் ஆலோசனை கேட்கப்பட்டுள்ளது. அரச நிதித் திணைக்களத்தின் வழிகாட்டல்களுக்கு அமைய மீதி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு நிலையத்தின் இடைக்கால அனர்த்த முகாமைத்துவக் குழுவினால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

4.3 சொத்துக்கள் நிருவாகம்

(அ) இந்தத் தண்ணீர் பவுசரைக் கையளிப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

(ஆ) உடன்படுகின்றேன்.

பயன்படுத்த முடியாத பண்டங்கள் 47வது பொது மாதிரிப் படிவத்தில் உள்ளடக்கி நிதிப் பிரமாணங்களின்படி பண்டங்களைக் கணக்கெடுப்பதற்காக நியமிக்கப்படும் சபையின் சிபார்சு மற்றும் அனுமதிக்கமையத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

4.4 நிதி முகாமைத்துவம்

(அ) உடன்படுகின்றேன்.

நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்கள் மூலம் நிறுவனத்தின் உண்மையான நிலைமை வெளிவரும் வகையில் அந்த நிறுவனத்தின் வருடத்துக்குரிய கொடுக்கல் வாங்கல்கள் தவறவிடுதல் அல்லது கைவிடுதல் இல்லாமல் கணக்குகளில் பதிய எமக்குள்ள பொறுப்பினை நினைவில் வைத்துக்கொண்டு எடுக்கும் முயற்சியின் ஓர் கட்டமாகக் கணக்காண்டின் இறுதி ஓரிரு நாட்களுக்குள் கணக்கீட்டுக் கட்டமைப்பினை மூடாமல் திறந்துவைத்துக்கொண்டு ஏனைய கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. மற்றும் நிறுவனமானது 25 மாவட்ட அலுவலகங்களுடன் இயங்குவதுடன் இவை நாடளாவிய ரீதியில் வியாபித்துள்ளன. எனவே, வருட இறுதியில் கணக்குகளைத் தீர்த்து வைப்பதற்காக அந்த அலுவலகங்களின் கைக்காசு மீதிகளைத் தலைமை அலுவலகங்களுக்கு மாற்றுதல், கருத்திட்டங்களுக்கு வழங்கப்பட்ட பணத்தின் கணக்கு மீதிகளைத் தீர்த்து வைத்தல் என்பன கட்டாயம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன் அந்தத் தீர்த்து வைத்தல்களில் சில நேடியாக வங்கியில் இடப்படுவதனால் அந்தக் கணக்குகளை இனம் காண்பதற்காக டிசம்பர் மாதம் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களை வெளிப்படுத்தல் வேண்டும். எனவே, இந்த டிசம்பர் மாத இறுதியில் வெளியிடப்படும் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் மூலம் இனங்காணப்படும் கொடுக்கல் வாங்கல்களைக் குறிப்பிட்ட மாவட்டங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்து உறுதி செய்யப்பட்டதன் பின்னர் பதியப்படும்.

அதேபோன்று மாவட்டச் செயலகங்களில் சேவை வழங்குவதற்கான பற்றுச் சீட்டுக்களைத் தீர்த்துவைத்தல் (மின்சாரம், நீர், வரி, தொலைபேசி, வாடகை) மற்றும் மேலதிக நேரக் கொடுப்பனவுகள், பயணச் செலவுகள் போன்றவை டிசம்பர் மாதம் தவிர்ந்த ஏனைய மாதங்களுக்குச் செலுத்தலும் இறுதி மாதகாலப் பகுதிகளில் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தச் செலுத்தல்களைச் செய்வதற்காக மாவட்டச் செயலகங்களிலிருந்து குறிப்பிட்ட ஆவணங்களைத் துரிதமாகப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் அந்தப் பணிகளைப் பூரணப்படுத்துவதற்குக் கணக்காண்டு முடிவடைந்து மேலும் ஓரிரு நாட்கள் செல்கின்றது.

அதேபோன்று திறைசோியிடமிருந்து கிடைக்கும் நிதி ஒதுக்கங்களை மிகவும் செயற்திறனுடன் பயன்படுத்துவதற்கும் அவற்றின் பயனை அதிகரிப்பதற்கும் நிறுவனத்தின் முன்னேற்றத்தை மேம்படுத்திக் கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளும் நோக்கத்துடன் வருடத்தின் இறுதிச் சில நாட்களுக்குள் கருத்திட்டத்துக்காக விடுவிக்கப்பட்டது. (வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின்படி 49 மில்லியன் ரூபாய் பொதுத் திறைசோியினால் எமக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் அது டிசம்பர் 30ஆந் திகதியே விடுவிக்கப்பட்டது. இதனால் பற்றுச் சீட்டுக்களைத் தீர்த்து வைத்தல் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் இடம்பெற்றது.)

மேலும், நிறுவனத்தின் பெறுகைகள் கோரும் நடவடிக்கைகளில் ஏற்பட்ட தாமதம் காரணமாக வழங்குனர்கள் பண்டங்களை வழங்குவது வருட இறுதிவரை தாமதமடைந்ததினால் அவை தொடர்பான பணம் செலுத்தல் டிசம்பர் மாதம் இறுதிவரை தாமதடைந்தது. சில பொருட்கள் உண்மையாகவே 2017 ஜனவரி மாதத்துக்குள் கிடைத்த போதிலும் வருடத்துக்குரிய நிதி ஒதுக்கத்தைச் செயற்திறன் மிக்கதாக வருடந்தோறும் பயன்படுத்தும் நோக்கத்துடன் வழங்குனர்களுக்குப் பணம் செலுத்தல் 2016ஆம் ஆண்டுக்கான நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டது.

அதேபோன்று நிதிக் கூற்றுக்கள் மூலம் நிறுவனத்தின் தன்மையை நிஜமாகவும், நியாயமாகவும் வெளிப்படுத்தும் வகையில் குறிப்பிடத்தக்களவிலான தகவல்களைத் தவிர்த்தோ அல்லது பிழைகளின்றிச் சமர்ப்பிக்கும் நோக்கத்துடன் வருடத்தின் இறுதித் தினங்களுக்கான கொடுக்கல் வாங்கல்களைக் கணனியில் பதியும்போது கட்டமைப்புத் திறந்து வைக்கப்பட்டிருந்தது. கட்டமைப்பில் காணப்படும் பலவீனம் காரணமாக அவ்வாறு செய்யவில்லை என்பதுடன் கட்டமைப்பில் தகவல்கள் பூரணமாக இருக்காமையினாலும் சரியாகத் தன்மையை உறுதிப்படுத்தல் வேண்டும் என்பதனாலும் எடுக்கப்பட்ட நேர்மையான நடவடிக்கைகளினால் இந்த நிலைமை ஏற்பட்டது.

எவ்வாறாயினும் எதிர்வரும் நாட்களில் இறுதிக் கொடுக்கல் வாங்கல்களைக் கணக்குகளில் பதியும் செயற்பாட்டைத் துரிதப்படுத்துவதற்காக மாவட்டச் செயலகத்துக்கும் அறிவூட்டித் தேவையான மீதி அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்பதுடன் பெறுகைகள் கோரல் நடவடிக்கைகளை உரியவாறு தீர்த்து வைப்பதன் மூலம் வருட இறுதியில் அவை சம்பந்தமான கொடுக்கல் வாங்கல்களைப் பதியும்போது ஏற்படும் தாமதங்களைக் குறைத்து வருட இறுதியாகும்போது சகல கணக்குகளையும் பூர்த்தி செய்ய முடியும்.

(ஆ) இணங்க முடியாது.

மூலதனச் செலவுகளுக்காக 2016இல் 5,48,402,000/= ரூபாய் செலவிடப்பட்டது. அதன்படி மூலதனச் செலவு பயன்பாட்டு வீதம் 71% ஆகும். 2016இல் பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட சகல கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கான சகல பணமும் விடுவிக்கப்பட்டுச் செலவு செய்யப்பட்டுள்ளது. மேலும், இந்த நடவடிக்கைகளுக்காகக் குறிப்பிட்ட செலவு விடயங்களுக்காக முன்கொண்டு செல்லக் கூடிய பணமும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

(இ) இந்தப் பணத்துடன் தொடர்புபட்ட கருத்திட்டங்கள் தேசியக் கட்டிட ஆய்வு நிலையத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் அது தொடர்பான சகல பணிகளும் தற்போது பூர்த்தியடைந்துள்ளது. இறுதிப் பற்றுச் சீட்டுக்கள் நிலையத்துக்குக் கிடைத்தவுடன் குறிப்பிட்ட பணத்தைப் பயன்படுத்தித் தீர்த்துவைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(ஈ) 2015 மார்ச் மாதம் யப்பானின் செந்தாய் நகரில் உலக அனர்த்த ஆபத்துக்களைக் குறைக்கும் திட்டம் வெளியிடப்பட்டதுடன் அதன்போது நாட்டுக்கு ஏற்ற விதத்திலான அனர்த்தக் குறைப்புத் திட்டமொன்றைத் தயாரிப்பதற்கான யோசனை முன்வைக்கப்படவில்லை. பூகோள வடிவத்துக்கமைய அனர்த்தக் குறைப்புக்கான இலங்கைத் திட்டம் தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக UNDP நிறுவனத்தினால் 2015ஆம் ஆண்டின் இறுதித் தவணையில் 1,300,000.00 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளதுடன் அது பொதுக் கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளது. இது தொடர்பான அடிப்படைச் செயலமர்வுகள் பங்காளி நிறுவனங்களுடன் நடத்தப்பட்டள்ளதுடன் செயலாளர் அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளவாறு இலங்கை தொடர்பான அனர்த்த குறைப்புத் திட்டமொன்று அமைச்சினால் தயாரிக்கப்பட்டு வருவதனால் அந்தத் தேசியத் திட்டத்தை அனுமதித்து அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு வழங்கியதன் பின்னர் அனர்த்த முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்ட பணியை முன்னெடுக்கப் பணம் செலவழிக்கும்.

(உ) தாபனத்தின் அனர்த்த முகாமைத்துவத் திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்காக வழங்கப்பட்டிருந்த 1,500,000/= ரூபாய் பணத்தில் 396,000/= பணம் பயன்படுத்தப்பட்டு அந்தத் திட்டத்தின் வழிகாட்டி தயாரிக்கப்பட்டது. முதலாவதாகப் புத்தி ஜீவிகளின் கூட்டங்கள், அறிவூட்டல் மற்றும் அந்தக்

கூட்டங்களுக்காகத் தொிவு செய்யப்பட்ட அனர்த்த முகாமைத்துவ அமைச்சு, தொழில்நுட்ப நிறுவனங்களான தேசியக் கட்டிட ஆய்வுகள் அமைப்பு, வளிமண்டலவியல் திணைக்களம், தேசிய அனர்த்த நிறுவன நிலையம், வெளிவாரி நிறுவனங்களாகச் சுகாதார அமைச்சு, அணுசக்தி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, குடிவரவு குடியகல்வுத் திணைக்களம், இலங்கை பொலிஸ், இலங்கை மின்சார சபை என்பவற்றின் பூரண ஒத்துழைப்புடன் இந்தத் திட்டத்தைத் தயாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. அதன்பின்னர் வழங்கப்பட்ட வழிகாட்டலுக்கமைய அந்தந்த நிறுவனங்களினால் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அவை நடைமுறைப்படுத்தப்படும் விதம் தொடர்பான ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளவேண்டும்.

அதற்கேற்ப சுகாதார அமைச்சு, அணுசக்தி ஆணைக்குழு, இலங்கை மின்சார சபை என்பன திட்டங்களைத் தயாரித்துள்ளதுடன் ஏனைய நிறுவனங்கள் தமது திட்டங்களைத் தயாரித்தல் வேண்டும். தேசிய அனர்த்த முகாமைத்துவத் திட்டம் 2018 – 2030 செந்தாய் செயற்படு திட்டத்துக்கமையத் தயாரிக்கப்பட்டு வருவதுடன் அதன்படி இந்த வழிகாட்டல் தேசிய அனர்த்த முகாமைத்துவத் திட்டத்தினால் திருத்தப்படவேண்டும். தேசிய அனர்த்த முகாமைத்துவத் திட்டம் 2018 – 2030 வெளியிடப்பட்ட மறுகணமே அனர்த்த முகாமைத்துவத் திட்டமும் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட வேண்டும்.

4.5 செயலிழந்த குறைப் பயன்பாட்டுச் சொத்துக்கள்

இந்த ரேன்கோட்களில் பெரும்பாலானவை பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதுடன் மேலும் ஒரு தொகை அவசர தேவைகளின்போது பயன்படுத்துவதற்காக நிலையத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது. எதிர்வரும் நாட்களில் கொள்வனவு செய்யப்படும் அனைத்துப் பண்டங்களும் உரியவாறு விநியோகிக்கப்படும்.

4.6 பொருளாதாரப் பயனற்ற கொடுக்கல் வாங்கல்கள்

இணங்க முடியாது.

குறிப்பிட்ட காலத்தில் VAT வரி வீதத்தை ஒதுக்குதல் நிலையத்தின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டதோர் விடயமாகும். அரசினால் VAT வரி ஒதுக்குதல் 1/11/2017 நடைமுறையிலிருக்குமாறு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனினும் கொள்வனவுகளுக்காக கடிதங்கள் டிசம்பர் மாதமே வழங்கப்பட்டன. குறிப்பிட்ட கொள்வனவுக் கடிதங்கள் வெளியிடுவதற்கு முன்னர் வரி மாற்றங்கள் இடம் பெற்றுள்ளதனால் அந்த வரியை எமது நிறுவனம் பொறுப்பேற்றல் வேண்டும். அந்த வரிப்பணம் திறைசேரியிடமிருந்து கிடைக்கும். இதனால் அரசுக்கு நட்டம் ஏற்படமாட்டாது.

4.7 பெறுகைகள் கோரல் மற்றும் ஒப்பந்தச் செயற்பாடுகள்

(அ) (i மற்றும் ii) அனர்த்த குறைத்தல் திட்டம் தொடர்பான ஒப்பந்த நடவடிக்கைகளுக்காக அனர்த்த முகாமைத்துவ நிலையம் அல்லது அனர்த்த முகாமைத்துவ நிறுவனம் இதில் தலையிடாது என்பதுடன் அது மாவட்டச் செயலாளரின் மேற்பார்வையின் கீழ் மாவட்டச் செயலகத்தினால் முன்னெடுக்கப்படுகின்றது.

(ஆ) 2016 டிசம்பர் 16ஆந் திகதிக்கு முன்னர் எச்சரிக்கைக் கோபுரங்கள் புனரமைக்கப்பட்டு ஒப்பந்தத்தின் பிரகாரம் மூன்று மாதங்களுக்குள் பூர்த்தி செய்ய முடியாமல் போனாலும் அந்தக் கோபுரங்களுக்குச் சென்று அவற்றைப் பரிசீலிக்க நேரிட்டுள்ளமை மற்றும் அப்போது நிலவிய சீரற்ற கால நிலைத்தன்மை இதற்குக் காரணமாகும். அதேபோன்று செய்மதி உபகரணங்களுக்காகத் தேவைப்படும் தொலைத் தொடர்பாடல் உபகரணங்கள் அமெரிக்காவின் சிக்னல் கம்பெனி ஊடாகக் கொண்டுவரும்போது ஓர் குறிப்பிட்ட காலம் காத்திருப்புப் பட்டியலில் இருக்கவேண்டியேற்பட்டதுடன் அப்போது பயன்படுத்தப்பட்ட 201வது செய்மதித் தொழில்நுட்ப ரிசீவர் தற்போது தயாரிக்கப்படாமையினால் அதற்கு மாற்றீடாக உள்ள அதே செலவினைக் கொண்ட அபிவிருத்தி செய்யப்பட்ட 401 செய்மதித் தொழில்நுடட்ப ரிசீவரை பெற்றுக் கொள்ள ஓர் குறிப்பிட்ட காலவகாசம் எடுத்தமை இதற்குக் காரணம் ஆகும். இது சர்வதேச மட்டத்திலான விலை கோரல் என்பதனாலும் நிலையத்தின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட ஓர் விடயம் என்பதனாலும் அதற்காகவும் குறிப்பிட்ட காலவகாசம் எடுத்தது. 2017 ஜூன் 16ஆந் திகதியாகும்போது இந்தக் கோபுரங்களின் தொழில் நுட்பமற்ற புதுப்பித்தல் பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட போதிலும் அதற்காகத் தொழில்நுட்ப உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதிலும் தாமதம் ஏற்பட்டது.

அதேபோன்று கோபுரங்களின் புனரமைப்புப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் அதன் கருமம் மற்றும் அதன் செயற்பாடுகள் தொடர்பாக இராணுவத்தின் சமிக்ஞைகள் படையணிகள் உதவியுடன் ஒவ்வொரு கோபுரங்கள் தோறும் சென்று பரிசீலிக்கப்பட்டதனால் ஓர் குறிப்பிட்ட காலவகாசம் எடுத்து இந்த அனைத்து கோபுரங்களின் முன்னேற்றகரமான நிலைமை தொடர்பாக இடைக்கால முகாமைத்துவக் குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று இது தொடர்பாக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் உத்தியோகத்தர்களும்

வெளிக்களப் பணிகளில் கலந்து கொள்வதுடன் முன்னேற்றம் தொடர்பாகச் சகல தரப்பினரையும் சந்தித்துத் தகவல் அறிவிக்கப்பட்டுள்ளன.

(இ) 55 சங்கிலி உபகரணங்களைக் கொள்வனவு செய்து தொடர்பான பெறுகைகள் கோரல் நடவடிக்கைகளை 2017 மார்ச் மாதம் 23ஆந் திகதியாகும் போது அமுல்படுத்தப்படவில்லை என்ற கருத்துக்கு இணங்க முடியாது.

வெள்ளப்பெருக்கு, திடீர் அனர்த்தங்கள் தொடர்பாகப் பதில் நடவடிக்கைகள் எடுத்தல் சம்பந்தமாக 2016 செலவு விடயத்தின் கீழ் 55 சங்கிலி உபகரணங்களை வழங்குதல் மற்றும் கொண்டுவந்து ஒப்படைத்தல் தொடர்பாகப் பெறுகைகள் கோரல்களை மேற்கொள்ளும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன்படி விலைகள் கோரப்பட்டுத் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபாரிசுகளுக்கமையத் திணைக்களப் பெறுகைகள் கோரும் குழுவின் அனுமதியுடன் தொிவு செய்யப்பட்ட வழங்கல் நிறுவனத்துக்கு 2016.11.07ஆந் திகதி கோரல் கடிதம் வழங்கப்பட்டுள்ளது. அந்தக் கடிதம் தொடர்பாக அந்த நிறுவனம் வழங்கியுள்ள பதிலில் தமது நிறுவனத்தினால் விலைமனு சமர்ப்பிக்கப்பட்டுள்ள உபகரணங்களை இறக்குமதி செய்வதில் ஓர் பிரச்சினை ஏற்பட்டுள்ளதனால் அந்த விலைகளைச் சமர்ப்பித்த சைனா பிரான்ட் மற்றும் சைனா ஒரிஜினல் வகைக்குப் பதிலாக அதே விலையில் யப்பான் பிரான்ட், யப்பான் ஒரிஜினல் வகையிலான 55 சங்கிலிகளை அதே விலைக்கு வழங்க முடியுமெனத் தொிவித்துள்ளன. இந்தப் பண்டங்களுக்கான விலைகளைச் சமர்ப்பிக்கும் போது அதற்கான பொறுப்புக் கூறும் காலம் 06 மாதங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், நிலையத்தின் கிரயத்துக்கமைய எதிர்பார்க்கப்படும் பொறுப்புக் கூறும் காலம் 06 மாதங்களாகும். இது தொடர்பாகப் பெறுகைகள் கோரல் குழுவின் தலைவர் இந்த விடயம் தொடர்பாக வினவியபோது பொறுப்புக் கூறும் காலம் 06 மாதங்களாக இருப்பினும் 03 வருட காலத்துக்குப் புதுப்பித்தல்களைச் செய்து தருவதாகும். பொறுப்புக் கூறும் காலத்தைத் தாண்டும் மற்றும் 03 மாத காலத்துக்குள் மேலதிக உதிரிப்பாகங்களை இட நோிட்டால் அது தொடர்பாக அறவிடப்படும் எனத் தொிவித்துள்ளது. அதன்படி திணைக்களப் பெறுகைகள் கோரும் குழுவின் 2016.12.21 ஆந் திகதிய குழு அறிக்கையின்படி 2016.12.22ஆந் திகதி மீண்டும் கோரல் கடிதமொன்று அந்த நிறுவனத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டது. எனினும், 2016 டிசம்பர் 31ஆந் திகதி வரை அந்த நிறுவனத்தினால் குறிப்பிட்ட உபகரணங்களை வழங்க முடியவில்லை. இதனால் பெறுகைகளுக்கமைய நிலையத்துக்கு 55 சங்கிலி உபகரணங்களைக் கொள்வனவு செய்ய முடியவில்லை.

(ஈ) மேற்கூறிய கருத்திட்டம் பேராதனைப் பல்கலைக் கழகத்தினால் மேற்கொள்ளப்பட்ட சாத்திய அறிக்கையின்படி மேற்கொள்ளப்பட்டது. அந்தப் பணத்தின் மூலம் முதலில் ஆபத்தினை எதிர்நோக்கியுள்ள பில்கா ஓயா கால்வாய் இரு மருங்கிலும் நில அளவைத் திணைக்களத்தினால் அளவைப் பணிகளை மேற்கொண்டு எல்லைகள் இட்டு வரைப்படம் தயாரிக்கப்பட்டமையாகும். அதன்படி அந்தக் கால்வாய்ப் பகுதிக்குள் பாதுகாக்கப்பட வேண்டிய இடங்களில் சட்ட விரோதமாக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்கள் குறிக்கப்பட்டுள்ளன. 2015, 2016ஆம் ஆண்டுகளில் எத்தகைய வெள்ளப்பெருக்கும் ஏற்படவில்லை என்பதுடன் அதற்கான காரணம் கால்வாயில் நிரம்பியிருந்த சேற்று மண் அகற்றப்பட்டமையாகும். மதிப்பீட்டில் காட்டப்பட்ட அளவு சேற்று மண் அகற்றப்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டதுடன் சட்ட விரோத கட்டிடங்களை அகற்ற முடியாமை மற்றும் மணல்களைத் தேக்கி வைப்பதற்கான திட்டம் நடைமுறைக்கு வராமை, புதிய அனுமதியற்ற கட்டிடங்களினால் கால்வாய்ப் பகுதி தடைப்படுதல், அசுத்தமான மண் கால்வாயுடன் கலத்தல் போன்ற விடயங்கள் கருத்திட்டத்துக்குப் பெரும் தடையாக இருப்பதைக் குறிப்பிட வேண்டும். இது தொடர்பாகக் கண்டி மாவட்டச் செயலாளரினால் கருத்திட்டத்துக்குப் பொறுப்பான அனைத்து பங்காளி நிறுவனங்களுக்கும் எழுத்து மூலம் வாய்மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகச் சிபாரிசுகள் வழங்கப்பட்டிருந்தாலும் குறிப்பிட்ட நிறுவனங்கள் இதற்குப் போதுமானளவிலான ஒத்துழைப்பினை வழங்கவில்லை என மாவட்டச் செயலாளர் அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு அறிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தின்படி சேற்று மண் மாவட்டப் பொறியியலாளர்களின் ஆலோசனைக்கமைய அகற்றப்பட்டன. மாவட்டப் பொறியியலாளர்களினால் சேற்று மண் அப்புறப்படுத்தும் இயந்திர வாகனங்கள் தொடர்பாகப் பூரணமாகப் பரிசீலிக்கப்பட்டதுடன் அந்த விடயங்களைக் கருத்தில் கொண்டே இறுதிச் செலுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டதாக மாவட்டச் செயலாளர் அறிவித்துள்ளார்.

சீரற்ற காலநிலை மற்றும் கருத்திட்டப் பொறியியலாளர் ஓய்வில் சென்றமை காரணமாக இந்தத் திட்டம் சுமார் 05 மாதகாலம் வரை தாமதமடைந்ததுடன் கருத்திட்டத்தின் காலத்தை மேலும் நீடித்துக் கொள்வதற்குக் குறிப்பிட்ட கடிதக் கோவை ஊடாக உரிய கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக மாவட்டச் செயலாளர் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ) **இந்தக் கருத்திட்டத்தின் அனைத்துப் பொறியியல் பணிகளும் மாவட்டச் செயலகத்தினால் முன்னெடுக்கப்படுகின்றது. கருத்திட்டம் தொடர்பான கருமம் மாவட்டச் செயலாளரினால் சிபாரிசு செய்யப்பட்டதன் பின்னர் குறிப்பிட்ட செலுத்தல்களைச் செயவதற்காகத் தேவையான பணம் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.**

4.8 பதவியணி நிர்வாகம்

(அ) உடன்படுகின்றேன்.

பணிப்பாளர் (மனித வளம் மற்றும் நிர்வாகம்) – 01

இந்தப் பதவிக்காகச் சேர்த்துக் கொள்ள 2016.09.25ஆந் திகதி பகிரங்கப் பத்திரிகை அறிவித்தல் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டதுடன் அதன்போது 24 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. அந்த விண்ணப்பங்களின்படி இந்த நிலையத்துக்கு ஆட்சேர்ப்பு விதிமுறைக்கமையத் தகமையைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள் எவரும் இருக்காமையினால் நேர்முகப்பரீட்சை நடத்தப்படவில்லை. பின்னர் மீண்டும் பொது நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 09/2007இன்படி ஒப்பந்த அடிப்படையில் இலங்கை நிர்வாக சேவையின் 1ஆம் வகுப்பு இளைப்பாறிய உத்தியோகத்தர் ஒருவரைத் தொிவு செய்வதற்காக 2017.08.05ஆந் திகதி பகிரங்க விண்ணப்பங்கள் கோரப்பட்ட போதிலும் அதற்காக விண்ணப்பங்கள் எதுவும் கிடைக்கவில்லை. இந்தப் பதவிக்கு மீண்டும் விண்ணப்பங்களைக் கோரித் தகமையுள்ளவரைத் தேர்ந்தெடுப்பதற்கான அனுமதி கோரி மீண்டும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துக்குக் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர் (நிதி) -01

பணிப்பாளர் (நிதி) பதவிக்காக 2016.09.25 பகிரங்க அறிவித்தல் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டன. அதன்போது 12 விண்ணப்பங்கள் கிடைத்தவுடன் அந்த அனைத்து விண்ணப்பதாரிகளுக்காக 2017.03.22ஆந் திகதி இந்த நிலையத்தில் நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டதுடன் அதன்போது தகமையுள்ள விண்ணப்பதாரிகள் எவரும் தோற்றவில்லை. இந்தப் பதவிக்கு மீண்டும் பகிரங்க அறிவித்தல் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டதுடன் தகமையுள்ள ஒருவரைச் சேர்த்துக் கொள்வதற்கான அனுமதி கோரி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துக்குக் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

உதவிப் பணிப்பாளர் (தனித்தல்) - 01

உதவிப் பணிப்பாளர் தனித்தல் பதவிக்கு நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டதுடன் தகமையுள்ள ஒருவரைச் சேர்த்துக் கொள்ள முடியாமல் போனதால் இந்தப் பதவிக்கான ஆட்சேர்ப்பு முறையில் மாற்றங்களைச் செய்து அனுமதிக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் அதற்கு அனுமதி கிடைத்ததன் பின்னர் மீண்டும் 2017.10.19ஆந் திகதி பகிரங்க அறிவித்தல் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகப்பரீட்சை நடத்தப்பட உள்ளது.

உதவிப் பணிப்பாளர் (மாவட்டம்) - 01

இந்தப் பதவிக்காக 2017.08.04ஆந் திகதி நேர்முகப்பரீட்சையொன்று நடத்தப்பட்டதுடன் அதன்மூலம் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றுள்ளவர்கள் 2017.10.02 தொடக்கம் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அந்தரங்க உதவியாளர்- 01

அந்தரங்க உதவியாளர் பதவிக்கு 2016.09.25 பகிரங்கப் பத்திரிகை அறிவித்தல் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டதுடன் 2016.11.08ஆந் திகதி நேர்முகப்பரீட்சையும் நடத்தப்பட்டது. அந்த நேர்முகப்பரீட்சையில் தொிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் மூவருக்கு 2017.02.03ஆந் திகதி இரண்டாவது நேர்முகப்பரீட்சையும் நடத்தப்பட்டதுடன் அதன்போது தகமையுள்ள ஒருவரைத் தொிவு செய்ய முடியாமல் போனது. அதன்படி அந்தப் பதவி வெற்றிடத்தை நிறுவுவதற்காக நிலையம் எடுத்த முயற்சி வெற்றியளிக்கவில்லை என்பதுடன் அது தொடர்பாக மீண்டும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

முகாமைத்துவ உதவியாளர்கள்- 41

முகாமைத்துவ உதவியாளர்கள் 41 பேருக்கான நியமனக் கடிதங்கள் தற்போது வழங்கப்பட்டுள்ளன.

04 சாரதிகள் பதவிகள், 25 அலுவலகச் சிற்றூழியர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புத் தகமைகளுக்கு அமையப் பகிரங்க அறிவித்தல் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகப் பரீட்சையும் நடத்தப்பட்டுள்ளது.

சேவையின் தேவைக்கமைய 2017.09.28ஆந் திகதி தொடக்கம் 02 சாரதிகள் பதவிக்கு 2016.12.19ஆந் திகதி நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கமைய இடைக்கால முகாமைத்துவக் குழுவினால் வழங்கப்பட்ட அனுமதிக்கமையக் காத்திருப்புப் பட்டியலொன்று தயாரிக்கப்பட்டு அதன்படி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ)

இந்த நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் பதவி உள்ளகப் பதவி உயர்வு மூலம் நியமிக்கப்படும் ஓர் பதவியாகும் என்பதுடன் இதற்கு வெளிவாரியாக ஆட்சேர்ப்புச் செய்ய முடியாது. ஆட்சேர்ப்பு விதிமுறைக்கமைய நிரந்தர அடிப்படையில் நியமிப்பதற்குத் தகமையுடைய எவரும் நிலையத்தில் இல்லாமையினால் அதற்கான தகமையை உத்தியோகத்தர்கள் 2021 ஜூன் மாதம் 30ஆந் திகதியே பூர்த்தி செய்வார்கள் என்பதனால் நிரந்தர அடிப்படையில் நியமனம் செய்ய முடியாமல் உள்ளது. எனவே, இந்த நிலையத்தின் பணிகளைச் சிறப்பாக